


# திருக்கோளறு பதிகம்

சூ.யோ. பற்றிமாகரன்

# தாயகத் துயர் துடைப்புப் பணியில்
# கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் பங்களிப்புக்கள்



| | | |
|---|---|---|
| 1. | வணங்காமண் | £ 40000.00 |
| 2. | யாழ்பல்கலைக்கழக மாணவர் உயர்படிப்புச் செலவு | £ 29230.00 |
| 3. | வெண்புறா | £ 25000.00 |
| 4. | மன்னார் முதியோர் இல்லம் | £ 5000.00 |
| 5. | மட்டக்களப்பு,வவனியா ஆதரவற்ற சிறுவர் இல்லம் | £ 10500.00 |
| 6. | கணனிப்பயிற்சி நிலையம் சாவகச்சேரி யாழ்ப்பாணம் | £ 3540.00 |
| 7. | மாணவர் கல்வித்திட்டம் - வசதியற்ற மாணவர் உதவி | £ 5000.00 |
| 8. | சிவாச்சாரியார் குடும்பங்களுக்கான ஆதரவு | £ 1585.00 |

**கனகதுர்க்காவின் காக்கும் கரங்கள், அணைக்கும் கரங்கள், அறிவுச்சுடர் ஆதிய திட்டங்கள் மூலம் அடியார்களின் காணிக்கை தாயக உறவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை தாயக உறவுகளுக்கு வழங்கப்பட்ட உதவிகளின் மொத்தத் தொகை £ 1, 314, 883.00.**



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்




திருஞானசம்பந்த
சுவாமிகள் அருளிய

# திருக்கோளறு பதிகம்

(பொழிப்புரையும் விளக்கவுரையும்)

ஆக்கியோன்

சூ.யோ. பற்றிமாகரன் B.A, Special Diploma (Oxford), BSc, Diploma (Housing), M.A



இலண்டன்
ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலய வெளியீடு

விற்பனை உரிமை
காந்தளகம்

68, அண்ணா சாலை, சென்னை 600002, தொபே: 0091 44 28414505
மின்னம்பலம்: www.tamilnool.com, www.thevaaram.org, மின்னஞ்சல்: tamilnool@tamilnool.com
2010

# நூல் விபரப் பட்டியல்

நூலின் பெயர் : திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய திருக்கோளறு பதிகம் (விளக்கமும் உரையும்)

Title : Thiru Ganasampantha Swvamikal arulia Thirukolaru Pathigam (Prose and Explanation)

மொழி : தமிழ்

Language : Tamil

ஆக்கியோன் : சூ. யோ. பற்றிமாகரன் B.A, Special Diploma (Oxford), BSc, Diploma (Housing), M.A

©Author : S.J. Fatimaharan B.A, Special Diploma (Oxford), BSc, Diploma (Housing), M.A

1வது பதிப்பு ஆண்டு : மாசி 2010

1st Edition : February 2010

வெளியீடு : ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் 5 சப்பில் வீதி இலண்டன் W13 9AE

Published by : **Shri Kanaga Thurkkai Amman Temple** 5 Chapel Road London W13 9AE

அதபுஎ: ISBN : 978-81-89708-26-9


அச்சகம் : **காந்தளகம், 68, அண்ணா சாலை, சென்னை 600002,**
**தொபே**: 0091 44 28414505,

**மின்னம்பலம்: www.tamilnool.com, www.thevaaram.org**


**மின்னஞ்சல்: tamilnool@tamilnool.com**

Printers : Kaanthalakam, 68, Anna Saalai, Chennai 600002, India.

# உள்ளே




1. அணிந்துரை – கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை.
2. முன்னுரை.
3. திருக்கோளறு பதிகம் ஆசிரியர்களுக்கான சில விளக்கங்கள்.
4. திருக்கோளறு பதிகம் 1
5. திருக்கோளறு பதிகம் 2
6. திருக்கோளறு பதிகம் 3
7. திருக்கோளறு பதிகம் 4
8. திருக்கோளறு பதிகம் 5
9. திருக்கோளறு பதிகம் 6
10. திருக்கோளறு பதிகம் 7
11. திருக்கோளறு பதிகம் 8
12. திருக்கோளறு பதிகம் 9
13. திருக்கோளறு பதிகம் 10
14. திருக்கோளறு பதிகம் 11
15. நிறைவுரை

உ
சிவமயம்




# திருக்கோளறு பதிகம்

## கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் அணிந்துரை

"மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற வள்ளுவர் தந்த தமிழ் மறைக்கேற்ப, திருக்கோளறு பதிகத்தின் மெய்ப்பொருளை யாவரும் அறிந்து பயன்பெறும் வகையில் இந்நூலை ஆசிரியர் பற்றிமாகரன் அவர்கள் யாத்துள்ளமை போற்றுதலுக்குரியது.

இங்கு திருக்கோளறு பதிகத்தைத் தனது ஞானத் தமிழிற் தந்த ஞானத்தின் திருவுருவான ஞானசம்பந்தப் பெருமானின் பதிஞானத்தின் பக்குவத்தையும், இப்பதிகம் எழுதுவதற்குத் திருவுள்ளம் கொண்ட இடமான திருமறைக்காட்டின் திவ்ய வரலாற்றுப் பெருமையையும், திருக்கோளறு பதிகத்தின் நுண்பொருளையும் 'திட்பநுட்பமாக ஆசிரியர்' விளக்கியுள்ளார். அத்துடன் இவ்விளக்கங்களை வரலாற்று நோக்கில் புராண, சாத்திர, தோத்திரச் சான்றுகளுடன் தந்திருக்கும் சிறப்பும் நோக்கத்தக்கது.

சைவசித்தாந்தச் செந்நெறியின் தளத்தில் நின்று, தூய செந்தமிழ் நடையில், மரபுநெறி வழுவாது, படிப்பவர் உள்ளத்தில் பசுமரத்தாணி போலப் பதியத்தக்கதாகச் சொல்லியுள்ளமை வரவேற்கத் தக்கது.

திருமுறைகளுக்குப் பொருள் சொல்லக்கூடாது என்ற ஒரு கூற்றும் உள்ளது. பதிஞானம் வாய்க்கப்பெற்ற அருளாளர்கள் பதிவாக்காக அருளிச்செய்த திருமுறைகளின் பொருளை பாசஞானத்தில் மயங்கி நிற்கும் சாமானியர், நூலறிவின் துணை கொண்டு காண முடியுமா என்பது சிந்திக்கத் தக்கது.

அதே வேளை "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வச் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்" என்னும் மணிவாசகர் வாக்கும் சிந்திக்கத்தக்கது.

அப்படியாயின் சொல்லிய பாட்டின் பொருளுணர வழி என்ன எனில், நான் எனது என்னும் தன்முனைப்பற்று என்செயலாவதியாதொன்றும் இல்லை எல்லாம் அவன் செயலே என்னும் உணர்வுடன் அவனருளாலே அவன்தாள் நினைய வல்லார் பொருளுணரவல்லார் என்பது சான்றோர் கண்ட வழியாகும்.

அவ்விதம் திருமுறைகளுக்குப் பொருள்விளக்கம் கூறப்புகும்போது அது சாத்திரம், தோத்திரம், புராணம் ஆகிய மூன்று நெறிகளுக்கும் முரண்படாது ஒத்தியலும் வகையில்

அமைய வேண்டும் என்பது சான்றோர் கட்டளையாகும். இந்நூல் இக்கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்யப்பட்டுள்ளமை மகிழ்தற்குரியது.

இந்நூலாசிரியரின் தன்னடக்கத்துடன் கூடிய கூற்று இதற்குச் சான்றாகும். "தூண்டியவன் அவன். நான் வெறும் கருவியே, இதனை எழுதுவது நானல்ல அவனே என்ற உணர்வே இந்நூலை எழுத வைத்தது" எனக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இவர் தன்முனைப்பற்றுப் பொருளறியும் தகுதிப்பாடுடையவர் என்பதை இது உணர்த்தும். பின்னால் அவரால் கண்டு காட்டப்படும் பொருட்சிறப்பு இதனை மெய்ப்பிக்கக் காணலாம்.

ஆசிரியர் சைவசித்தாந்த அடித்தளத்தில் தளம்பாது நின்று பொருள் காணும் திறத்தை முன்னுரையில் காணமுடிகிறது. உ+ம்

- ஒன்றாயும் உடனாயும் வேறாயும் இருப்பவன் இறைவன்.
- அவன் தோன்றாத் துணைவன்.
- உள்ளதே தோன்றும் தோன்றியது அழியாது.
- விதி என்பது, என்றுமுள்ள அழிவற்ற ஆன்மா, தன் செயலால் தன்னில்தான் பதித்துக் கொண்ட வினைப்போகமே.
- இறைவன் ஆன்மாவை அதன்பிறவிச் சுழற்சியிலிருந்து விடுவிக்கக்கொண்ட திருவருட் செயலே ஐந்தொழில்.
- நன்மையும் தீமையும் தன்னை அனுபவப்படுத்துவதற்கான அனுபவமே இருவினை ஒப்பு.
- நான் எனது என்னும் அகங்கார மமகார முனைப்பு அடங்கிய ஆன்மாவில் திருவருட்சக்தி பதிதலே சத்திநிபாதம்.
- திரோதான சக்தியே திருவருட்சக்தியாகி இறைவனுடன் பக்குவ ஆன்மாவைத் தாள் தலையாக ஒன்றிக்கவைக்கும்.
- இயற்கையை மாற்றுவது இறைவனின் ஆற்றல். காலனைக் காலால் உதைத்த செய்தி இதையே உணர்த்தும்.
- திருவருள் குரவராக வந்து அருளுகையில்தான் ஆன்மா ஆணவ ஒடுக்கம் பெறும்.
- நாளும் கோளும் கடவுளின் அருள்வழி நல்லனவே செய்யும்.
- இறைவன் நன்மை தீமைகளுக்குப் பொறுப்பானவனல்ல. உயிர்களே தம் வினைவழி அவற்றை விளைக்கின்றன.
- அறத்தின் வழி வாழ்வு அமைகிறபோது உயிர் இறைவனுடன் தொடர்புறுகிறது.
- அறமே உயிரை இறைவனுடன் இணைக்கும் வாகனம். விடைமீது சிவசக்தி எழுந்தருளல் இதையே உணர்த்தும்.

என்பன போன்ற சைவசித்தாந்தக் கோட்பாடுகளை முன்வைத்து இப்பதிகத்துக்கு பொருள் காண முன்வந்திருப்பது ஆரோக்கியமான தெளிவான அணுகுமுறையாகும்.

ஆசிரியரின் கூற்றாகிய "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம் என்பதே பதிகத்தின் நோக்கு, அதையுணர்த்துவதே இந்நூலின் இலக்கு" என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இவ்வகையில் விரிந்து செல்லும் ஆசிரியரது முன்னுரையின் திறமே இவர் தகுதிப்பாட்டைப் புடம் போட்டுக் காட்டுவதைக் காணலாம்.

ஒவ்வொரு கருத்தும் சிறுசிறு தலைப்புக்களில் தரப்பட்டிருப்பதும் கற்போர் உள்ளத்தில் இலகுவாகப் பதியவைப்பதற்கேற்ற சிறந்த கற்பித்தல் உத்தியாகும். முன்னுரையைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கான விளக்கம் என்னும் தலைப்பில் தரப்படும் தகவல்கள் மிகப்பெறுமதி மிக்கனவாகும்.

அப்பரும் சம்பந்தரும் வேதங்களாற் பூட்டப்பட்ட திருமறைக்காட்டுத் திருத்தலக் கதவைத் திறக்கவும் அடைக்கவும் தெய்வீகத் திருமுறைப்பாடல்கள் பாடி அற்புதம் நிகழ்த்தி அங்கிருந்த காலத்தில் சமணரின் கொட்டம் அடக்க மதுரைக்கு வருமாறு மங்கையர்க்கரசியாரின் அழைப்பு வந்ததும், நாளும் கோளும் நன்றாயில்லை என அப்பர் பெருமான் தடுக்க நாளும் கோளும் சிவனடியார்க்கு நல்லனவே செய்யும் என ஆணையிட்டுச் சம்பந்தப் பெருமானார் திருக்கோளறு பதிகம் பாடுகிறார்.

இந்த வரலாற்றை அடித்தளமாகவைத்து ஆசிரியர் திருமறைக்காட்டின் தெய்வீக வரலாற்றையும், ஞானசம்பந்தரின் ஞானத்தமிழின் மாட்சியையும் காட்டும் திறம் பின்வருமாறு அமைவது வரவேற்கத்தக்கதே.

திருக்கோளறு பதிகம் பொதுப்பதிகமாக வைக்கப்பட்டிருப்பினும் அப்பதிகம் எழத்திருவுள்ளம் கொண்ட தலமாதலால் திருமறைக்காட்டின் அருள்வளத்தையும் இயற்கை வனப்பையும் தருகின்றார். அதில்,

- அகத்தியர் தென்னாட்டுக்கு வந்தமை
- சிவராத்திரியில் இத்தலத்தில் விளக்குத் திரியைத் தூண்டிய எலி மகாபலிச் சக்கரவர்த்தியாக வந்து பிறந்த மாண்பு
- இராவணவதத்தால் வந்த பிரமஹத்தி தோசம் நீங்க இராமர் சிவலிங்கப் பிரதிட்சைசெய்து சிவபூசை செய்த வரலாறு.
- சுந்தரரும் சேரமான் பெருமாளும் சேர்ந்துவந்து தரிசித்துப் பாடிய பதிகச்சிறப்பும் செழுமையும்
- பரஞ்சோதி முனிவரும், தாயுமானவரும் அவதாரம் செய்த மகிமை
- சப்தவிடத்தலங்கள் ஏழில் இது புவனவிடங்கர் ஹம்சபாட நடம்புரிந்த தலமாதற்சிறப்பு.
- யாழ்ப்பாணத்தார்க்கும் திருமறைக்காட்டுக்கும் உள்ள வரலாற்றுத் தொடர்பு
- நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் மறைசையந்தாதி பாடிய மகிமை

முதலான செய்திகளையெல்லாம் புராண, இதிகாச வரலாற்றுச் சான்றுகளுடன் சிவத்தமிழில் செவ்விய நடையில் தந்திருக்கின்றார்.

திருக்கோளறுபதிக ஆசிரியர் ஞானசம்பந்தரின் திருவருட்செயல்களைச் சொல்லும்போது

- சம்பந்தர் காலம் பற்றிய கணிப்பு நுட்பம்
- சம்பந்தர் பாடிய பதிகத்தொகைகள் வரலாற்று ஆய்வுமுறையில் தரப்படுதல்
- சம்பந்தர் காலத்தும் முன்னும் பின்னும் வாழ்ந்த நாயன்மார் தகவல்கள்
- சம்பந்தர் பெருமான் ஆணையிட்டுப் பாடிய நான்கு பதிகங்களின் சிறப்பு
  "தாயின் ஊராகிய திருநனிப்பள்ளிப் பதிகத்தில் "வினை கெடுதல் ஆணை நமதே"என்றும்
  "திருஞானசம்பந்தரின் "பேயடையா....."எனும் தேவார மகிமையால் பிறந்து 'சிவஞானபோதம்' எனும் மெய்கண்டசாத்திரத்தைத் தந்த மெய்கண்டார் பிறந்த திருவெண்காட்டுப் பதிகத்தில் "அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே" என்றும்
  "தான் பிறந்த திருத்தலத்தில் பாடிய திருக்கழுமலப் பதிகத்தில் "வான்மிசை வாழ்வார் மண்மிசைப் பிறவார் ஆணை நமதே" என்றும்
  "திருக்கோளறு பதிகத்தில் "வானாள்வார் ஆணை நமதே" என்றும், இந்நான்கு திருக்கடைக்காப்புப் பதிகங்கள் மூலம் அவ்வவ் பதிகளின் தெய்வீக மாண்பை மனங்கொள்ள வைக்கின்றார்.
  ஏனைய மூன்று பதிகங்களிலும் "வினைகெடுதல்" "அருவினை அறுதல்"

"மண்மிசைப் பிறவார்" என ஆணையிட்டவர் திருக்கோளறு பதிகத்தில் "வானாள்வார்" என ஆணையிட்டு, வான்வழி வலம்வந்து மனிதவாழ்வை நடாத்தும் நாளும் கோளும் கூட சிவனடியார்களால் ஆளப்படும் என இப்பதிகத்தின் தனிச்சிறப்பைச் சுட்டிக்காட்டல் மிகநுண் கருத்துடன் கூடிய தாயுள்ளது.

- தேவாரம் என்ற சொல்லாராய்ச்சி, தேவார வைப்புத் தலங்களும் பாடல்பெற்ற தலங்களும் பற்றிய விளக்கம்
- திருநாகேச்சுரப்பதிகத்திலும் "கோளும் நாளும் தீயவேனும் அடியார்க்கு நன்றாம்" எனப்பாடிய செய்தியும்
- சம்பந்தர் ஞானப்பாலுண்டு முதற்பாட்டில் "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் தேவாரத்தில் ஐந்தொழிலுணர்த்தும் ஞானப்பொருள்நுட்பம்
- தத்துவ எண்ணிக்கையில் எழுத்தமைய இப்பாடல் தந்த திறன்
- பிராமணரான சம்பந்தர் வேளாளரான திருநாவுக்கரசரை அப்பரே! என அழைத்துச் சாதியத்தில் சமரசம் கண்ட கூற்று, வித்தாகி முளை கொண்டு சுந்தரரின் திருத்தொண்டர்த் தொகையாகி சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமாகி விரிந்து வளர்ந்த வரலாறு

இவை எல்லாம் இங்கு நுண்மாண் நுழைபுலத்துடன் காட்டப்படும் விதம் போற்றுதலுக்குரியது.

மேலும் திருக்கோளறு பதிகப் பொருள் விளக்கம் கூறுமிடத்து இப்பதிகத்தில் உள்ள ஒவ்வொரு பாடலுக்கும் பொழிப்பும் விளக்கவுரையும், சிவபுராணங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் துணையாக தரப்பட்டிருத்தல் படிக்கும்போது மனநிறைவைத் தருகிறது.

முதற்பந்தியில் ஒவ்வொரு பாடலிலும் சொல்லப்பட்ட செய்திகளைச் சுருக்கமாகத் தந்து பின் தனித்தனியாக விபரித்துக் கூறும் முறை நன்றாய் அமைந்துள்ளது.

யாருக்கு நாளும் கோளும் நல்லனவே செய்யும் என்னும் வினாவை எழுப்பி, ஒவ்வொரு பாடலிலும் சம்பந்தப் பெருமான் "தம் உளமே புகுந்த அதனால் அடியார் அவர்க்கு நல்ல நல்ல" என்று அழுத்திக் கூறும் முறையை விளக்குகின்றார். அத்துடன் நில்லாமல் அடியார் எனப்படுபவர் யார்? எனும் வினாவை எழுப்பி "சிவபெருமானுடைய திருவடிகளைத் தம் உள்ளத்தில் வைத்து எந்நேரமும் துதிப்போரே அடியார்கள். அவர்கள் உள்ளத்தில் சிவன் உறைவதால் அவர்க்கு நாளும் கோளும் சிவன் ஆணைக்குட்பட்டு நல்லனவே செய்யும்" என்னும் உயிரான நுண் கருத்தை விளக்குகின்றார்.

இதற்குக் கந்தரலங்காரத்தில் "நாளென் செயும் வினைதான் என் செயும்...." எனும் பாடலைத் தந்து குமரேசன் இரு தாளும் ..... தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே நாளென்செயும் வினைதான் என் செயும் எனப் பொருத்திக்காட்டும் செயல் உவப்பானதாகும்.

ஆகவே "சிவபெருமானைத் தம் உள்ளத்தில் நிலையாக வைத்து வணங்கும் அடியார்க்கே நாளும் கோளும் நன்மை செய்யும். ஆதலால் "நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் நினை என்றும் சிவன் தாளினை" என ஆற்றுப்படுத்தும் முறை ஆசிரியரின் சிந்தித்துத் தெளிதலின் சிறப்பைக் காட்டுகிறது.

ஞானப் பாலுண்டு திருத்தோணிபுரத்தில் தான் கண்ட அம்மையப்பரின் அருட்கோலப் பொலிவை இப்பதிகத்தில் ஞானசம்பந்தர் படம்பிடித்துக் காட்டியுள்ளமையை ஆசிரியர் தன் அறிவுத் திறனால் புடம்போட்டுக் காட்டுகின்றார்.

தடத்தமாகச் சிவசக்தியாகக் காட்சியளித்த இறைவனின் அருட்கோலத்தில் கண்டு பாடிக்காட்டிய ஒவ்வொரு அம்சத்தையும், அணிகலன்களையும், அருட்கோலத்தையும் (உ+ம் பிறை, சடை, கங்கை, நீலகண்டம், நீறு, என்புமாலை முதலாகச் சொல்லப்பட்ட அத்தனைக்கும் ஆசிரியர் சைவசித்தாந்த அடிப்படையில் புராண, இதிகாச, திருமுறைச் சான்றுகளுடன் விரிவான நுட்பமான விளக்கம் தருவது மெச்சத்தக்கது. ஒருமுகமாகக் கண்டறிதற்கரியது.


முதலாம் பாடலில் நவக்கிரக விளக்கமும், இரண்டாம் பாடலில் நட்சத்திர விளக்கமும், மூன்றாம் பாடலில் 'அட்டதிக்குப்பாலகர்' விளக்கமும், நாலாம் பாடலில் யமதூதர் விளக்கமும், ஐந்தாம் பாடலில் இயற்கைகளால் வரும் அழிவுகள் பற்றிய விளக்கமும், ஆறாம் பாடலில் கொடிய விலங்குகளால் வரும் தீமைகள் பற்றிய விளக்கமும், ஏழாம் பாடலில் கொடுநோய்களால் வரும் துன்ப விளக்கமும், எட்டாம் பாடலில் கோள்களைச் சிறையிட்ட இராவணன் கோள்களால் அழிந்த விளக்கமும், ஒன்பதாம் பாடலில் பிரம விட்டுணுக்கள் காலதத்துவம் பற்றிய விளக்கமும், பத்தாம் பாடலில் சமணபுத்தர் இழிநிலை விளக்கமும், பதினொராம் பாடலில் பதிகப்பயனாகிய "சொன்மாலை ஓதும் அடியவர்கள் வானில் அரசாள்வர் எனத் தான் அவனாகி நின்று இட்ட ஆணையும், விரிவாக, விளக்கமாக, நுட்பமாகச் சொல்லப்பட்டிருக்கும் இந்நூல் கிடைத்தற்கரிய பெருமையுடைத்து.

சுருக்கமாகச் சொன்னால், இந்நூல் ஒரு சிவத்தமிழ்க் கருத்துக்களஞ்சியம் எனலாம். செவ்விய மொழிநடையும் ஆற்றொழுக்குப் போன்ற' வசன அமைப்பும், பொருட்தெளிவும், கருத்துக்களின் வைப்புமுறையும் மிகச்சிறப்பாக அமைந்த நூல் இது. இதனைத்தாக்கார் பயன் கொண்டு உயர்வார்களாக.

ஆசிரியர் பற்றிமாகரனின் நுண்மாண் நுழைபுலமும், திட்பநுட்பமாகச் சொல்லும் திறமும், சித்தாந்தத் தெளிவும் போற்றுதலுக்குரியன.

கலாபூஷணம், சைவப்புலவர்

சு. செல்லத்துரை
(ஓய்வு நிலை அதிபர் S.L.P.S.1)
இளவாலை
11.12.2009






# முன்னுரை

## கடவுளே துணை

திருக்கோளறு பதிகம் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த இன்தமிழ் இலக்கியம். ஒன்றாயும் உடனாயும் வேறாயும் இருப்பவன் இறைவன் என்ற சைவசித்தாந்தத்தின் அடித்தளத்தில் பாடப்பெற்ற, இறைதுணை குறித்த விளக்கமொழி. நாளென்றும் கோளென்றும் அஞ்சி நடுங்கும் உள்ளத்தவர்களுக்கு, உள்ளத்தில் உள்ளவன் இறைவன், அன்பு உருவானவன் இறைவன், என்றும் பொன்றாத் (குறைவற்ற) தோன்றாத் துணையானவன் இறைவன், என்ற உறுதியை வளர்த்துக், காலத்தைக் கடவுள் துணைகொண்டு எதிர்கொள்ளப் பழக்கும், பயிற்சிப் பட்டறை திருக்கோளறு பதிகம்.

## வழிப்பயணத் துணை

பத்துப்பாடல்களையும் "நமதாணை" என்ற திருஞானசம்பந்தர் உறுதிமொழியைத் திருக்கடைக்காப்பாகவும் கொண்ட இந்தப் பக்தித் திருப்பதிகம் முத்தி பெறுவதற்கான வழியாக மட்டுமல்லாது வாழ்வில் சித்தி பெறுவதற்கான சக்தியாகவும் திகழ்கிறது என்ற நம்பிக்கை தமிழரிடை அன்று தொட்டு இன்று வரை உள்ளது. இதனாலேயே இதனை எச்செயல்கள் செய்வதற்கு முன்பும் வழிப்பயணங்கள் தொடங்கும் பொழுதும் பாடும் மரபு சைவத்தமிழர் வழமையாக உள்ளது.

## முதற் புரட்சி காரைக்காலம்மையார்



தமிழர் வரலாற்றில் காரைக்காலம்மையார் சமணத்திற்கு எதிராகக் களமிறங்கி 3ம் நூற்றாண்டளவில் கண்டது முதற் பெண் புரட்சி - பெரும் புரட்சி. அதன் வழி பிறந்த

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை என்று மூன்று சிறிய பிரபந்தங்கள் மூலம் தமிழிலக்கிய உலகும் தமிழர் ஆன்மீகமும் மக்களுக்காய்ப் பாடும் மக்கள் நலம் போற்றும் வல்லமை கொண்டு எழுந்தன.

## இரண்டாவது புரட்சி
## திலகவதியார்

பின்னர் 7ம் நூற்றாண்டில் திருமுனைப்பாடியில் திருவாமூரில் பிறந்த திலகவதியார் தன் தம்பி மருள்நீக்கியார் சமணத்தில் மருண்டு தருமசேனராக வாழ்ந்த பொழுது அவரை இறைதுணை கொண்டு மீட்டு திருநாவுக்கரசர் என்ற புரட்சித்தலைவனாக மாற்றியமை தமிழ்ப் பெண்கள் வழி வந்த தமிழர் வரலாற்றில் இரண்டாம் புரட்சி

## மூன்றாவது புரட்சி
## மங்கையர்க்கரசியார்

கூன் பாண்டியன் நெடுமாறனும், மதுரைப் பாண்டிய அரசும் சமணத்திற்கு உட்பட்டு சைவத்தை மறந்த காலத்தில் பட்டத்தரசி மங்கையர்க்கரசி அமைச்சர் குலச்சிறையாருடன் இணைந்து சைவத்தையும் தமிழையும் தமிழரின் பாண்டியப்பேரரசையும் காத்திட எடுத்த முயற்சி தமிழுலகு கண்ட மூன்றாவது பெண் புரட்சி.

## முயற்சியின்
## முதல் விளைவு

இந்த மங்கையர்க்கரசியாரின் புரட்சிகர முயற்சியின் முதல் விளைச்சல் திருக்கோளறு பதிகம். அந்த வகையில் தமிழ் மண்ணின் மீட்சிக்குத் தமிழரின் மாட்சிக்கு தமிழிலக்கியத்தில் ஊதப்பட்ட மற்றொரு எழுச்சிச் சங்கு இந்தத் திருக்கோளறு திருப்பதிகம்.

## நம்பிக்கையின்
## உறுதி மொழி

இதனால்தான் அன்றும் இன்றும் என்றும் தமிழ் மண்ணின் மீட்சிக்கும் தமிழரின் மாட்சிக்கும் தடைகள் வரும்பொழுது, பின்னடைவுகள் ஏற்படும் பொழுதெல்லாம் திருக்கோளறு பதிகம் மக்களுக்கு நம்பிக்கை உறுதி உள்ளத்தெம்பு தரும் இலக்கியமாக இலங்குகிறது.

## சரியாது தகராது
## தடுக்கும் சிந்தனை

அந்த வகையில் தனிமனித உளவியற்பலம் ஏக்கங்களால் குறைந்திடாமலும் அழிந்திடாமலும் சமுக உளவியல் தாக்கங்களால் சரிந்திடாமலும் தகர்ந்திடாமலும் தடுக்கும் தமிழ்ச் சிந்தனையாக உள்ளது இந்தத் திருக்கோளறு திருப்பதிகம்.

## விதி வழிப்பட்டது
## வாழ்க்கை

ஒரு மனிதனின் இன்பங்கள் துன்பங்கள் , உயர்வுகள் தாழ்வுகள் , நலங்கள் நலிவுகள் , உள்ளன இல்லாதன, நல்லன கெட்டன, உறவுகள் பிரிவுகள்; பிறப்பு இறப்பு எல்லாமே அவனின் விதியின் வழிப்பட்டதென்பது தமிழரின் மெய்யியல் ஆன்மீக எண்ணம்.

## நியதி - நீதி
## ஒழுங்கு – ஊழ்

விதி என்பது - என்றும் உள்ள அழிவற்ற ஆன்மா தன் செயலால் தன்னில் தான் பதித்துக்கொள்ளும் நன்மை தீமைகளின் பதிவுகளின் பயனாகிறது. இந்தப் பயன்கள் அனுபவிக்கப்பட்டே ஆக வேண்டும் என்பது நியதியாகிறது, நீதியாகிறது, ஒழுங்காகிறது, முறையாகிறது. இந்த அடிப்படையிலேயே மலர்தல் என்ற பொருள் கொண்ட ஊழ் என்னும் சொல் விதியைக் குறிப்பதற்கான பெருவழக்குச் சொல்லாகத் திகழ்கிறது.

## உள்ளதே தோன்றும்
## தோன்றியன அழியா

உள்ளதே தோன்றும் தோன்றியது அழிவுறாது என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படை விதி. அணு அழிக்கப்பட இயலாதது என்பதும், தாக்கத்திற்குச் சமனான எதிர்த்தாக்கம் உள்ளது என்பதும், சடத்துவம் குறித்த விஞ்ஞானம் ஆன்மா என்றும் அழிவற்றதென்பதும், வினைக்கு ஏற்ற வினையுண்டு என்பதும் சடசித்துவான ஆன்மா குறித்த மெய்ஞானம்.

## ஆன்மா ஒன்று
## பிறப்புகள் பல

ஆன்மாவின் இந்த வினை செய்யும் இயல்பாலும் அதன் வழிப் பயனாலும் ஆன்மா எண்ணற்ற பிறப்புகளிலும் இறப்புகளிலும் சிக்கிச் சுழன்று வருந்துகின்றது என்பது ஆன்றோர் தெளிவு.

## இறைவனின் கருணையே
## திருவருள்

இந்தப் பிறவி என்னும் சுழல்துன்பத்தில் உழலும் ஆன்மாவுக்குத் தன் வினைப்பயனைத் தானே வென்று வெளிவரும் தன்மையில்லை. இதனால் அன்புருவேயான இறைவன் தன் கருணையாம் திருவருளால் ஆன்மாவை அதன் பிறவிச் சுழற்சியிலிருந்து விடுவிக்கக் கொண்ட திருவருளே அவனின் ஐந்தொழில் ஆகிறது.

## ஐந்தொழில்
## விளக்கம்

தன் ஆணவத்தால் அசைவற்று உணர்திறனற்று கல்போன்று இறுகிக்கிடக்கும் ஆன்மாவுக்கு வினைப்பயனை நுகர்வதற்காக உயிர்ப்பும் உடலும் அளிக்கும் இறைசெயலே படைப்பு ( சிருஸ்டி).

குறித்த வினைப்பயனை ஆன்மா அனுபவிக்கும் வரை உயிரை உடலுடன் காத்து நிற்றலே பராமரித்தல் ( திதி) என்னும் இறைத் தொழில். குறித்த வினையை அனுபவிக்க குறித்த காலம் நிறைவுற்றதும் ஆன்மாவை உயிரிலும் உடம்பிலும் நின்று விடுவித்தலே இறைவனின் ஒடுக்கல் ( சங்காரம்) தொழில்.

இந்த படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலுள் ஆன்மா ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில் ஆன்மாவுக்கு எதற்காக அது உயிர்கொண்டு இயங்குகிறது என்று உணராதவாறு செய்யும் மறைத்தல் என்னும் இறைதொழிலே உயரர்களுக்கு தாம் தந்திரமாக மகிழ்வாக நம்பிக்கையோடு காலத்தை எதிர்கொண்டு வாழ்வதற்கான விருப்பைக் கொடுக்கிறது.

## விதியை மாற்றுவதற்கான உயிரின் சுதந்திரம்

அந்த விருப்பில் அவை தெரிவுகளை மேற்கொண்டு புதிய வினைகளைச் செய்வதற்கான தன்மையைப் பெறுகின்றன. இதன் வழி நன்மை தீமை என்பவற்றை உயிர் செய்வதற்கான சுதந்திரம் அளிக்கப்படுகிறது. அந்தச் சுதந்திரவாழ்வில் உயிரின் முயற்சி தெய்வத்தால் மாற்ற இயலாததாக உள்ள விதியை தன் செயலால் உயிரே மாற்றுவதற்கான சக்தியை அளிக்கிறது. எனவே திரேதான சக்தி எனப்படும் இறைவனின் மறைப்பாற்றல், உயிருடன் கூடவேயிருந்து அதனை வினையை நுகர்வதற்காக வழிப்படுத்தும் அதே வேளை, அந்த வினையை மாற்றுவதற்கான புதிய வினையினை உயிரே செய்வதற்கான உரிமையையும் வலிமையையும் அளிக்கிறது.

## வழிப்படுத்தலால் இருவினை ஒப்புநிலை தோன்றல்

இந்த வழிப்படுத்தலில் தனது முதலும் முடிவும் வாழ்வும் தன்னிலில்லை. தன்னை இயக்கும் இறைவனில்தான் உண்டு என்னும் எண்ணம் வளர வளர, உயிர் தன் ஆன்மாவில் ஒன்றாயும், உடனாயும், வேறாயும் உள்ள மெய்ப்பொருளின் தன்மை உணர்ந்து அதனுடன் ஆன்மா ஒன்றிப்பதற்கான புலனடக்கத்தை உடம்புக்கு அளிக்கும். இதனால் மனதால் வாழ்வு இயக்கப்படும் நிலை மாறி, திருவருளால் வாழ்வு இயக்கப்படுகிறது என்னும் திருவருள் நிலை தோன்றும். நன்மை தீமை என்ற வகைப்படுத்தலை ஆன்மா விடுத்து நன்மையும் தீமையும் தன்னை அனுபவப்படுத்துவதற்கான அனுபவமே என்னும் இருவினை ஒப்பு நிலை தோன்றும்.

## தன்வேதனைக்குரிய காரணிகளை அறிதல்

அதுவரையிலான தன் வேதனைக்கு (இங்கு வேதனை என்பது நுகர்வு என்னும் பொருளில் கையாளப்படுகிறது. வேதனை நுகர்வு என்பதால்தான் இன்ப வேதனை என்னும் சொல்லாட்சி தமிழில் பிறந்தது) நான் என்னும் தனது அகங்காரமும், எனது என்னும் தனது மமகாரமும்தான் காரணமாகியது என்பதை ஆன்மா உணர்கையில் ஆணவமுனைப்பு ஒடுங்கி திருவருட் சக்தி ஆன்மாவில் தொழிற்படத் தொடங்குகிறது.

## வாழும் பொழுதே தாடலை ஒன்றிப்பு

ஆன்மாவில் தொழிற்படத் தொடங்கும் திருவருட்சக்தியால் புதிதாக செய்யும் வினைகள் ஆன்மாவில் வினைப்பயனை ஏற்படுத்த இயலாது போகும். இந்நிலை வருகையில் அதுவரை ஆன்மா உலகின் வழி தன் வினையை அனுபவிக்கத் துணை செய்த திரேதான சக்தியே திருவருட்சக்தியாகி அருளல் என்னும் இறைதொழிலூடாக இறைவனுடன் ஆன்மாவை தாள் தலையாக ஒன்றிக்க வைக்கும். இந்த ஆன்ம-இறை ஒன்றிப்பு இறப்பின் பின் வருவதல்ல, வாழ்வின் பக்குவப்பட்ட நிலையில் ஏற்படும் இறையனுபவம்.

## சிவோக பாவ நிலையில் வாழ்ந்து இறையடி இணைதல்

இந்த இறையனுபவத்தால் தன் செயல் எல்லாவற்றையும் சிவனருளால் நிகழ்வதாக கருதுதலையே சிவோக பாவ நிலை என்பர். இந்நிலையினை அடைந்த நிலையில் ஒடுக்கம் நிகழ்கையில் பிறவியற்ற அமைதியில் இறைவனின் தாளில் ஆன்மா

தலைவைத்து தாடலையாக ஒன்றுபட்டு என்றும் பேரானந்த அமைதியில் நிலைகொள்ளும். இதுவே தமிழர் மெய்யியல் வழியான தமிழரின் ஆன்மீக நம்பிக்கை.

## இலக்கியமானதை இலக்கணமாக்கிய தொல்காப்பியம்

உயிருடனும் உடம்புடனும் ஆன்மாவைத் தொடர்புறச் செய்யும் பிறப்பு, அந்த ஆன்மா உயிராக வாழ்ந்து அனுபவத்தைப் பெறுவதற்கான காலத்தையும் இடத்தையும் (உலகு) இணைத்த ஒன்றாக உள்ளது என்பது, தமிழரின் முதல் ஆன்மீகமும் மெய்யியலுமான சைவத்தின் முடிபு. இதனையே தமிழரின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் முதல் எனப்படுவது காலமும் இடமும் என்றது.

## சைவர் என்னும் கேத்திர கணித மொழியும் சைவரும்

ஒரு நிலைத்த புள்ளியை தளமாகக் கொண்டு அதிலிருந்து சமதூரத்தில் இயங்கத் தொடங்கும் புள்ளி, தான் இயங்கத் தொடங்கிய இடத்துக்கே வரும்பொழுது அதன் ஒழுக்கு சைவர் என்பது கேத்திர கணித மொழி. காலதத்துவம் என்னும் ஆரையையும், நியதித்தத்துவம் என்னும் ஒழுக்கையும், மையம் என்னும் கடவுளையும் கொண்டதான வாழ்வை உடையவர் சைவர் எனப்பட்டனர். இந்த வட்டத்தின் ஆரை என்பது காலத்தையும், இந்த வட்டத்தின் ஒழுக்கு என்பது நியதியையும் குறிக்கிறதெனக் கொண்டால், இறைவனை மையப்படுத்திய கால தத்துவத்தினுள்ளும் நியதித்தத்துவத்தினுள்ளும் விரிவதாக உயிர்களின் மலர்வும் ஒழுக்காக உயிர்களின் வாழ்வும், ஒடுக்கமாக உயிர்களின் இறப்பும் அமைகிறது என்கிறது தமிழர் மெய்யியல்.

## வாழ்வுக்கான மலர்வில் தாய் மண்ணின் தனித்துவம்

ஊழ்த்தல் என்றால் மலர்தல் என்று பொருள். அந்த வகையில் ஊழ் என்பது வாழ்வுக்கான ஆன்மாவின் மலர்வு என்றனர் ஆன்றோர். இந்த மலர்வு அந்த உயிர் வாழ்வதற்கான காலத்துடனும், அந்த உயிர் வாழ்வதற்கான இடத்துடனும் உலகத்துடனும் இணைந்தது என்ற வகையில், தாய்மண் நம் வாழ்வின் ஆதாரமாவது போல் காலமாக நாம் காணும் சூரிய சந்திரரால் உருவாக்கப்படும் பகலும் இரவும் - காலமும் பொழுதும் நம் வாழ்விற்கான ஆதாரங்களாகவே உள்ளன.

## சாத்திர சோதிட அறிவின் நோக்கு

நமது உடல் ஐம்பூதங்களின் கலப்பாகவும், நமது உலகம் ஐம்பூதங்களின் மயக்கமாகவும் இருப்பதினால், கிரகங்களின் இயக்கத்தன்மை குறித்த அறிவான சோதிடமும், எமது உடலின் ரேகைகளின் அறிவான சாத்திரமும், நமக்கான காலத்தையும் நமக்கான உள்ளத்தின் உடலின் தன்மைகளையும் புறத்தின் போக்கையும் கணிப்பதற்கான அறிவு என்பது நம் முன்னோர் மொழி.

## சூரியன் இல்லாது போகையில் காலமும் இல்லாது போகும்

ஆயினும் எல்லா அறிவுமே ஒன்றை நியமமாகக் கொண்ட சுட்டறிவு. அந்த நியமம் இல்லாது போகும் பொழுது அந்த அறிவும் இல்லாது போகும். காலமும் கூட சூரியன்

இல்லாது போகையில் இல்லாது போகும் ஒன்றுதான். எனவே எல்லாவகை அறிவுகளும் காலமும் இடமும் கூட இல்லாது போவனவே.

### விதியை நிறைவேற்றலும் விதியை மாற்றுதலும்

அந்த வகையில் கிரகங்கள் இறை எண்ணத்தை எம் வாழ்வில் நிறைவேற்றுவதற்கான இறைவனின் ஆணைப்படி செயற்படுவனவே. ஆகவே விதியினை நிறைவேற்றல் இயற்கையின் பணி. என்றாலும், இயற்கையை மாற்றுதல் இறைவனின் ஆற்றலாக உள்ளது. இதனையே காலனையே காலால் உதைத்து மார்க்கண்டேயரைச் சிவன் காத்தார் என்ற பழங்கதை உணர்த்தும் செய்தியாகிறது.

### புராண தத்துவ அறிவு ஞானத்தைப் பெறு வழி

புராணங்களை தத்துவங்களைப் படிப்பதன் வழி சுட்டறிவுக்குள் அடங்காதவற்றை உணரும் ஞானத்தை அந்த இறைவன் அருளால் பெற்றிடலாம் - பெற்றிட வேண்டுமென்பதே நாம் உண்மைகளை உணர்வதற்கான, அறிவைப் பெறுவதற்கான வழி என்பது நம்முன்னோர் முடிபு.

### மகிழ்வுச் சொல்லாகவும் கலை பிரிதல் சொல்லாகவும் கலை

மாயை, நியதி, காலம் , கலை, வித்தை, அராகம் , புருடன் என்னும் ஆன்ம தத்துவங்கள் ஏழும் தோன்றும் பொழுது கலை என்பது எமது மனதின் அறிவை மறைத்து அறியாமைக்குள் கல்போல் அசைவின்றிக் கிடக்கச் செய்யும் ஆணவத்தைக் கலைக்கும் தத்துவமாகத்தான் தோன்றுகிறது. ஆனால் தமிழ் மொழியில் கலை என்பது கலைத்தல் என்னும் வினைச்சொல்லாகவும் கலையைக் குறிக்கையில் பெயர்ச்சொல்லாகவும் அமைகிறது என இலக்கண ஆசிரியர்கள் கூறுவர். மனதிற்கு மகிழ்வு தருவது கலை. ஆனால் சேர்ந்திருத்தலைக் கூடிநிற்றலை விலக்கலைப் பிரித்தலை கலை என்கையில் அது பிரிப்பைக் குறிக்கும் - விரட்டலைச் செய்யும் செயலைக் குறிக்கிறது.

### ஆணவத்தைக் கலைத்தலாலே கலை மகிழ்வாகிறது

இவ்வாறு இரண்டு முரண்பட்ட பொருளினைக் கொண்டதாக கலை பெயரிலும் வினையிலும் பொருள் கொள்ளுதல் வியப்பைத் தருகிறது. உண்மையில் கலை என்னும் பெயர்ச்சொல்லால், நாம் குறிக்கும், நாம் பெறும் அறிவு, ஆற்றல், நம் மனதில் உள்ள ஆணவத்தைக் கலைக்கிறது. இதனால் கலை என்பதற்கு கலித்தல் என்னும் பொருள் பழந்தமிழ் மரபில் உண்டு. இந்தக் கலையுள்ளம் வளர வளர ஆணவம் கலைந்து அறிவு ஒளி தோன்றி அகங்காரமும் மமகாரமும் குறையும். இதனால்தான் கலைத்தல் என்னும் வினைச்செயலின் தன்மை கொண்டதாக கலை என்னும் பெயர்ச் சொல்லும் அமைகிறது.

### ஆணவத்தைக் கலையாது கலை அராகமாகுதல்

ஆயினும் கலை வழி, அறிவின் வழி, நாம் பெறும் அறிவுப் பயிற்சி, வித்தையாக மாறுகையில் அது மேலும் மேலும் புகழ் பெற வேண்டும், செல்வம் ஈட்ட வேண்டும், அதிகாரத்தைப் பதவியைப் பெற வேண்டும், என்ற அராகம் என்னும் இயல்பாக

மாறக்கூடும். இந்நிலையில் ஆணவ ஒடுக்கத்துக்கு எனப் பிறந்த-படித்த-பயின்ற கலையே ஆணவ முனைப்பைத் தூண்டும் அராகம் என்னும் தத்துவத்தை மனதில் வளர்த்து விடும்.

## விடுபட வழி ஆண்டவன் அண்மையில் இருத்தல்

இதனால் இதிலிருந்து விடுபட்டு – கலை, ஐம்புலனடக்கத்திற்கும் இறைதேடலுக்கும் உரியதாக வழிகாட்ட வேண்டுமானால், அவன் அருளாலே அவன் தாள் பணிந்து என்கிற உண்மைக்கேற்ப, நாம் இறைவனுக்கு நெருக்கமாகச் செல்ல வேண்டும். சந்நிதி என்ற வடமொழிச் சொல் சம் + நி + தி = சந்நிதி என அமையும். இதன் பொருள் அண்மையில் இருப்பது அண்மைநிலை, முன்நிற்றல் என்பதாக அமைகிறது. இதன்வழி, இறைவனின் சந்நிதி என்ற சொல்லே, நாம் இறைவனுக்கு அண்மையாக இருத்தல் வேண்டும் என்ற தத்துவத்தை நமக்கு விளக்குகிறது. ஆனால் இந்த இறைவனுக்கு அருகில் செல்லுதல் என்பதும் காந்தம் இரும்பை இழுப்பது போன்ற செயற்பாடாகும். காந்தம் இரும்பை இழுப்பது போல இறைவன் எம்மை இழுப்பது அவனின் கருணைச்செயல் இரும்பு காந்த புலத்திற்குள் உட்படும் போதுதான் காந்தம் இரும்பை இழுக்கும். எனவே நாம் இறைவனுக்கு அண்மையில் செல்லும் பொழுதுதான் இறைவனின் கருணையால் நாம் நம்வினை வழியிலான இருத்தல் நிலையிலிருந்து விடுபடலாம்.

## அவனருளாலே அவன் தாள் பணியும் நிலை தோன்றல்

சாத்திரத்தால் விளக்கப்பட முடியாத, தோத்திரத்தால் அடையப்பட இயலாத இறைவன், அன்புக்கடிமையாகி அடியார் உள்ளத்தில் தன்னை வெளிப்படுத்தி, அடியவரை வழிப்படுத்தி, இறுதியில் ஆன்மா இறைவனில் நிலை கொள்ளச் செய்கையில் எல்லாமே அவன் செயல் என்னும் நிலை தோன்றும். ஆன்மாவில் இயல்பாகவே ஆணவம் இரண்டறக் கலந்த நிலை இருப்பதால் ஆணவத்தை வெல்லும் தன்மை ஆன்மாவுக்கு இல்லை. இறைதுணையாலேயே ஆன்மாவின் ஆணவத்தை வெல்லும் ஆற்றல் ஆன்மாவுக்குக் கிட்டும் என்பது நம்முன்னோரின் தெளிவான முடிபாக உள்ளது. இதனால் இறைவன் நேரடியாகவோ அன்றேல் மானிடச் சட்டை தாங்கி குரவராகவோ வந்து அருள்கையில்தான் ஆன்மா ஆணவ ஒடுக்கம் பெற்று சிவத்தில் இன்புற்று அன்புற்றமரும்.

## எல்லாமும் எல்லாரும் சிவனாகவே காணுநிலை

இந்த ஆன்மா அன்புற்றமரும் நிலையில் நன்மையும் செம்மையும் உள்ளத்து வெளிப்பாடாக ஆன்மா சிவோகபாவனை நிலையில் இவ்வுலகிலேயே எல்லாமும் எல்லாரும் சிவமாகக் காணும். இதுவே கடவுளே என் உள்ளத்தில் உள்ளான் என்னும் உண்மையை உணர்ந்த நிலை

## நல்லனவே செய்யுமெனும் சம்பந்தர் ஆணை மொழி

இந்நிலையில் கடவுளால் ஆகாதது எதுவுமில்லை என்ற உள்ள உறுதி தோன்றும். நாளும் கோளும் கூட விதி வழி எம் மேல் ஆதிக்கம் பெற்றிருந்தாலும், கடவுளின் அருள் வழி அவைகள் நல்லனவற்றையே நல்லனவற்றையே அடியார்க்கு செய்யும். இந்த உண்மையே தன் அனுபவ மொழியாகத் திருஞானசம்பந்தர் ஆணையிட்டுச் சொல்லும் ஞானமொழி. இதுவே திருக்கோளறு பதிகம் என்னும் சம்பந்தரின் மன எண்ணங்களின் சொல் வண்ணங்கள்.

## இறைவன் துணையால் காலத்தை எதிர் கொள்வதற்கான பயிற்சி

அச்சம் என்பது வேறு உறுதி என்பது வேறு. பயம் என்பது வரக்கூடிய பலனை எண்ணித் தயங்குவது தடுமாறுவது. உறுதி என்பது வரக்கூடிய பலனை எதிர்கொண்டு இறை துணையால் அதனை மென்று அல்லது வென்று வாழ்வது. **சோதிடத்தால் வருவது எச்சரிப்பு. அது தருவது பயம். இறைதுணையால் வருவது மனத்துணிவு, மன உறுதி, மன அமைதி.** கொண்டதில் நின்று எதிர்கொள்வதை வென்றிடும் பெருவாழ்வு. இதனைப் பெறுவதற்கான பக்திவழிப் பயிற்சி தரும் பியந்தைக் காந்தாரப் பண்தான் திருக்கோளறு திருப்பதிகம்.

## நாள் கோள் தரு அச்சம் நீக்க வழி கூறுதலே நூல் நோக்கு

தான் கும்பிட்ட குலதெய்வம் துணை செய்யாதென்று அம்பிட்ட தெய்வங்களைத் தேடிஓடியும் - சோதிட சாத்திரங்களை நாடி வாடியும் - தவிக்கின்ற இன்றையத் தமிழர்க்கு திருக்கோளறு பதிகம் தரும் உணர்வு அவசியமானதாகிறது. சோதிடம் காலத்தை எதிர்வு கூறும் கலை. இறைவன் அனைத்துக்கும் நிலைத்ததும் இயக்கமுமான சக்தி. இறைவன் துணையிருக்கையில் நாளும் கோளும் தீங்கு எதுவும் செய்யாதென்பதைத் தெளிவாக்குவதே திருக்கோளறு பதிகம். இதனை விளக்குவதே இந்நூல் நோக்கு.

## தூக்கி வீசப்படும் மனிதனை அணைக்கும் ஆத்மார்த்த சக்தி

இன்றைய பின் முதலாளித்துவ உலகில் மனிதன் தனிமைப்படுத்தப்பட்டும் (alienation) பயன்படுத்தப்பட்டு தூக்கிவீசப்படும் பொருளாகவும் சீரழிவுற்றுள்ளான் (Exploitation). இதனால் மனித உறவுநிலைகள் அனைத்துமே சந்தேகத்திற்கும் அச்சத்திற்கும் உரியனவாக மாற்றப்பட்டதினால் மனித உள்ளம் யாரை நம்புவது எதனைச் செய்வது எப்படி வாழ்வது என்று ஏங்குகிறது. இத்தகைய மனஅழுத்த சூழ்நிலையில் தன் எதிர் காலத்தைச் சாத்திரத்திலும் சோதிடத்திலும் தேடித் தவிக்கும் தமிழ் நெஞ்சங்களுக்கு அவை எச்சரிப்புக்களைத் தரலாமே தவிர நச்சரிப்புக்களிலிருந்து நலமளிக்காது என்பதை நினைவுறுத்தி நலம் தரு சக்தி இறைசக்தி ஒன்றேயாகும், என்பதை வலியுறுத்தி ஆத்மார்த்த பலத்தைக் கூட்டுவதற்கே இந்நூல் அடிப்படையில் தேவையாகிறது.

## மக்களுக்குச் சக்தி அறிவுக்குத் தெளிவு

அதே வேளை திருக்கோளறு பதிகம் உயர்தர தமிழ்ப் பரீட்சைகளுக்கான பாடப்புத்தகமாக பல்கலைக்கழகங்களிலும் உயர் வகுப்புகளிலும் உள்ளது. குறிப்பாக கேம்பிரிஜ் பல்கலைகழக அனைத்துலக கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர பரீட்சைக்கு திருக்கோளறு பதிகம் பாடப்புத்தகமாக 2010ம் ஆண்டு வரை இருக்கிறது. அவ்வகையில் இந்நூல் உயர் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவையான பயன் அளிக்கும் உதவி நூலாக அமையும் என்பது என் நம்பிக்கை. அதே வேளை தமிழ்மொழி படித்தல் என்பது தமிழர்களைப் பொறுத்த மட்டில் மொழியின் தொடர்பாடல் தேவைகளுக்கு அப்பால் தங்களின் தான்மையைத் தொன்மையைத் தெரிந்து தெளிந்து தொடர்ந்து தமிழராக வாழ்வதற்கான சக்தி வழங்கலாக அமைகிறது. இதன் வழியாகத்தான் தமிழர் என்ற அடையாளத்தை நிறுவவும் தமிழர் சுயநிர்ணய உரிமைக்குரிய மக்கள் என்ற உலகத் தகுதியைப் பெறவும் முடியும். தமிழ் மக்களுக்கு இந்தச் சக்தியையும் மொழி சமயம் கற்பவர்களுக்கு அறிவுத் தெளிவையும் அளிக்க இந்நூல் உதவ எல்லாம் வல்ல இறைவன் அருளல் வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

## தூண்டியவன் அவன்
## நான் வெறும் கருவி

எல்லாவற்றுக்கும் மேலாக இதனை எழுதுவது நானல்ல- அவனே என்ற உணர்வே இந்நூலை எழுத வைத்தது. எண்ணமே வடிவம் எண்ணுவது நானல்ல என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளவன் நான். இதனால் என் பட்டத் தகுதிகளோ படித்த படிப்புக்களோ இந்நூலை எழுதுவதற்கான என் தகுதியாக கருதாது, ஆட்டுவித்தால் யார் தான் ஒருவர் ஆடாதாரோ என்கிற அப்பர் அருள்வாக்கு வழி இயங்கி இந்நூலை எழுதினேன் என்பதே உண்மை.

## நூல்களைக் காட்டியதும்
## அவன் அருட்செயலே

மேலும் இறைவன் இந்நூலை எழுத எண்ணிய பொழுது சில நூல்களை எனக்குக் காட்டியும் வழிகாட்டினான். இந்நூல் என் எண்ணங்களுடன் நான் படித்த வாசித்த அந்நூல்களின் வழி வந்த கருத்துகளையும் சேர்த்துள்ளது. தலங்கள் குறித்த பயனுள்ள தகவல்கள் பலவற்றை தந்த தென்னகத் திருக்கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும் நூலை எழுதிய யாழ்ப்பாணம் வாலிபசங்கத்தை நிறுவிய அமரர் சி.சுப்பிரமணியத்தின் மகனும் கனடாவில் வசிப்பவருமான எமது சைவத்தமிழ் அறிஞர் சுப்பிரமணியம் கந்தசுவாமிக்கும், திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம் ( 1 2 3 திருமுறைகள்) வரலாற்று முறையில் மூலமும் உரையும் உட்பட பல சைவநூல்களையும் தமிழ் நூல்களையும் எழுதிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 31 ஆண்டுகள் தமிழ் வடமொழி ஆசிரியராக அரும்பணியாற்றிய மகோபாத்தியாய பண்டிதர் அமரர் வை. இராமசாமி அவர்களின் மகனும் திருச்சி புத்தூர் பிஷப்ஹீபர் மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியரும் தமிழகத்தின் பெரும் புலவருமான திரு. பி. ரா நடராசன் அவர்களுக்கும், அவர்களை அருமையான நூல்களை எழுதத்தூண்டிய இறைவனுக்கும், நன்றி கூறுகிறேன். அதிலும் குறிப்பாக புலவர் பி. ரா. நடராசன் அவர்களின் திருமுறை நூல்கள் பல இடங்களில் இந்நூலுக்கு முதன்நூலாக அமைந்தது என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். இந்நூல்களை எதிர்பாராதவிதமாக நிதர்சன் ரவி என்னும் இலண்டன் வாழ் இளம்மாணவன் எனக்குக் கொடுத்தமையும் தெய்வச்செயல் என்றே எண்ணுகின்றேன். இந்நூலுக்கு சிவப்பணியும் தமிழ்ப்பணியும் குறைவின்றிச் செய்யும் ஆன்றவிந்த சான்றோர் கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் அணிந்துரை வழங்கியமையும் தெய்வத்திருவருளே அதற்காக இறைவனுக்கு நன்றி கூறல் என் கடனே.

## அருள் நூல்களின் துணையும்
## துணைவியின் உந்துதலும் காரணி

இந்த நூல்கள் கிடைத்ததினால்தான் அரசியல் ஆய்வாளராக ஊடகவியலாளராக ஆசிரியராக என்னைக் கண்ட தமிழுலகு இதன்வழி திருக்கோளறு பதிகம் குறித்த படைப்பாளனாகவும் காண்கிறது.

எனது மனைவியும் ஆசிரியையுமான றீற்றா அவர்கள் கேம்பிரிஜ் பல்கலைகழகத்தின் அனைத்துலக உயர்தர (A.L) தமிழ் பரீட்சைக்கான வினாத்தாள் தயாரிப்பாளராக இருந்த காலம் முதலாக திருக்கோளறு பதிகத்தை மாணவர்கள் நல்ல முறையில் அறிவதற்கு ஏற்ற ஒருநூலை எழுதி தாருங்கள் எனக்கேட்டுவந்தமையும் இந்நூல் பிறப்பதற்கான மற்றொரு காரணமாக உள்ளது.

திருக்கோளறு பதிகத்தின் பின்னணியில் திருஞானசம்பந்தர் குறித்த ஒரு ஆழமான பார்வையை ஆசிரியர்கள் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டும் என்பதற்காகவே திருஞானசம்பந்தர் குறித்த பல தவல்களை இந்நூலில் சேர்த்துள்ளேன்.

## நூல் பிறந்த காலத்தைப் பதிதல் என் கடமை

இந்நூல் இலங்கைத்தீவில் தமிழர்கள் தங்கள் பாரம்பரியத் தாயகமாம் தமிழீழத்தில் பல்லாயிரக்கணக்கில் சிங்கள பௌத்த பேரினவாத ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு உலகமே காணாத மனிதவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு இனக்கொலை செய்யப்பட்ட சூழலில் - உயிர் பிழைத்த மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களும் சிறிலங்காவின் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் முள்வேலிகளுக்குப் பின்னால் இடைத்தங்கல் முகாங்களில் உணவின்றி உறங்க இடமின்றி குடிக்கத் தண்ணீர் கூடப் போதிய அளவின்றி தவிக்கும் நேரத்தில் - இந்நூல் எழுதப்பட்டது என்பதையும் பதிவாக்க வேண்டிய கடமை எனக்குண்டு.

## சோகம் தரும் வேகம் கடவுள் மேல் கோபம்

தன்னுயிர் பிரிவதை பார்த்தவரில்லை என்னுயிர் பிரிவதைப் பார்த்திருந்தேன், எனத் தமிழர்கள் துடிப்பதினால் இந்நூல் எழுதும் நேரத்தில் சூழ்நிலை காரணமாக தமிழர்கள் சிலரிடை, எங்களுக்கு இந்தக் கொடுமைகளை எல்லாம் அனுமதித்த ஆண்டவன் தேவையா? என்கிற ஏக்கக் கேள்விகளும் கோபக்கணைகளாக எழுந்துள்ளன.

## இறைவன் நன்மை தீமைக்குப் பொறுப்பானவனல்ல

இந்தக் கேள்விகள் எழுவதற்கு காரணம் தமிழனுக்கே தமிழனின் ஆன்மீகம் தூரப்படுத்தப்பட்ட பரிதாபநிலை என்றே கூறவேண்டும். இறைவன் நன்மை தீமைகளுக்கு பொறுப்புடையவனல்ல. உயிர்களே தம் வினை வழி அவற்றை விளைக்கின்றன.

## யாழ்ப்பாண அரசின் கொடி கூறும் உண்மை

எந்நிலையிலும் அறத்தின் வழி வாழ்வு அமைகின்ற பொழுது உயிர் இறைவனுடன் தொடர்புறுகிறது. இந்த அறமே இறைவனை உயிர்களுடன் இணைக்கின்ற வாகனம். அந்த அறத்தின் குறியீடுதான் விடை - எருது. இதனை விளக்கவே விடைமீது சிவசக்தி எழுகிறது. இதனால்தான் யாழ்ப்பாண அரசின் கொடியாக நந்திக் கொடி அமைந்தது.

## அறத்தால் தாங்கப்படுபவனும் அன்பால் தாங்குவோனாகவும்

அறத்துடன் தொடர்புற்ற ஆன்மாமேல் இறைவன் எழுந்தருளுவதால் இறைவன் தாங்கப்படுகிறான். காந்தத்துடன் தொடர்புற்ற இரும்பும் காந்தமாவது போல் இறைவனுடன் தொடர்புற்ற மனிதனும் தெய்வத்தன்மை பெறுகிறான். இதனால் இறைவன் அவனைத் தாங்குகிறான். எண்ணமே வடிவம் - செயல். ஆனால் எண்ணுவது நானல்ல என்ற நிலை தோன்றுகிறது. இறைவனால் மனிதன் வழிநடத்தப்படுகிறான்.

## இறைவனே போராடும் சக்தி விடுதலை இறையியலும் இதுவே

அறவழி வாழ்கையில் ஒழுக்கம் அன்பு வாழ்வின் விழிகளாக நீதியும் தர்மமும் வாழ்வின் வழிகளாகும். இதனையே **மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்** என்றார் தெய்வச் சேக்கிழார். அற உணர்வுடன் வாழ்கையில் இறைவனே மனிதன் வழி

தர்மத்தை நீதியை உண்மையை நிலை நாட்டப் போராடும் சக்தியாவான். இந்த உண்மையைச் சைவம் மட்டுமல்ல கிறிஸ்தவமும் விடுதலை இறையியல் மூலம் ஏற்கிறது. விடுதலை இறையியலே இலத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலைக்கான வித்தாகியது என்பது வரலாறு.

## சம்பந்தர் போல் நம்பிக்கைப் பயணம் செய்திட வேண்டும்.

எனவே தமிழர்க்கான நீதியை தர்மத்தை உண்மையை நிலைநாட்ட இறைசக்தி தமிழர்களுடன் இணைந்து போராடும் என்பது நிச்சயம். இந்த உணர்வுடன் எதிர்பார்ப்புடன் நம்பிக்கையுடன் தமிழர் தம் விடுதலைப் பயணத்தைத் தாமே தொடர வேண்டும்.

எப்படி சம்பந்தர் சமணராக இருந்து சமணரை நன்கறிந்த அப்பர் சமணருக்கு அஞ்சி சம்பந்தரை நாள் கோள் சரியில்லை எனத் தடுக்கையில் உள்ளத்து இறைவனே என்னைக் காக்கும் சக்தி என்ற உணர்வுடன் மதுரை நோக்கி நம்பிக்கைப் பயணம் செய்தாரோ அவ்விதம் தமிழர்களும் தளரா உறுதியுடன் அயரா உழைப்புடன் தம் விடுதலைப் பயணத்தை தொடர்ந்திடல் வேண்டும். இதற்கான உளப்பலத்தை திருக்கோளறு பதிகம் நிச்சயம் வழங்கும் என்னும் உறுதியுடன்தான் இந்தக் காலகட்டத்தில் இதனை எழுதினேன்.

## தமிழர்களுக்கான விடுதலை நிச்சயம் என்பது சத்தியம்

மானிட ஆன்மா மரணமெய்தாது. சொன்னது தமிழர் ஆன்மீகம். மாவீரர்களோ தலைவரோ மண்ணில் மறைந்ததில்லை. இதனை உணர்ந்து சத்தியத்தை தர்மத்தை நிலைநாட்டத் தமிழன் சத்தியத் தலைவனுடன் வீறுகொண்டெழுவான். இது நிச்சயம் மட்டுமல்ல. சத்தியமும் கூட. தமிழன் காலத்தை வெல்லும் காலம் கடவுளால் உருவாக்கப்படும். அதற்காக வீரட்டானங்களில் அதர்மத்தை அழித்த ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதே திருஞானசம்பந்தரின் பதிக நோக்கு. அதை உணர்த்துவதே இந்நூலின் பெரும் இலக்கு. இறையருளால் அனைவரும் அன்புற்றமர உலகம் இன்புற்று இருக்க இறைவனை வணங்கி விடைபெறுகிறேன்.

சூ. யோ. பற்றிமாகரன் MA BSc BA Special Diploma (Oxford)
ஆசிரியர் ஊடகவியலாளர் ஆய்வாளர்
39 Napier Road Oxford OX4 3HZ.



# திருக்கோளறு பதிகம்
# ஆசிரியர்களுக்கான சில விளக்கங்கள்



## யாரால் எங்கு பாடப்பட்டது?

திருக்கோளறு பதிகம், சோழநாட்டில் உள்ள திருமறைக்காட்டில் (வேதாரணியம்) வைத்து, திருஞானசம்பந்த சுவாமிகளால், பியந்தைக்காந்தரம் பண்ணில் பாடப்பட்ட 11 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பதிகங்கள் பொதுப்பதிகம் என்னும் வகைப்படுத்தலில் 2ம் திருமுறையில் தொகுக்கப்பட்டு உள்ளது. கிடைக்கக் கூடியதாக உள்ள திருஞானசம்பந்தரின் பாடல்கள் அனைத்தும் 12 திருமுறைகளில் 1ம் 2ம் 3ம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருமுறை என்பது தெய்வத்தன்மையுடைய நூல் என்ற பொருளைக் கொண்டுள்ளது.

## திருஞானசம்பந்தரின் பாடல்களின் எண்ணிக்கை

திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் 16.000ம் என்றும் , ஆனால் பின்னர் ராஜாதிராஜனால் தேவாரங்கள் கண்டெடுக்கப்பட்டு நம்பியாண்டநம்பியால் தொகுக்கப்பட்ட 10ம் நூற்றாண்டில் 383 பதிகங்களிலுள்ள 4147 பாடல்களே கிடைத்தன என்பதும் வரலாறு.


ஆயினும் 1917ல் காவிரித் தென்கரைத்தலமான திருவிடைவாயில்மேல் பாடப்பட்ட பதிகம் கண்டறியப்பட்டது. மேலும் பாண்டிச்சேரியிலுள்ள திருக்கிள்ளியன்னவூர்மேல் பாடப்பெற்ற திருப்பதிகமும் அறியப்பட்டுள்ளது. இது 1932ல் சித்தாந்தம் மலர் 5ல் தமிழ்ப் பெருங்கடல் எனப்போற்றப்பட்ட திரு ஜே. வி. கோபாலையர் அவர்களால் குறிக்கப் பெற்றுள்ளது. புதுச்சேரி இந்தோலஜி நிறுவனத்தாரால் 1984ல் வெளியிடப்பெற்ற திருஞானசம்பந்தர் தேவாரம் பண்முறைத் தொகுதி 1ல் பக்கம் 405ல் திருக்கிளியன்னவூர் பதிகம் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இவற்றினடிப்படையில் மொத்தம் 385 பதிகங்களைக் கொண்ட 4169 பாடல்கள் திருஞானசம்பந்தரின் பாடல்களாகத் தமிழிலக்கியத்தில் உள்ளன என 2004ல் வெளிவந்த தமிழகத்து உரையாசிரியர் பெரும் புலவர் பி. ரா. நடராசனின் திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம் 1,2, 3 திருமுறைகள் வரலாற்று முறையில் மூலமும் உரையும் முதல் பகுதியில் பக்கம் 2ல் கணிக்கப்பட்டுள்ளது.

(பாடல் எண்ணிக்கையில் ஆய்வாளர்களிடை சிறிது வேறுபாடு உண்டு. இதற்குக் காரணம். சில பதிகங்களில் பாடப்பெற்ற முழுப்பாடலும் கிடைக்காத நிலை உள்ளதேயாகும்)

## தமிழ் தந்த மாமுனி அகத்தியர் திருக்கல்யாணம் கண்ட தலம்

திருக்கோளறு பதிகம் திருமறைக்காட்டில் வைத்துப் பாடப்பெற்றது என்பது வரலாறு. திருமறைக்காடு (வேதாரண்யம்) தமிழகத்தின் தொன்மை மிகு சிவதலங்களில் முக்கியமானது. சிவன் சக்தியைத் திருமணம் செய்வதைப் பார்க்க தேவர்கள் அனைவரும் கயிலையில் கூடியதால் வடக்கு உயர்ந்து தெற்குத் தாழ்ந்தது. அந் நேரத்தில் அகத்தியரை அனுப்பி தெற்கைச் சிவன் சமநிலைப்படுத்திய பொழுது வேதாரண்யத்திலிருந்த அகத்திய மாமுனிக்கு சிவசக்தி திருக்கல்யாணத்தை அங்கிருந்த படியே அகத்தியர் கண்டு தொழுதிட இறைவன் அருள் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.



## சிவாராத்திரியில் எலி திரி தூண்டிய தலம்

மகாசிவராத்திரி இரவில் நெய்யுண்ண வந்த எலியால் விளக்கின் திரி தூண்டப்பட விளக்கு பிரகாசித்து எரிந்தது. இதனால் மகாசிவராத்திரியில் ஆலயவிளக்கேற்றிய புண்ணியம் கிடைத்த எலியே மகாபலியாகப் பின்னர் மறுபிறப்புற்றது என்பது புராணநம்பிக்கை. திருவருள் பெருக்குக்கு உதாரணமான இந்தச் சம்பவம் நடந்த இடமாகவும் திருமறைக்காடு விளங்குகிறது.

## திருமறைக் காடென்று பெயர் வந்த வரலாறு

இத்தலத்தில் நான்மறைகள் நான்கும் சிவனைப் பூஜித்தமையாலேயே வேதாரண்யம் (வேதம் + ஆரண்யம் = வேதாரண்யம்) என்னும் தலப்பெயர் வந்ததாக இறை நம்பிக்கையுள்ளோர் கருதுகின்றனர். இதன் தமிழ் வடிவு திருமறைக்காடு என்பதாயிற்று. என்பர். மரைகள் நிறைந்த காடு என்பதால் மரைக்காடு என வழங்கி திரிபுற்று மறைக்காடாகியது என நாத்திகத் தன்மையுடையோரும் இவ்விடத்தின் பெயரீடு குறித்து மாறுபட்ட கருத்துக்களைக் கூறி வந்துள்ளனர்.

## இராமாயண காலத்து இராமன் வணங்கிய திருத்தலம்



வன்னியும் புன்னையும் நிறைந்த இப்பகுதியிலேயே விசுவாமித்திரர் தவமிருந்து பிரம்ம ரிஸி ஆனார் என்கிற மரபும் உண்டு. இராமன் சிவபக்தனான இலங்கை மன்னன் இராவணனை வதம் செய்ததினால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஸம் மாறுவதற்காக

சிவலிங்கப்பிரதிஸ்டை செய்து சிவனை வணங்கிய இடமிது என்னும் வரலாறும் உண்டு. இவ்வாறாக வேதகாலம் முதலாக இராமாயணகாலம் உட்பட இத்தலம் புகழுடன் விளங்கியுள்ளது.

## சேரமானும் சுந்தரரும் இணைந்து வணங்கிய புனித மண்

மேலும் சம்பந்தருக்குப் பிற்பட்ட காலத்திலும் சுந்தரர் சேரமான் பெருமாளுடன் சேர்ந்து சென்று தொழுத தலம் என்னும் பெருமையுடையது திருமறைக்காடு. அந்நேரம் சுந்தரத் தமிழில் சுந்தரர் பாடிய

யாழைப்பழித்த தன்னமொழி மங்கைஒரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தான்இடம் பேணில்
தாழைப்பொழில் ஊடே சென்று பூழைதலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங்(கு) உண்ணும்மறைக்காடே

என்னும் திருப்பாட்டு காந்தாரப் பண்ணில் பண் தமிழ்ச்சுவையும் மண் அதன் பெருமையும் விளக்கும் பாட்டு.

## தாழைப் பொழில் பொந்தில் வாழையுண்ண குரங்கு புகுமிடம்

யாழைப்பழித்த இசைமொழியாய்ப் பேச்சொலி கொண்ட உமையவளை பாகங்கொண்டவன், பேழைபோல் தொங்கு அடர் சடைமுடிமேல் பிறைவைத்தவனாய் வாழும் இவ்விடம் திருமறைக்காடு என, சக்தியின் துணையும் சிவத்தின் அடைக்கலமும் உள்ள பதியெனப் பாடிய சுந்தரர், அடுத்து அவ்விடத்துக்கு எப்படிச் செல்வது என்பதை விளக்குவதன் மூலம், திருமறைக்காட்டின் இயற்கை எழிலை இன்பத்தமிழாக்குகிறார். அடர் தாழைப்பொழில் இடையுள்ள துவாரங்களினூடு குட்டைக் குரங்குகள் புகுந்து சென்று வாழைக்கனி உண்ணும் திருமறைக்காடு என்பது சுந்தரர் விளக்கம். இந்த இயற்கை காட்டும் வனப்பையும் இறைவன் காட்டும் அருட்கோலத்தையும் கண்டு இன்புறுகையில் இதுதான் திருமறைக்காட்டுத் திருத்தலமென அறிந்து போற்றிடலாம் எனச் சுந்தரர் பெருமான் பாடியுள்ளமை இறைமகிமையையும் தலப்பெருமையையும் ஒருங்கே பக்தியினாலும் அழகியலாலும் இதயத்துணர்த்தும் திருப்பாடலாக இப்பாடலை சிறப்புற வைக்கிறது.

## முனிவரும் ஞானியும் பிறந்த பூமி

இன்னும் திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவரும் தாயுமானவரும் பிறந்த மண் இந்த மண். சப்த விடங்கத் தலங்கள் ஏழினுள் ஒன்றாகிய திருமறைக்காட்டின் அருளாட்சியை திருமுறைகள் ஏழும் பாடியுள்ளமை இத்தலத்தின் அருள் மாட்சிக்கு உதாரணமாகிறது. அன்னத்தின் நடைபோன்று மெல்ல நடனமிடும் இங்குள்ள புவனவிடங்கர் நடனத்திற்கு ஹம்சபாத நடனம் (பிருங்க நடனம்) என்ற சிறப்புப் பெயர் உண்டு.

## யாழ்ப்பாணத்துடன் வரலாற்றுத் தொடர்புடை வேதாரண்யம்

எல்லாவற்றுக்கும் மேலாக ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, யாழ்ப்பாணத்தார் திருத்தொண்டில் இணைத்திருந்த வரலாறு, இக்கோவிலுக்கு உண்டு. அதன் வெளிப்பாடாக கீழ்க் கோபுர வாசலுக்கும், அனுப்பு மண்டபத்துக்கும் இடையில்

இலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட கற்களே தளமாக அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குக் கோபுரக் கல்வெட்டுக்களிலும் ஆலயத்திருப்பணி செய்த யாழ்ப்பாணத்தவர்களின் கிராமங்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தார் வீதி என்ற பெயரில் இங்கொரு சாலையுமுண்டு.

## போர்த்துக்கேயர் காலத்தில் யாழ் மக்களின் வழிபாடுகள்

இலங்கையில், போர்த்துக்கேயரால், இந்து மத வழிபாடு தடைசெய்யப் பட்டிருந்த காலத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து இரவோடிரவாக கடல்வழி பயணித்து, இந்த திருமறைக்காட்டு மண்ணிலேயே திருவிழாக்களையும் ஆலய வழிபாடுகளையும் நடத்திய பல தமிழீழ மக்கள் காலையில் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர். சிலர் சிவகாசி முதல் வேதாரண்யம் வரை தங்கி வாழ்ந்தும் உள்ளனர்.

இவ்வாறாகத் தமிழீழ மக்களினதும் தமிழக மக்களினதும் ஆன்மீக இணைப்பாக இந்த மண்ணின் ஆலயங்கள் இருந்தன என்பது யாழ்ப்பாண வாலிபசங்கத்தைத் தொடங்கிய ஒரேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் மகன் திரு கந்தசுவாமி அவர்கள் எழுதிய தென்னகத் திருக்கோயில்கள் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் நூலில் உள்ள வரலாற்றுத் தகவலாக உள்ளது.


இந்த தமிழீழ தமிழக ஆன்மீக உறவை உறுதி செய்வது போல் யாழ்ப்பாணம் சின்னத்தம்பிப் புலவரால் திருமறைக்காட்டின் மேல் பாடப்பெற்ற மறைசையந்தாதியின் நூறு பாக்கள் இன்றும் மணம் வீசுகின்றன.

## அப்பரின் இறைத்தமிழால் தாழ் திறந்த ஆலயம்

திருமறைக்காட்டிற்கு (வேதாரண்யம்) அப்பரும் (திருநாவுக்கரசர்) சம்பந்தரும் இணைந்து வருகைதந்த பொழுது சுவாமி சந்நிதிக்கு நேரேயிருந்த வாசல் திறக்க இயலாமல் இருப்பதை அடியார்கள் இருவரிடமும் கவலையுடன் தெரிவித்தனர். வேதங்கள் வழிபட்டுச் செல்கையில் அவை வாயில் கதவைப் பூட்டிச் சென்றதாக மக்களிடை மரபுவழி நம்பிக்கையிருந்தது.

இந்நேரத்தில் வேதநாயகன் சிவபெருமான் என்பதை உலகுக்கு காட்ட விரும்பிய சம்பந்தர் அப்பரைப் பார்த்து கோபுரவாசல் கதவு திறந்திடப் பாடுமாறு பணித்தார். உடனே
பண்ணின் நேர்மொழி யாள்உமை பங்கரோ
மண்ணி னார்வலம் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே

என அப்பர் திருப்பதிகம் பாடத்தொடங்கினார். திருக்குறுந்தொகையாக விரிந்த அவர் பாடலின் 11 வது பாடலில் **“அரக்கனைவிர லால்அடர்த் திட்டநீர் - இரக்கமொன்றிலீர எம்பெருமானிரே – சுரக்கம் புன்னைகள் சூழ் மறைக்காடரோ – சரக்க இக்கத வம்திறப் பிம்மினே ”** எனப்பாடுகையில் திருவருளால் திருக்காப்பு நீக்கப்பெற்று கதவு திறந்தது.



## சம்பந்தர் இன்தமிழால் திருக்காப்புற்ற ஆலயம்

பின்னர் தரிசனம் முடிந்த பின் மரபினைப் பேணி அப்பர் சம்பந்தரிடம் ஆலயக்கதவு திருக்காப்புறுமாறு பாடுக எனப் பணித்தார். சம்பந்தரும்

"சதுரம்மறை தான்துதி செய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ்மறைக்காட்டுறை மைந்தா
இது நன்கிறை வைத்தருள் செய்த எனக்குன்
கதவம்திருக் காப்புக்கொள்ளுங் கருத்தாலே"

எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி கதவு அடைபடச் செய்தார்.

## திருக்கோளறு பதிகம் ஏன் பாடப்பெற்றது?

இன்தமிழ் இறைபாட்டால் கதவு திறந்து மூடிய திருவருள் கண்டு அனைவரும் மகிழ்ந்திருந்த நேரத்தில், மதுரையின் மன்னன் கூன்பாண்டியன் நெடுமாறனின் மனைவி மங்கையர்க்கரசியிடமிருந்து சம்பந்தருக்குச் சமணருடன் வாதாடி வென்றிட வருமாறு அமைச்சர் குலச்சிறையார் மூலம் அழைப்பு வந்தது.

மதுரையின் ஆனைமலை, பசுமலை, நாகமலை, திருப்பரங்குன்றம் ஆகிய பகுதிகளை மையமாக வைத்து சமணர்கள் பலம்பொருந்திய சமணப்பள்ளிகளை அமைத்து மன்னனையும் மக்களையும் சமணத்தில் பற்றுக்கொண்டு சைவத்தை மறந்து வாழ வைத்திருந்த நேரமது. சமணர்களின் நரித்தந்திரங்கள் பலவற்றைச் சமணராக இருந்த காலத்தில் நேரடியாகவே கண்டறிந்திருந்த அப்பர் சம்பந்தரைப் பார்த்து நாளும் கோளும் நல்லதாக இல்லாது இருப்பதினால் உடனே மதுரை செல்ல வேண்டாமென வேண்டினார்.

அந்நேரம் உள்ளத்தில் சிவசக்தி வடிவாக இறைவன் இருக்கையிலே அவனின் அருள்பெற்று இயங்கும் நாளும் கோளும் தீங்கு எதுவும் செய்திடா என்பதை உணர்த்த திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள்தான் திருக்கோளறு பதிகம் என்பது வரலாறு.

## திருக்கோளறு பதிகத்தின் முக்கிய சிறப்பு என்ன?

திருஞானசம்பந்தர் தான் பாடிய 385 திருப்பதிகங்களிலும் நானகே நான்கு திருப்பதிகங்களுக்குத்தான் **"நமது ஆணை"** எனக் கட்டளையிட்டுப் பாடியுள்ளார். அந்த நான்கு பதிகங்களில் திருக்கோளறு பதிகமும் ஒன்றாக அமைவது திருக்கோளறு பதிகத்தின் தனிச்சிறப்பாகிறது.

திருஞானசம்பந்தர் உமையவளால் ஞானப் பாலூட்டப் பெற்ற திருவாயினை உடையவர். இதனால் அத் திருவாய் வழி வரும் ஆணை என்பது உறுதித்தன்மை மிக்கது என்பது ஆன்றோர் வாக்கு. அந்த வகையில் ஞானசம்பந்தர் தன் ஆணையென உரைத்த நான்கு பாடல்களும் அவரின் திருக்காப்புகளில் முதன்மை பெறுகின்றன.

## ஆணையாகக் கிளர்த்தெழுந்த திருக்கோளறுத் திருக்காப்பு

2ம் திருமுறையில் பொதுப்பதிகமாக பியந்தைக் காந்தாரம் பண்ணில் திருஞானசம்பந்தர் பாடிய திருக்கோளறு பதிகம், திருமறைக்காட்டில் அவர் பாடிய 5வது பதிகமாக உள்ளது. இதன் திருக்கடைக்காப்பு

"தேனமர் பொழி கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளம் செம்பொன் எங்கும் திகழ
நான்முகம் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் **ஆணை நமதே**"
எனத் திருஞானசம்பந்தரால் நிறைவு செய்து வைக்கப்படுகிறது.

## தாய் பிறந்த திருநனிபள்ளியில் தமிழ் ஞானசம்பந்தர் ஆணை

திருஞானசம்பந்தர் 2ம் திருமுறையில் உள்ள தன் தாய் பிறந்த மண்ணான திருநனிபள்ளி மேல் தந்தையின் தோளில் அமர்ந்து பியந்தைக் காந்தாரம் பண்ணில் பாடிய திருப்பதிகத்தின் முடிவில் **"நடு இருள் ஆடும் எந்தை நனிபள்ளி உள்க – வினைகெடுதல் ஆணை நமதே"** எனப் பாடினார். இப்பதி பலசிறப்புக்களை உடையது. அடியவர்களுக்காய் திருஞானசம்பந்தர் பாலையை நெய்தலாக மாறுமாறு பாடியருளிய பதி இது. மேலும் இப்பதியில் திருஞானசம்பந்தருக்குச் சமணர்கள் அளித்த விடம் கலந்த உணவு திருவமுதாய் திருவருளால் மாற்றப்பட்டதென்கிற மரபுமுண்டு.

## திருவெண்காட்டு திருப்பதிகத்தில் திருஞானசம்பந்தர் ஆணை

மேலும் 3ம் திருமுறையில் திருவெண்காடுமேல் பாடியதாக உள்ள 3வது திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்புப் பாடலிலும் **"சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர் - அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே"** எனப்பாடியுள்ளார். இராமாயணத்தில் இடம்பெற்றுள்ள தொன்மை மிகு இத்திருத்தலம் வெண்மணற்பரப்பாக இருந்ததால் சுவேதம் ( வெண்மை) + ஆரண்யம் (காடு) = சுவேதாரண்யம் என அழைக்கப்பட்டதென்று கூறப்படுகிறது. சதாசிவ மூர்த்தி, சங்கார மூர்த்தியாகிய அகோரமூர்த்தி, ஆனந்த மூர்த்தியாகிய நடராஜ மூர்த்தி என்னும் மூன்று மூர்த்திகளையும் வில்வம், கொன்றை, ஆல் என்னும் மூன்று விருட்சங்களையும் அக்கினி தீர்த்தம் , சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம் என்னும் மூன்று தீர்த்தங்களையும் கொண்டது திருவெண்காடு.

இத்தலத்தில் உள்ள எல்லாமே திருஞானசம்பந்தருக்கு சிவலிங்கவடிவாகக் காட்சியளித்ததால் அவர் இம்மண்ணைத் தன் காலால் மிதிக்க மனமின்றி எல்லையில் தவித்த வேளை அன்னை பெரியநாயகியே தாமே சென்று சம்பந்தரைத் தன் இடுப்பில் தூக்கி வந்து ஆலயத்தில் விட்டதால் இங்குள்ள அம்மன் பிள்ளை இடுக்கி அம்மனாகப் போற்றித் துதிக்கப்படுகிறாள்.

சகலாகம பண்டிதரான அருணந்தி சிவாச்சாரியாரின் அறிவுரையின் படி அச்சுதக்காப்பாளர் இங்குள்ள முக்குளத்தில் மூழ்கிப் பெற்ற தன் அரும்புதல்வர்களுக்கு அவர் சுவேதனப்பெருமாள் எனப்பெயரிட்டதும் பின்னர் அப்பெயர் பரஞ்சோதி முனிவரால் மெய்கண்டதேவர் என்ற தீட்சாப் பெயர் கொடுக்கப்பட்டதால் வழக்கிழந்ததும் சிவஞானபோதம் தந்த மெய்கண்ட தேவரின் வரலாறாகச் சைவசித்தாந்தத்தில் அமைகிறது. பட்டினத்தார் தீட்சை பெற்றதும் இத்திருத்தலத்தில்தான். வெள்ளையானை வணங்கிய பதி எனவும் விண்ணவர் தலைவன் தேவேந்திரனே தொழுத இடமெனவும் புராணங்கள் பாடும் தொல்பதி இந்தத் திருவெண்காடு. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் சோமகுண்டமும் சூரிய குண்டமும் இங்குள்ள சோம தீர்த்தத்தையும் சூரிய தீர்த்தத்தையும்தான் என்னும் ஆய்வாளர்களும் உள்ளர். இவ்வாறு இறையருள் தொன்று தொட்டு தொடர்ந்து வரும் திருவெண்காட்டின்மேல் திருஞானசம்பந்தர் 3 திருப்பதிகங்களை

அருளினார். அதில் காந்தார பஞ்சமத்தில் பாடப்பெற்ற 3வது திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்புப் பாடலை **"சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர் - அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே"** என சம்பந்தர் ஆணையிட்டு நிறைவு செய்கிறார்.


## தாய் மண்ணாம் திருக்கழுமலத்தில் திருஞானசம்பந்தர் ஆணை

மூன்றாவது திருமுறையில் திருக்கழுமலத்தின் மேல் புறநீர்மைப் பண்ணில் பாடிய 67வது திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்பை " **ஊனசம் பந்தத்து உறுபிணி நீங்கி - உள்ளமும் ஒருவழிக் கொண்டு – வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் - மற்று இதற்கு ஆணையும் நமதே**" எனத் திருஞானசம்பந்தர் நிறைவு செய்கின்றார்.

திருக்கழுமலம் திருஞானசம்பந்தர் அவதரித்த திருத்தலம். சீகாழியென காளி வழிபட்டதால் வந்த பெயரே பெருவழக்காக உள்ள இத்தலம் பிரமனால் வழிபடப்பட்ட தொன்மையைக் கொண்டதினால் பிரமபுரம் என்றும் போற்றப்பட்டு வருகிறது. இங்கு உரோமச முனிவர் வழிபட்டு அவரது மலங்கள் கழுவப்பட்டதால் இத்தலம் திருக்கழுமலம் எனவும் போற்றப்பட்டு வருகிறது.

## மற்றைய மூன்று ஆணைகளிலும் வேறுபாடான திருக்கோளறு ஆணை

மேற்கூறிய நாலு திருப்பதிகங்களுமே திருஞான சம்பந்தர் ஆணையிட்டுப் பாடிய திருப்பதிகங்களாக உள்ளன. இதில் திருக்கோளறு பதிகம் தவிர்ந்த மற்றைய மூன்று ஆணைகளிலும் வினை கெடுதல் - அருவினை அறுதல் - வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் என்னும் சொல்லாட்சிகளால் வினை நீக்கல் , பிறப்பறுத்தல் என்னும் தன்மைகள் உறுதி செய்யப்படுகின்றன. ஆனால் திருக்கோளறு பதிகத்தில் வானை ஆளும் வல்லமை அடியார்க்கு அமையும் என ஆணையிடுகின்றார். அதன் வழி நாளும் கோளும் வானில் இயங்கித் தரக்கூடிய தன்மைகளை மாற்றியமைக்கும் இறைதுணை அடியவர் துணையாகி அவர்கள் நாளுக்கும் கோளுக்கும் அச்சப்படாது இறைதுணை கொண்டு வாழ்வர் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.



## தேவாரம் என அழைக்கப்படும் பொது மரபு

தே என்றால் கடவுள். ஆரம் என்றால் மாலை. தேவாரம் என்றால் கடவுளுக்குச் சாத்தப்படும் மாலை. பக்தி என்னும் நாரால் தொடுக்கப்பட்ட சொன்மாலை – பாமாலையும் (தே+ ஆரம் = ) தேவாரம் என்றே இன்தமிழிலக்கியத்தில் ஆகுபெயர் பெற்று இலங்குகிறது.

தே - இறைவன். வாரம் - இசைப்பாட்டு வகைகளில் ஒன்று எனப் பொருள் கொண்டு தேவாரம் என்பது பண்ணிசையுடன் இறைவன் மேல் பாடப்பட்ட பாடல்கள் என்பாரும்


உளர். தேவார முதலிகள் மூவரும் பாடிய பாடல்கள் பொதுவாகத் தேவாரம் என அழைக்கப்படுகிறது.

## சிறப்புப் பெயர்கள் தனித்தனியாக உண்டு

ஆயினும் பொதுவாகத் தேவாரமுதலிகள் மூவரும்பாடிய பாடல்கள் தேவாரம் என அழைக்கப்பட்டாலும், சிறப்பாகத் தேவாரம் என்பது அப்பர் பாடிய பாடல்களையும், திருக்கடைக்காப்பு என்பது சம்பந்தர் பாடிய பாடல்களையும், திருப்பாட்டு என்பது சுந்தரர் பாடிய பாடல்களையும் குறிக்கும் என்பது மரபு.

## பாடல் பெற்ற தலங்களும் தேவார வைப்புத் தலங்களும்

தேவாரங்கள் தேவாரமுதலிகள் சென்று தரிசித்த தலங்கள் மேல் பாடப்பெற்றவைகளே. அவர்கள் சில தலங்களை மனக்கண்ணால் கண்டு பாடல் பாடியதும் உண்டு. மேலும் சில தலங்கள் பாடப்படாமல் தேவாரப்பாடல்களில் அவற்றின் பெயர்கள் பெயரளவில் எடுத்தாளப்பட்டுள்ளன. இதனைத் தேவார வைப்புத் தலங்கள் என்பர். மேலும் பாடல் பெற்ற தலங்கள் 274 எனவும் , இதில் 265 தலங்கள் தமிழ் நாட்டில் உண்டெனபது சில ஆய்வாளர்களின் கருத்து. தேவாரவைப்புத் தலங்கள் 249 என்றும் இவர்கள் கணித்துள்ளனர். அத்துடன் திருஞானசம்பந்தர் 219 தலங்களையும், திருநாவுக்கரசர் 125 தலங்களையும், சுந்தரர் 84 தலங்களையும் பாடியதாகத் தொகைப் படுத்துவாருமுளர்.



தமிழீழத்தில் உள்ள வைப்புத் தலங்களான திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும் திருஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் இத்தலங்களைப் பாடியுள்ளனர்.

## பொதுப்பதிகத்துள் திருக்கோளறு பதிகம்

திருக்கோளறு பதிகத்தில் திருஞானசம்பந்தர், இறைவன் நாளின் மேலும் கோளின் மேலும் கொண்ட ஆதிக்க உரிமையை ஆட்சிப்பெருமையைப் பாடி இறைவனை உள்ளத்தில் கொண்டார்க்கு எதிராக, நாளும் கோளும் விதிப்பயனால் தோற்றுவிக்கும் தீயனவும் கூட, இறைசக்தியால் உள்ளத்தில் இறைவனிருப்பதை உணரும் அடியார்க்குத் தீங்கிழைக்காதென்பதை வலியுறுத்துகின்றார். இது பொது நோக்காக இருப்பதால் திருக்கோளறு திருப்பதிகம் பொதுவானதாக 2ம் திருமுறையில் பொதுப்பதிகத்துள் வைக்கப்பட்டுள்ளது.

## திருநாகேச்சுர 2ம் பதிகத்திலும் நாள் கோள் குறித்த பாடல்

ஆதிசேடனால் சிவராத்திரி தினத்தில் நான்கு யாமங்களிலும் வணங்கப்பெற்ற பெருமையுடைய திருவலஞ்சுழி திருநாகேச்சுரம் திருப்பாம்பரம் திருநாகைக்காரோணம் என்னும் நான்கு திருத்தலங்களிலும் சேக்கிழார் பெருமானால் தன் ஆத்மதலமாகப் போற்றப்பட்ட பெருமையுடையது திருநாகேச்சுரம். இங்கு இருக்கும் ராகுவிற்கு இராகு காலங்களில் பால் அபிசேகம் செய்யும் பொழுது கண்டத்திற்கு அப்பால் பால் செல்லுகையில் பால் நீலநிறமாவதை உற்று நோக்கின் இன்றும் அதனைக் காணலாம் என்பது இவ்வாலயத்தைச் தரிசித்த அடியார்கள் கூறும் செய்தியாக உள்ளது. கும்பகோணத்திற்குக் கிழக்கே ஆறு கிலோ மீட்டரில் உள்ள இத்தலத்தின் மேல் இரண்டு திருப்பதிகங்களைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். அதில் 2ம் திருப்பதிகத்தில்

காளமேகம் நிறக்காலனோடு அந்தகன் கருடனும்
நீளமாய்நின்று எய்தகாமனும் பட்டன நினைவுறின்
நாளுநாதன் அமர்கின்ற நாகேச்சர நண்ணுவார்
**கோளும் நாளும் தீயவேனும் நன்காம் குறிக்கொள்மனே**

என்னும் பாடலில் சம்பந்தர் திருக்கோளறு பதிகத்தில் கூறியது போலவே நாளும் கோளும் தீயனவேனும் நல்ல குறிகளையே கொள்ளும் எனப் பாடுகின்றார். இங்கும் சம்பந்தர் பெருமான் நாள்கோள் குறித்துப் பேசினாலும் இது தலத்தின் மேல் பாடப்பட்ட பதிகமாக அமைவதால் பொதுப்பதிகமாக அல்லாது திருநாகேச்சுரத்தின் மேலான பதிகமாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

## திருஞானசம்பந்தர் காலமும் கணிப்புக்கான ஆதாரங்களும்

திருஞானசம்பந்தர் குறித்த வரலாற்றுப்பார்வை ஒன்றை முன்வைப்பது திருக்கோளறு பதிகத்தை நல்ல முறையில் விளங்கிக்கொள்வதற்கு உதவும். திருஞானசம்பந்தர் காலம் 7ம் நூற்றாண்டாகும். இவர் 12.05.639 ல் (கலியுகம் 3740க்குச் சமானமான விகாரி ஆண்டு சித்திரை மாதம் 29ம் நாள் இடப இராசியில் திருவாதிரை நட்சத்திரத்தில்) சீகாழியில் பிறந்தார் என்று தமிழகத்தின் தினமணி நாளிதழில் 30.07.2004ல் வெளிவந்த ஆய்வுக்கட்டுரையொன்று தெரிவிக்கிறது.

## திருநாவுக்கரசரை அப்பராக்கிய அன்பும் பணிவும் பாசமும்



சீகாழியில் சிவநெறியே தம்வாழ்வாகக் கொண்டிருந்த சிவாச்சாரியாரான சிவபாத இருதையர் அவர்களுக்கும் பகவதி அம்மையாருக்கும் தவப்பயனாகத் திருஞானசம்பந்தர் அவதரித்தார். இந்நேரத்தில் 70 வயதில் வாழ்ந்து கொண்டிருந்தார் பக்தி இலக்கியத்தின்

தந்தை எனப் போற்றப்பட்ட திருநாவுக்கரசு சுவாமிகள். ஞானசம்பந்தரின் அருமை அறிந்த வேளாளரான திருநாவுக்கரசர் சீகாழி சென்று ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தரைச் சிவவடிவாகவே கண்டு மகிழ்ந்தார். இந்நேரத்தில் திருநாவுக்கரசரை ஞானசம்பந்தர் தன் மழலை வாயால் அப்பரே என அன்பாகப் பணிவாகப் பாசமாக அழைத்தார். அப்பர் என்று சம்பந்தர் திருவாய் அருளிய இந்தப் பெயர்தான் அன்று முதல் இன்று வரை திருநாவுக்கரசருக்கு வழக்குப் பெயராகத் தமிழுலகில் நிலவுகிறது

## மேலாண்மைகளின் சமரசம் பக்தி யுகத்தின் வித்தாகியது

மேலும் வரலாற்றாசிரியர்கள், பிராமணரான சம்பந்தர் வேளாளரான திருநாவுக்கரசரை அப்பா என அழைத்த சம்பவமானது அதுவரை வேளாளர் என்னும் நிலவுடமையாளர்களுக்கும் பிராமணர் என்னும் கோயிலுடமையாளர்களுக்கும் இடையில் நிலவி வந்த மேலாண்மைப் போட்டியைச் சமரசப்படுத்தியதாகவும் அமைந்தது என்கின்றனர். இதுவே பின்னர் சமுதாயத்தின் இரு மேலாண்மைகளும் இணைந்து பக்தி இலக்கியத்தின் மூலம் தமிழர்களை ஒருங்கிணைப்பதற்கான ஆற்றலை தோற்றுவித்தது எனலாம்.

## அப்பர் சம்பந்தர் காலத்து நாயன்மார்கள் பதின்மர்

சிறுத்தொண்டர், குங்கிலியக் கலையர், திருநாளைப்போவார், திருநீலநக்கர், அப்பூதியடிகள், நின்றசீர் நெடுமாறன், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், முருகநாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் நாயன்மார்களும் சம்பந்தரின் சமகாலத்தவர்களாகக் கருதப்படுகின்றனர். சம்பந்தர் காலத்தவர்களுள் அப்பூதியடிகளையும், திருநாளைப்போவாரையும், குங்கிலியரையும் தவிர்ந்த மற்றைய நாயன்மார்கள் சம்பந்தரால் தம் பாடல்களில் போற்றப்படுகின்றனர்.

## அப்பர் சம்பந்தர் காலத்துக்கு முற்பட்டோர் பதினேழு பேர்

கோச்செங்கட் சோழர், புகழ்ச்சோழர், சண்டேசுவரர், கண்ணப்பர், காரைக்காலம்மையார், திருமூலர், மூர்த்திநாயனார், கூற்றுவ நாயனார், ஐயடிகள் காடவர்கோன், கணம் புல்லர், அரிவட்டநாயனார், நமிந்தி அடிகள், தண்டி அடிகள், சாக்கிய நாயனார், எறிபத்தநாயனார், அமர்நீதிநாயனார், புகழ்த்துணை நாயனார் ஆகிய 17 நாயன்மார் கி. பி. 300க்கும் கி. பி. 600க்குமிடை அப்பருக்கும் சம்பந்தருக்கும் முன் வாழ்ந்ததாக வரலாறு உண்டென்கிறார் சென்னைப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறைத் தலைவர் முனைவர் அரங்க இராமலிங்கம் அவர்கள். சம்பந்தருக்கு முன்பு வாழ்ந்தவர்களான அமர்நீதியார், கண்ணப்பர், சண்டேசுவர், தண்டியடிகள், புகழ்த்துணையார் ஆகிய நாயன்மார்களும் தொகையடியார்களில் அடங்கும் தில்லைவாழ் அந்தணர்களும் சம்பந்தரால் பாடல்களில் போற்றப்பட்டுள்ளனர். சேக்கிழார் தன் பெரிய புராணத்தில் திருநாவுக்கரசர் மற்றும் குங்கிலியர் ஆகியோருக்கும் திருஞானசம்பந்தருக்கும் இடை இருந்த தொடர்புகளைச் சுட்டிக்காட்டுகின்றார். இதனால் குங்கிலியரைச் சம்பந்தர் தன் பாடலில் குறிக்காத நிலையிலும் அவரும் சம்பந்தருடன் உறவாடினர் என்பது அறியப்படுகிறது.

## கால நிர்ணயத்தில் குறிப்பிடத்தக்க பங்கு

இந்தத் தகவல்கள் எல்லாம் திருஞானசம்பந்தரின் கால நிர்ணயத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன. காலத்தை எல்லைப்படுத்தலில் ஆய்வாளர்களிடை சிற்சில

முரண்பாடுகள் இருப்பினும் கி. பி. 600 – 660க்கு இடைப்பட்ட காலமாக அப்பர் சம்பந்தர் உடைய காலம் இருந்தது என்பது பல ஆய்வாளர்கள் உடன்படு முடிபாக உள்ளது.

## வைகாசி மூலநட்சத்திரத்தில் சோதியில் கலந்தமை

சைவத்திற்கும் தமிழுக்கும் புதியதோர் திசை வகுத்த திருஞான சம்பந்தர் ஆச்சாள்புரத்தில் தனக்குத் திருமணம் நடைபெற்ற 28.05.655 அன்று (ராட்சத ஆண்டு வைகாசி 14 வியாழன் மூலநட்சத்திரத்தன்று) திருமணத்திற்கு வளர்த்த ஹோமத்தீயினுள் தம் மனைவியுடனும் சுற்றத்தவருடனும் புகுந்து சிவலோகம் சென்றார் என்று திகதியிட்டு முன்னர் குறிப்பிட்ட தமிழகத்தின் தினமணி நாளிதழில் 30.07.2004ல் வெளிவந்த ஆய்வுக்கட்டுரை தெரிவிக்கிறது.

## வைணவர் கொடுத்த தவறான தகவல் உலகில் தமிழர் வரலாற்றைக் கெடுத்தது

பாதிரியார் கால்டுவெல் ஸ்கொட்லாந்திலிருந்து சரர்திருத்தக் கிறிஸ்தவத்தை பரப்ப மதுரைக்கு வந்த பொழுது அவருக்கும் வைணவப் பிராமணர்களுக்கும் இடையில்தான் தொடர்புகள் உறவுகள் அமைந்தன. இந்நிலையில் வைணவப் பிராமணர்கள் திருஞானசம்பந்தர் காலம் மாணிக்கவாசகர் காலம் குறித்து கொடுத்த தவறான தகவல்கள் தமிழரின் வரலாற்றையே தலைகீழாக்கியது. கால்டுவெல் பாதிரியார் தனது திராவிட மொழிகளின் ஓர் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் வரும் திராவிட இலக்கியங்களின் தொன்மை குறித்த அதிகாரத்தில், தமிழ் இலக்கியங்களுள் பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை எதுவும் இல்லையென எழுதினார். இதுவே கலாநிதி பேணெலின் பிரித்தானியக் கலைக் களஞ்சியத்தினைத் தொகுத்த பொழுது கால்டுவெலின் தகவலின் அடிப்படையில் தமிழ் இலக்கியங்கள் 10ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை சமஸ்கிருத இலக்கியங்களின் வழி பிறந்தவை என்ற கருத்தை எழுதவைத்தது. இதுவே உலகு, தமிழரின் தொன்மையை தான்மையை சுயநிர்ணயத்தன்மையை தவறாக மதிப்பிட வைத்தது. ஆதலால் உண்மையான காலங்களை இயன்றளவு பதிதலும் சரியான தகவல்களை எழுதுதலும் இனஅடையாளத்துக்கு முக்கியமானவை என்பதை இன்றைய எழுத்தாளர்களும் மனதிருத்தல் மிக அவசியம்.

## சம்பந்தர் பாடல்களின் மேல்வரிச் சட்டகம்

திருஞானசம்பந்தர் பாடல்கள் எல்லாவற்றுக்குமான மேல்வரிச்சட்டகமாக உமையவள் ஞானப்பாலூட்டிய நேரத்தில் தோணிபுரத்தில் சம்பந்தர் பாடிய முதற்பாடல் உள்ளது. இந்தப் பாடலைச் சரிவரப் புரிந்து கொள்ளும் ஒருவர் சம்பந்தர் பாடல்களின் நோக்கைப் போக்கைத் தெளிவாக விளங்கிக் கொள்வர்.

## சம்பந்தரின் முதற்பாடல் பிறந்த வரலாறு

திருஞான சம்பந்தருக்கு 3 வயதில் இறைவி ஞானப்பாலூட்டியதாலே அவரின் இயற்பெயர் மறைந்து திருஞானசம்பந்தர் என்கிற வழக்குப் பெயரே அவரை இன்றுவரை குறித்து நிற்கிறது. அந்தச் சம்பவத்தை எடுத்து நோக்குவது திருஞானசம்பந்தரின் பெருமையை உணர வழி செய்யும்.

பிரளய காலத்தில் இறைவன் தோணியில் காட்சி தந்த தலம் என முன்னோர் போற்றிய தோணிபுரத்திலே பிரமதீர்த்தத்தில் நீராட வந்த சிவாச்சாரியார் சிவபாத இருதயர் தன்னுடன் வந்த தன் மூன்று வயதுச் சிறுவனை குளக்கரையில் பாரிஜாத மரநிழலிருத்தி

நீருள் மூழ்கி மந்திரங்களை மானசமாகச் சொல்லி "அகமருஸண ஸ்நானத்தில்" இறையுணர்வில் மூழ்கி எழுகின்றார்.

## செய் தவப்பயன்
## மகட் பயனாகியது

"தம்பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள் தத்தம் வினையான் வரும்" என்னும் வள்ளுவவாக்கு தம் மக்களைத் தம் பொருள் என்று சொல்லுவர் அறிந்தோர். அம்மக்கள் செய்யும் செயல் பெற்றோர் செய்த வினையின் பயனாக பெற்றோருக்கு அனுபவத்தை அளிக்கும் என்கிற கருத்தை தருகிறது. இந்த வள்ளுவ வாக்குக்கு உதாரணமாக நீரில் மூழ்கி அகமருஸண ஸ்னானம் என்று வேதத்தில் சொல்லப்படுகிற நீராடல் வழிபாட்டை முடித்தெழுந்த சிவபாத இருதயர்க்கு அவர் தவப்பயன் மகட்பயனாகிய காட்சி நிகழ்கிறது. வாயில் முலைப்பால் வழிய நிற்கிறது குழந்தை. முறையில் வழியில் யாரிடம் முலைப்பாலருந்தி மாசுற்றாய் மகனே எனக் குழந்தையைக் கண்டித்துத் தண்டித்துப் பதறுகின்றார் சிவபாத இருதையர். அந்நேரம் அந்த மூன்று வயதுக் குழந்தைக்கு தனக்கு யார் பாலூட்டினார் என்பதை வார்த்தைகளால் கூற வேண்டிய நிலை. தன் பிஞ்சுவிரலால் தோணியப்பர் பெரியநாயகி என்று புகழப்படும் அந்தப் பிரமாபுரீச்சுவர் கோயில் கொண்டெழுந்துள்ள கோபுரத்தை குழந்தை காட்டுகிறது.

## பிஞ்சு இதழ் திறந்தது
## கொஞ்சு தமிழ் பிறந்தது

ஞானசம்பந்தரின் பிஞ்சு இதழ்கள் பிரிந்து தந்த கொஞ்சு தமிழ்ப் பாட்டு நட்டபாடைப்பண்ணாக வானில் எழுந்து தமிழிலக்கிய உலகுக்குப் புதிய ஞான வல்லமை அளித்தது.

தோடு உடைய செவியன் விடை ஏறி ஓர் தூவெண்மதி சூடிக்
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரான் முனை நாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடு உடைய பிர மாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

இன்தமிழ் இலக்கியத்தின் இணையில்லாப் பாடலாகச் - செல் தமிழ் நெறி வகுத்துத் தமிழர் தேக்கம் நீக்கி என்றும் ஊக்கமளிக்கும் கவிதா ஊற்றாக திருஞானசம்பந்தர் மழலை வாய் வழி பிறந்தது இந்தப்பாடல்.

## விடை கூறும் நிலை விடுத்து
## விளக்கத் தமிழ் தேடிய நிலை

பால் யார் ஊட்டினார் என்ற கேள்விக்கு பால் தந்தார் யார் என்று பதில் சொல்லும் நிலையில் அந்தக் குழந்தை இருக்கவில்லை. தான் கண்ட மாலயனும் காணா அந்தத் திருவுருவின் கோலம் சொல்லத் தமிழ் தேடும் நெஞ்சினனாக நிற்கிறது குழந்தை. பரம்பொருளைக் காணக் கண் கோடி வேண்டும் கண்ட பேரானந்தம் சொல்லால் விளக்கப்பட வேண்டிய நேரமது.

## ஞானப்பால் தந்த தெளிவால்
## அம்மையப்பனாகவே கண்டார்

அம்மைதான் முலை கொடுத்தாள், ஆனால் குழந்தையோ அம்மையப்பனாகவே அவனைக் காட்டுகிறது. தோடு உடைய செவியன். குழை அணிதல் ஆடவர் மரபாகவும் தோடு அணிதல் மாங்கல்ய மங்கையர் மரபாகவும் இருந்த காலம் அது. ஓம் என்னும் பிரணவத்தின் உடல் உறுப்பு வடிவம் காதென்று காட்டிட காதில் மகரத்தின் புள்ளியிடும் மரபாக காதுகுத்தல் ஆண்பெண் இருபாலருக்கும் வழக்கமாக்கப்பட்டது என்கிற கதைகளும் உண்டு. எது எப்படியிருப்பினும் இறைவன் ஆண்பாதி பெண்பாதியாக நின்ற

அந்த அர்த்தநாரீஸ்வரத் திருக்கோலத்தின் தன்மை கூறி மனிதசமத்துவத்தை இறைதத்துவத்தில் பொதித்துத் தொடங்குகிறது முதற் சொல்.

## அறமே ஆண்டவனை அடைய வழி என்றார்

அடுத்து மனிதவாழ்வில் அமைதிக்கு அன்புக்கு அடித்தளமாக அமைய வேண்டியது அறம். அந்த அறத்தின் சின்னம் விடை. அவரவர் செய்த அறத்திற்கேற்பவே ஆன்மாவை உடலுடன் கூட்டி அனுபவப் படுத்தலுக்காக வாழ்வை படைத்தலை நடாத்துகிறான் இறைவன், எனவே படைத்தல் தொழிலின் காரணமாக அமைவது அறத்தை நிலைநாட்டல் இதனால் அறத்தின் சின்னமான விடையேறி நிற்கிறார் இறைவன் என்கிறார் சம்பந்தர்.

## அனைத்தும் இழந்தவர்க்கு ஆண்டவனே காப்பு

தக்கனுக்கு அஞ்சி உலகெலாம் ஓடியும் உயிர் தப்ப வழியின்றி தவித்த சந்திரனுக்கு அடைக்கலம் தந்து தங்கி வாழ்வதற்கு ஈசன் தன் திருமுடி அளித்த கதை. இது யாவராலும் கைவிடப்பட்டு அனைத்தும் இழக்கும் நிலையில் ஈசனே இறுதியாவான் என்பதை விளக்கும் கதை. இங்கே தூவெண்மதி சூடி என்று இயம்புகிறார் சம்பந்தர். இறைவனின் காத்தல் தொழிலும் புலப்படுத்தப்படுகிறது.

## அனைத்தும் ஆண்டவனில் ஒடுங்கும் என்ற விளக்கம்

காடு உடைய சுடலைப் பொடி பூசி எனத் தொடரும் திருமொழியால் இறைவனில் அனைத்தும் ஒடுங்கும் என்கிற உண்மை உணர்த்தப்படுகிறது. சம்காரமூர்த்தியாய் இறைவன் கோலம் கொள்கையில் அனைத்துமே நீறாகி இறைவனில் படியும் என்கிற உண்மை உணர்த்தும் சம்பந்தர் அக்காலத்தின் தேவை கருதியும் இவ்வரியினைத் தொடுத்தார் எனலாம்.

## சாம்பலாய் அவனில் என்பதன் விளக்கம்

அக்காலத்தில் சமணமும் பௌத்தமும் நிலையாமை பேசி தமிழ் கூறு நல்லுலகைச் சீர்குலைத்துக் கொண்டிருந்த காலம். எந்த ஈமப்புறங்காட்டைக் காட்டி சமணமும் பௌத்தமும் தமிழரின் புறவாழ்வை சீரழித்தனவோ அதே ஈமப்புறங்காட்டை ஈசனும் ஆன்மாவும் கூடும் பேரானந்த பூமியாகக் காட்டி புதிய சிந்தனை தந்து தமிழர் பண்பாட்டு மீட்புப் புரட்சியை தொடக்கியவள் புனிதவதி என்னும் காரைக்காலம்மையார். அந்த கி. பி. 3ம் நூற்றாண்டு முதல் சம்பந்தர் காலம் வரை தமிழர்கள் நிலையாமைக் கருத்துகளுக்கு எதிராக கருத்தியல் புரட்சி செய்ய வேண்டிய நிலை காலத்தின் தேவையாக இருந்தது. இதனாலேயே சுடுகாடு என்பது இறைவனின் திருமேனி தழுவிட நாம் பொடியாகும் பூமியென்கிற கருத்து வலுப்படுத்தப்படுகிறது. சாம்பலாகி சகலமும் சிவத்தில் ஒடுங்கும் தன்மையானது என்ற தத்துவத்தின் கலைத்துவக் கோலம் நீறணிந்த இறைவனின் தோற்றம்.

## மறைத்தல் என்பதன் உள்ளர்த்தம் உணர்த்தல்

மேலும் உள்ளம் கவர் கள்வன் எனத் தொடரும் அடி என் உள்ளத்தின் உள்ளேயே மறைந்து இருந்து நான் அதனை உணர்கின்ற நேரம் என் உள்ளத்தை தன் வயப்படுத்துபவன் இறைவன் என்கிற ஒன்றாயும் உடனாயும் வேறாயும் இருப்பவன்

இறைவன் என்கிற தன்மையை வெளிப்படுத்துகிறது. என் உள்ளத்து ஒளித்திருந்து என்னையே கவரும் கள்வன் என இறைவனைக் கூறுகையில் அந்தக் கள்வனை என் உள்ளத்து எங்கே ஒளிந்துள்ளான் என நான் தேடும் அகப்பயணம்தான் என் வாழ்க்கை என்ற உண்மையும் உணர்த்தப்படுகிறது. சைவசித்தாந்தத்தில் மறைத்தல் என்கிற இறைசெயலாகவே இந்த உள்ளத்து ஒளிந்திருந்து உள்ளத்துக்கு ஒளியூட்டி பிறவி வெள்ளத்தில் இருந்து விடுவிக்கும் இருவினையொப்பியை ஏற்படுத்தும் செயல் பேசப்படுகிறது. திரோதன சக்தியாக மறைத்தல் சக்தியாக உள்ள இந்த இறையருளே மாயை மூலம் கன்மத்தை அனுபவப்படுத்தி பின்னர் வினை ஒடுக்கம் ஏற்படும் நேரம் வருகையில் சிவத்தைக் காட்டும் சிவசக்தியாக பரிணாமம் அடைகிறது. இதனால்தான் மாயையை ஓண்தளை – கைவிளக்கு என்று பாடிய சம்பந்தர் அந்த மாயை தரும் வாழ்வின் அனுபவத்தின் மூலமே மெய்யுணர்வு ஏற்படுகிறது என்கிறார்.

## இறை இரக்கப்பெருக்கே அருளல் என்னும் தன்மை

தொடர்ந்து “ஏடு உடைய மலரான் முனை நாள் பணிந்து ஏத்த அருள் செய்த” என்னும் வரி மூலம் படைப்பின் மூலமான நான்முகனும் கூட இறைஅருள் என்கிற திருவருள் பெற்றே தன் பணி செய்கிறான் அது போல நாமும் அவன் திருவருள் அடையாது அவன் திருவடி சேர்தல் இயலாது என்பதை எடுத்து விளக்குகிறார். அதே நேரத்தில் இறைவனின் ஐந்தொழில் அருளல் என்னும் இரக்கநிலை காரணமாகவே உயிர்கள் உய்வடைகின்றன என்கிற உண்மையை சம்பந்தர் முதற்பாடலிலேயே அழகுற எடுத்தியம்புகிறார்.

## இவன் அன்றே அவன் என்பதன் விளக்கம்

இவ்வாறாக ஐந்தொழிலையும் செய்யும் இந்த இறைவன்தான் சிறப்புப் பொருந்திய இந்தப் பிரமாபுரத்திலே எழுந்தருளியுள்ளான் எனச் சம்பந்தர் சுட்டிக் காட்டுகின்றார். இங்கு ஞானப்பால் தந்த இறைவியைக் குறித்துப் பேசாது இவன் அன்றே என ஆண்பால் விகுதியிலேயே பாடலையும் முடிக்கின்றார். இதன் வழி சிவம் என்பது முற்றறிவு என்றும் அதன் நினைவாற்றல் அல்லது செயலாற்றலே சக்தி என்றும் சைவசித்தாந்தம் கூறும் தத்துவத்தின் வழி தாயாகி நிற்பவனும் அவனே, தந்தையாகி வழிநடத்துபவனும் அவனே என்கிற உண்மை உணர்த்தப்படுகிறது. இதன் வழி சக்தியில்லையேல் சிவம் இல்லை, சிவம் இல்லையேல் சக்தியில்லை என்பது அனுபவ மொழியாகிறது..

## தத்துவ எண்ணிக்கையில் பாடல் தந்த திறன்

இவ்வாறாக “தோடு உடைய செவியன்” தேவாரம் பலவழிகளில் தமிழ் மறைஞானக் கவிதை உலகின் சிகரமாக அமைகிறது. எவ்வாறு சேக்கிழாரின் “உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்” 63 எழுத்துக்களால் அமைந்து, 63 நாயன்மார்களின் வரலாறு கூறும் நூலாக பெரிய புராணம் அமையப் போகிறதென்பதற்கு கட்டியம் கூறுகிறதோ, அவ்வாறே 36 தமிழ் எழுத்துக்களைத் தன்னகத்தே கொண்டு “தோடு உடைய செவியன்” தேவாரம், சைவசித்தாந்தம் கூறும் 36 தத்துவங்களையும் மக்கள் மயப்படுத்தி, சிவத்தில் சிந்தை நிலை பெறவைக்கும் மறைஞானக்கவிப் பெருக்கு நற்றமிழ் ஞானசம்பந்தர் தேவாரங்கள் என்பதற்கு கட்டிய ஒலியாகிறது. மறைஞானத் தமிழ் வளர்த்த தமிழ் ஞான சம்பந்தர் முதற்பாடலே இறைஞானம் தமிழ் உலகில் இன் தமிழ்ப் பக்தி இலக்கிய நதியாக பாய்வதற்கான உந்துசக்தியாகியது. ஞானப்பாலுண்ட சம்பந்தர் திருவாய் வழி தோடுடைய செவியன் என்ற பிள்ளையார் சுழியுடன் பாயத் தொடங்கிய ஞானத்தின் தமிழ் ஓசையே அவரின் திருக்கடைக்காப்பு எனப்படும் பக்தி நதி. இந்த ஞானநதியின் சிறுகிளையே திருக்கோளறு பதிகம்.

## பக்திப் பேரலையின் வீச்சாகச் சோழப்பேரரசு

காரைக்காலம்மையாரால் வித்திடப்பட்டு தமிழோடிசை பாடல் மறந்தறியேன் என்னும் அப்பரின் உழைப்பால் நீரிடப்பட்டு தமிழ்ஞான சம்பந்தர் திருவருளால் பயிராகிய பக்தி இலக்கியங்கள் ஆலய மேலாண்மைகளால் கோயிலுள் பூட்டப்பட்டு தமிழர் வரலாறு மண்மூடிப் போகச் செய்யப்பட்டது என்பது வரலாற்றுப் பதிவு. ஆயினும் பக்தியிலக்கியங்கள் தோற்றுவித்த பக்திப்பேரலையே 7ம் நூற்றாண்டு முதல் 9ம் நூற்றாண்டு வரை தமிழராட்சிக்கு அசைவைக்கொடுத்து 10ம் நூற்றாண்டில் சோழப்பேரரசு எழுச்சியுற வைத்தது.

## சுந்தரர் தமிழ் பக்தி இலக்கியத் தேடலுக்கான அலையாகியது

சம்பந்தர் வாழ்ந்து சுமார் 180 ஆண்டுகளுக்குப் பின் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனர், முதிய சிவாச்சாரியராக வந்த இறைவனால், திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட்கொள்ளப்பட்ட பின் நாளும் இன்னிசையாற் தமிழ் பரப்பு ஞானசம்பந்தர் வழி பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் என இறைவனைப் பாடித் தொழுது, பரவையாரைத் திருமணம் செய்தார். திருமணத்தின் பின் திருவாரூரின் தேவசிரிய மண்டபத்திற்கு வந்த பொழுது, அங்கிருந்த சிவனடியார்களைக் கண்டு, இவர்களுக்கு எல்லாம் நான் அடியானாகி தொண்டாற்று நாள் எந்நாளோ என ஏங்குகிறார். அந்நேரத்தில் இறைவனால் தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் எனப் பாடுமாறு அடியெடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டர் தொகையைத் திருவாரூர் ஆயிரங்கால் மண்டபத்தில் வைத்துப் பாடினார். இந்தத் திருத்தொண்டத் தொகையின் 11 பாடல்களே, தமிழிலக்கியத்தில் 63 நாயன்மார் குறித்த வரலாற்றுத் தேடலுக்கான முதல் சிந்தனையாக அமைந்தது. கூடவே பக்தி இலக்கியங்கள் குறித்த ஆர்வப் பேரலையையும் எழுப்பியது.

## மன்னர்களின் ஆட்சிக்கு பக்தியும் பக்திக்கு மன்னர்களின் ஆதரவும்

சிம்ம விஸ்ணு(560-580) வழி தோன்றிய பல்லவ அரசின் நீட்சியும், கடுங்கோன் (590-620) வழி தோன்றிய பாண்டிய ஆட்சியும், தமிழ் மண்ணில் பக்தி இலக்கியத்தினை மக்கள் மயப்படுத்துவதற்கு உதவியதன் மூலம், மக்கள் பணிவைப் பெற்றுத் தமது இறைமையை தக்கவைத்தன என்பது வரலாறு. அவ்வாறே பக்தி இலக்கியமும் தமிழ் மண்ணின் அரசு மாற்றங்கள் மூலம் ஏற்பட்ட மக்கள் வாழ்வின் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டனவாகவே வளர்ந்தன என்பதும் வரலாறு.

## படிமக் கலை வளர்ச்சி கவிதையில் எதிரொலி

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் ஆய்வின்படி கி. பி. 600க்கு பின்வரும் இலக்கியங்களில் வரும் மரபுநிலைப்பட்ட உவமைகள் படிமக்கலையை ஆதாரமாகக் கொண்டவை. காதலைத் தனது பாடுபொருளாகக் கொண்ட சங்கத்திலக்கியங்களில் காமக்கிளர்ச்சியுடைய விவரணங்கள் பெரும்பான்மையும் இல்லை. பின்னர் தமிழில் தோன்றிய காமக்கிளர்ச்சியுள்ள உவமைகள், தமிழ் நாட்டின் படிமக்கலை வளர்ச்சியுடன் தான் பெரிதும் வளர்ந்தன. இதன் எதிரொலியாக இறைவனைத் தலைவனாகவும் ஆன்மாவைக் காதலியாகவும் கொள்ளும் கவிதா மரபு, அப்பர் சம்பந்தர் தேவாரங்களில் தொடங்கி சுந்தரர் திருப்பாட்டுக்களில் பெருவளர்ச்சியுற்று மாணிக்கவாசகரால் திருக்கோவையார் என்னும் தனியான அகத்திணை மரபுசார் துறையாக விரிவதை எடுத்து நோக்கினால், இதனைப் புரிந்து கொள்ளலாம். அதேபோல் பல்லவர் காலத்து

தேவாரங்களில் பாசுரங்களில் எளிமையையும், நாயக்கமன்னர் காலத்துப் பாடல்களில் யமகம் திரிபு மற்றும் பல்வேறு பந்தனங்கள் தோன்றியமை கலை கவிதையில் ஏற்படுத்தும் தாக்கத்தை உணரலாம்.

## பக்தியை மையமாகக் கொண்ட ஆட்சிமுறைமை

பக்தி இலக்கியங்களைத் தலைமை தாங்கி நடாத்திய அப்பரும் ஞானசம்பந்தரும் வெறுமனே முத்திச் சிந்தனைகளுடன் பாடவில்லை. வாழ்வின் சோதனைகளை மாற்றவும் சாதனைகளைப் போற்றவும் செய்தனர். அப்பரின் "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்னும் உறுதி தமிழர்களின் செல்நெறியாகி சமணத்தை பௌத்தத்தை வென்று தமிழரின் அடையாளமாகச் சைவத்தை மீளவும் நிறுவியது.

தமிழ் ஞானசம்பந்தர் தமிழைத் திருநெறிய தமிழ் என்று தமிழ்த் தேசியத்தை மதசார் சூழலில் தோற்றுவித்தார். இந்த மாற்றங்கள் பக்திக்கு வழிநடத்துபவரை மையமாகக் கொண்ட ஆட்சிமுறைமையின் காலமாக அக்காலத்தை மாற்றியது. ஞானசம்பந்தர் அப்பர் காலத்தின் பிற்பகுதியில் நின்றசீர் நெடுமாறன் போன்ற அரசர்களால் பக்தியாளர்கள் பெரிதும் போற்றப்பட்டமையைக் காணலாம்.

## கோயிலை மையமாகக் கொண்ட ஆட்சி முறை

ஆயினும் பல்லவர்கள் படிமக் கலைக்கு கொடுத்த முக்கியத்துவம் கோவில்களின் அழகை மட்டுமல்ல பரப்பையும் பெருக்கின. இதனால் கோவில்கள் மக்கள் பெருமளவில் கூடும் இடங்களாயின. இது காலப்போக்கில் கோயிலையே பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சந்தையாக்கிற்று. இதன் பயன் சோழர் காலத்தில் கோவிலை மையமாக் கொண்டு தேசத்தின் அரசியல் பொருளாதார சமுக போக்குகள் தீர்மானமாகும் அரசியல் கலாச்சாரம் தமிழரிடை முதன்மை பெற்றது.

## மக்களை மையமாகக் கொண்ட ஆட்சிக்கான கனவுகள்

வைணவத்தின் எவரும் இறைவனின் திருவுருவத் திருமேனி தொட்டுக் கும்பிட்டு அவனில் சரணாகதி அடையலாம் என்னும் தத்துவம், சாதாரண மனிதன் இடைத்தரகரின்றி இறைவழிபாடு செய்யும் போக்கை ஊக்குவித்தது. ஆழ்வார்களில் தொடங்கி ஆண்டாளின் ஊடாக எழுச்சி பெற்ற மக்களை மையமாகக் கொண்ட வழிபாட்டு முறைகள், கோயிலின் முக்கியத்துவத்தைக் குறைத்து தனிமனித முயற்சியால் இறைவனை அடையும் வழிகளை வளர்த்தன.

இதற்கு சிகரம் வைத்தாற் போல், கம்பன் எடுப்பாரும் கொடுப்பாரும் இல்லா உலகை காவியக்கனவாக்கி மக்களிடை மன்னராட்சியை விடுத்து, மக்களாட்சிக்கான கவிதா அழைப்பாக்கினான். இராமன் முடிசூட மக்கள்தலைகள் எல்லாமே முடிசூடியதாக மன்னராட்சியை மக்களாட்சியாகப் பரவல் படுத்திட சிந்தனை தொடுத்தவன் கம்பன். குவலயம் தனி அன்று பொது காண் என உலகமயமாக்கலை அன்றே சொன்னவன் கம்பன். இவ்வாறாகப் பெரியாழ்வார் முதல் கம்பன் வரை வைணவத்தால் மக்களை மையப்படுத்திய வழிபாடுகளையும், சமுக உறவுகளையும், பொருளாதார முறைமைகளையும், அரசியல் மாற்றங்களையும் கனவு கண்டனர். இதனால் மக்கள் என்ற எண்ணக்கரு முதன்மை பெற்ற பொழுது கோயிலை மையப்படுத்திய அதிகார முறைமை பரவலாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

## முத்திக்கு மட்டுமல்லாது வாழ்வின் சித்திக்கும் பக்தி

இதன் விளைவாக அரசுக்கு மக்களை மையப்படுத்தி ஆட்சி செலுத்துவதில் சிக்கல்கள் எழுந்தன. இதனால் அரசர்களும் அரச உயர் அதிகாரிகளும் கூட, கோயிலை மையப்படுத்திய ஆட்சி முறைமையை மீளமைக்க, சைவவாழ்வுக்கு மக்களை மீளவைக்க முயன்றனர். இதன் இலக்கிய எடுத்துக்காட்டாக பாண்டிய அமைச்சர் மாணிக்கவாசகரும் சோழ முதலமைச்சர் சேக்கிழாரும், சைவத்தின் வழி தேச உருவாக்கத்தினையே முன்னின்று நடத்தி மக்களை இணைக்கும் சக்தியாகச் சைவத்தை மாற்றிய வரலாறு பிறந்தது. இதனால் பக்தி வழி மண்ணாண்ட மன்னர்கள், பின்னர் கோயில் வழி தம் ஆட்சி நிலைப்படுத்தும் சமுக அரசியல் பொருளாதார சூழ்நிலையே தமிழர் வரலாறாகத் தொடர்ந்தது. இது பக்தி முத்திக்கு மட்டுமல்லாது தமிழர் வாழ்வியல் சித்திக்கும் சக்தியாகிறது என்னும் உண்மையை உறுதிசெய்தது.

## பக்திப்பேரலை அடக்கியும் அடங்காது திருமுறையாகியது

இந்தப் பின்னணியிலேயே கி. பி. 985க்கும் 1014க்குமிடைப்பட்ட காலத்தில் சோழப்பேரரசை நிறுவிய இராசஇராசன் மற்றும் முதலாம் இராசேந்திரன் ஆகியோரின் காலத்தவரான நம்பியாண்ட நம்பி அரச விருப்புக்கமைய பாடலாகப் பரவி நின்ற பக்தித் தமிழிலக்கியத்தை தேடித் தொகுத்தார்.

பொல்லாப்பிள்ளையார் ஏடுகள் இருக்குமிடம் காட்ட நம்பியாண்ட நம்பி தில்லையில் பண்ட அறைக்குள் பாண்டு பிடித்துக்கிடந்த தேவார ஏடுகளை எடுத்திட இராசஇராசனின் துணை கேட்டார். கோயில் மேலாண்மைகள் பா ஏடுகளை பண்ட அறைக்குள் வைத்துப் பூட்டியது தேவார முதலிகள் மூவராணையில் என்றும் அவர்கள் வந்தாலே தாழ் திறக்க முடியுமென்றும் வாதிட்டனர் வேதியர். மாமன்னன் மூவரின் திருவுருவம் செய்து தில்லைப் பண்ட அறைவாயில் நிறுத்தி வந்தனர் மூவரும் தந்திடுக திறவுகோல் என்றான். சிலையென திறப்புத் தர மறுத்தவர்க்கு இவர்கள் சிலை என்றால் தில்லையில் நட்டமிடும் நடராஜனும் சிலை தானோ என மாமன்னன் எதிர்வாதமிட இறங்கி வந்து பண்ட அறைக்கதவின் திறப்பினை கொடுத்தனர்.

ஆலயக் கருவறையுள் அரிபட்ட ஓலைகளாய் கரிமண்டிக் கிடந்த பக்திப்படைப்புக்களை மீட்கும் சமுதாயத் தேவை இவ்வாறாகப் 10ம் நூற்றாண்டில் தொடங்கியது. பக்திப்பேரலை அடக்கியும் அடங்காது திருமுறையாகித் தெய்வத் தமிழ் மணம் பரப்பத் தொடங்கியது.

## வரலாற்று ரீதியாகப் பார்ப்பின் நாதமுனி வழியில்

வரலாற்று ரீதியாகத் திருமுறைகள் தொகுக்கப்பட்டமைக்கு நாதமுனி வைணவத்தின் பிரபந்தங்களைத் தொகுத்தமைக்குக் காரணம் என்பது சில ஆய்வாளர்களின் கருத்து. கோயில் பண்பாடு சோழர் காலத்து அரசியல் பொருளாதாரச் செல்நெறியாக மாறியது கண்டு, நாதமுனி வைணவத்துக்கு அதன் பக்திப்பாடல்களை நாலாயிரம் திவ்விய பிரபந்தம் என்ற பெயரில் தொகுத்து, இசைமுறை வகுத்து அதனை வேதத்துக்குச் சமானமானதாக மக்கள் முன்வைத்தார்.

இதனால் மக்களிடை வைணவம் பெருவளர்ச்சி கண்டது. இந்நிலையை மாற்ற சைவத்தை முதன்மை மதமாகப் போற்றிய சோழர்கள் மக்கள் தேவாரங்களை அறியவும், ஆலயங்களில் அவற்றைப் பாடவும் எடுத்த முதன் முயற்சியே அதுவரை தொகுக்கப்படாதிருந்த தேவாரங்களைத் திருமுறைகளாகத் தொகுத்த நிகழ்வு எனலாம்.

### சோழர் கால முயற்சியின் வித்தாகத் திருஞானசம்பந்தர்

சோழர் காலத்துச் சிந்தனையாகிய பக்திப்பாடல்களை மக்கள் மயப்படுத்தல் என்பது உண்மையில் திருஞானசம்பந்தரால் முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டம் எனலாம். திருஞானசம்பந்தர் சிவம் ஆலயத்துள் மட்டும் அடக்கப்படக் கூடாதென்னும் தெளிந்த சிந்தனையுடையவர். இதனை திருஞானசம்பந்தர் தில்லையில் தங்காது திருவேட்களத்தில் தங்கியமை குறித்த பெரிய புராண குறிப்பான "அல்கும் திறம் அஞ்சுவார் சண்பை ஆண்டகையார்" என்பதினாலும் அதற்கு திரு வி.க அளித்த விளக்கமாகிய " தில்லை தொழுதற்குரியதன்றித் தங்குவதற்குரியதன்று என்று பிள்ளையார் கருதினார் போலும் என்னும் உரையாலும் அறியலாம். இதன் வழி மக்கள் வாழ்வும் கோயில் என்னும் சமூக நிறுவனமும் அரசமுயற்சியினூடாக இணைக்கப்படுவது அரசின் இறைமை பலப்படுவதற்கான தேவையாகவும் மாறியது.

### நல்லாட்சிக்கு வழிசமைத்தலால் நாட்டின் பெருமாட்சியை நிறுவுதல்

இவ்வாறாக ஆலயத்தில் ஆண்டவனை வழிபட்டு அவன் சிந்தனையை மக்களிடை நிலைபெற வைத்து, நானாக வாழாது நாங்களாக இணைவுற்று நல்லாட்சியைப் பெறுவதுடன், நாட்டின் பெருமாட்சியை நிறுவவும் வாழ்வதே உண்மையான இறைவழிபாடு என்ற கருத்தினைத், திருஞானசம்பந்தர் திட்டமிட்டமுறையில் வளர்த்தார். இதனை மக்களிடை சிவசிந்தனையை பண்ணால் பரப்புவதால் திருஞானம்பந்தர் செயலுருக் கொடுத்தார் என்பது தமிழர் வரலாறாகிறது.

### இசைப்பணிக்குப் பொற்தாளம் இசைமறையாதிருக்க திருத்திட்டம்

இசை கொண்டு இறைவனைப் பாடிப்பரவும் அவர் பணிக்கு, அவர் பிஞ்சுக்கை நோகாது உமையவள் திருக்கோலக்காவில் பொற்தாளம் கொடுத்தாள். இது ஒருவகையில் சம்பந்தரின் இசையால் இறைபரப்பு பணிக்கு சிவசக்தி கொடுத்த அனுமதியாகவும் அமைந்தது. கூடவே ஞானசம்பந்தர் இசையால் இறைபரப்பு பணி சிறக்க, திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவர் பாணர் குடும்பத்தையும் திருஞானசம்பந்தருடன் இறையருள் இணைத்தது. இதன் வழி சம்பந்தர் பாடல்களுக்கு நரம்பிசை சேர்க்கும் பேற்றினை திருநீலகண்ட யாழ்ப்பாணர் பெற்றார். இவர் மரபில் வந்த பாணர் குலப் பெண்ணொருத்தியிடமே நம்பியாண்டார் நம்பியும் ராஜராஜ சோழனும் அசரீரியால் ஆற்றுப்படுத்தப்பட்டு, தாம் தொகுத்த திருமுறைகளுக்கு பண்ணிசை சேர்த்தமை பின்னைய வரலாறு.

### மக்கள் மயப்படுத்தியவர் திருநீலகண்டர் துணைசெய்தவர் நீலகண்ட யாழ்ப்பாணர்

திருநீலகண்ட யாழ்ப்பாணரின் யாழிசையே, சம்பந்தர் பாடல்களை மக்கள் மயப்படுத்துகிறது என்றெழுந்த கருத்தை மாற்ற, யாழிசைக்குள் அடங்காத பண் பாட வேண்டுமெனத் திருநீலகண்டர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி, இசைத்தமிழ் உலகையே அதிசயிக்க வைத்த "மாதர் மடப்பிடியும் மட வன்னமும்" என்று தொடங்கு பாடலைத் திருத்தருமபுரத்தில் சம்பந்தர் பாடினார். இதற்கு யாழ் இசை சேர்க்க இயலாது சோர்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர், யாழை முறித்தெறிய முயன்ற பொழுது அதனைத் தடுத்து இது இசையுலகிற்கு இழிவல்ல இறைவனின் திருவிளையாடலின் எழில் என்று, சம்பந்தர் திருநீல கண்ட யாழ்ப்பாணரை அமைதிப்படுத்தி அவர் இசைப்பணி

தொடரவைத்தார். இதனால் இந்தப் பாடலின் பண்ணாக யாழ்மூரி என்னும் புதிய பண்ணமைவு ஒன்றை இசையுலகு சம்பந்தர் வழி பெற்றது. இந்த வரலாற்றால் சம்பந்தர் பாடல்களை மக்கள் மயப்படுத்தியவர் இறைவன். யாழிசையால் துணை செய்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டது.

## செயலால் சாதியம் மாற்றிய சம்பந்தர்

இறையாணை என்றாலும் ஏற்க மறுத்த சாதிய வெறி பிடித்தவர்கள், சம்பந்தர் யாழ்ப்பாண நாயனாரை வேள்வித் தீயருகே அமரவைத்தமை கண்டு மனம் புழுங்கிய பொழுது, யாகத்தீ வலஞ்சுழியாய் எரிந்து சாதிய உணர்வை சாம்பலாக்கிய சத்திய தரிசனத்தை சம்பந்தர் வரலாற்றில் காணலாம். இது சாதியம் ஆன்மா சார்ந்தது என்றிருந்த அக்காலப் போக்கைத் தகர்த்து, சாதியம் உடலோடு அழிவது, அனைவருக்கும் முத்தி பெறும் உரிமையுண்டு என்ற புதிய செல்நெறியைத் தொடக்கியது. இந்த ஆன்மாவுக்கு சாதியில்லை என்கிற சிந்தனை மாற்றமே **ஒன்றே குலம் ஒருவனே தேவன்** என்னும் திருமூலரின் திருமந்திரத்தின் மகுடமுமாக அமைந்தது.

## திருத்தொண்டர் தொகைக்கு வித்திட்ட சம்பந்தர்

சம்பந்தர் செயலால் சமத்துவம் உணர்த்தியமையே, சுந்தரர் மெய்யடியார் அனைவரையும் அவர் எக்குலத்தவராயினும் ஏற்றிப்போற்றி தொழுதிட வேண்டுமென்னும், சங்கமர் வழிபாட்டினைத் தொடக்கிவைப்பதற்கு அடித்தளமிட்டது. பரவையாரைத் திருமணம் செய்ததன் பின்னர் ஆயிரங்கால் மண்டபத்திற்கு எழுந்தருளிய சுந்தரருக்கு, அங்கிருந்த சிவனடியார்களைக் கண்டதும் சிவனடியார்களைப் பாடித்துதித்திட வேண்டுமென்னும் வேணவா எழுந்தது.

அதனை இறைவனும் அனுமதித்து தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என இரண்டாவது தடவையாக சுந்தரருக்கு அடியெடுத்துக் கொடுக்கச், சுந்தரர் கொல்லிக்கௌவாணம் என்னும் பண்ணில் பதினொரு பாடல்களினூடாக, திருத்தொண்டர்த் தொகையினைத் திருவாரூரில் பாடியமை தமிழர் வரலாற்றின் மற்றொரு சிறப்பு.

## சம்பந்தரே சேக்கிழார் சமத்துவத்தின் ஆதாரமானார்

இந்த ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் மரபினை இலக்கியப்படுத்திய இன்தமிழ்ப்படைப்பாக சேக்கிழாரின் பெரிய புராணம் பிறந்தது. சேக்கிழார் சம்பந்தர் வழி சமத்துவ உணர்வினை ஊட்டும் உன்னதப் பணியினைச் செய்தார். அந்தணராகிய திருஞானசம்பந்தரை ஐயா என அழைக்காத சேக்கிழார், ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த திருநீலகண்டரை ஐயரே என இருமுறை விழித்தமை, தமிழினம் சாதியத்திலிருந்து விடுபடல் வேண்டுமென்னும் அழைப்பாக அமைந்தது.

இதனைத் தனது தெய்வச் சேக்கிழார் என்னும் நூலில் குறிப்பிடும் சென்னைப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத் தலைவர் முனைவர் அரங்க இராமலிங்கம் அவர்கள் சேக்கிழார் தான் தாழ்த்தப்பட்டோரை ஐயாவென அழைத்ததும் அல்லாமல் திருநாளைப்போவார் புராணத்தில் நந்தனாரைத் தில்லை வாழ் அந்தணரைக் கொண்டே ஐயரே என அழைத்தமையையும் குறிப்பிடுகின்றார்.

இது தமிழர் ஒற்றுமைக்குச் சைவநீதி உலகெலாம் ஓங்குதற்கு, மனித சமத்துவம் தமிழரிடை வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை எமக்கு உணர்த்துகிறது.

## சம்பந்தர் வழியிலேயே சித்தாந்தமும் பிறந்தது

தத்துவ ரீதியாக சம்பந்தர் பாடல்களின் கருத்தை விளக்கும் படைப்புக்களாகவே சைவசித்தாந்த நூல்கள் தொடர்ந்தன. அனைத்துச் சாதியினரிலும் உள்ள உயர்ந்தோரை, சாதி இனமத பேதமற்ற முறையில் போற்றும் மரபு, தமிழ் மரபாகச் சம்பந்தரால் தொடக்கி வைக்கப்பட்டது இந்த அடிப்படை மாற்றங்களின் வித்தாக அமைந்தது, பிராமணரான திருஞானசம்பந்தரின் துணிகரமான சிந்தனைகளும் செயற்பாடுகளுமே.

## தமிழர் சமுகவரலாற்றின் திருப்புமுனை

சித்தாந்த நூல்கள் பதின்நான்கில் எட்டினை எழுதிய உமாபதி சிவாச்சாரியார், சாதி கடந்து சாத்திரம் படைத்து, சாதியத்தை வேறுத்த சரித்திரத்தைப் படைத்திட, திருஞானசம்பந்தர் தோற்றுவித்த சாதி கடந்த சமய உறவே காரணமாகியது என்றால் மிகையாகாது. மறைஞானசம்பந்தர் பறைச்சேரி எனப்பட்ட நெசவாளர் குடியிருப்புக்குச் சென்று, அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் கையால் கூழ் வாங்கி அருந்துகையில், மறைஞானசம்பந்தரின் முழங்கையின் வழி வழிந்த கூழை, உமாபதி சிவாச்சாரியார் தான் குடித்த வரலாறு என்பது, தமிழர் சமுக வரலாற்றின் மிக முக்கிய திருப்புமுனைகளில் ஒன்றாகிறது. இந்த சமுகசமத்துவத்தை நிலைநாட்டியமைக்காக உமாபதிசிவாச்சாரியார் தில்லை வாழ் அந்தணர் கூட்டத்தவரால், சமுகவிலக்குச் செய்யப்பட்டு தில்லையின் எல்லையில் மடம் ஒன்றில் வாழ்ந்தே, அற்புதமான சித்தாந்த அட்டகத்தினை எழுதினார். தில்லைக் கொடி ஏற மறுத்தது, உமாபதி வந்து ஏற்றினாலே ஏறும் என அசரீரி ஒலித்ததின் காரணமாக அங்கு உமாபதி சிவாச்சாரியார் வந்து கொடிக்கவி பாடி கொடி ஏற வைத்தமை வரலாறாகிறது. இதன் வழி இறைவனே உமாபதி சிவாச்சாரியாரின் சமத்துவம் போற்றலை ஏற்றினார் என்பது தெளிவாகிறது.

## சாதியென்ற சொல்லுக்கு இனம் என்றே அர்த்தம்

உமாபதி சிவாச்சாரியாரின் சிவப்பிரகாசத்தில் வரும் “கன்மநெறி திரிவிதம்நற் சாதிஆயுப் போகக் கடன் அது என வரு மூன்றும் உயிர் ஒன்றில் கலத்தல் தொன்மையது” என்ற பாடலில் இனம் வாழ்நாள் துய்த்தல் ஆகிய மூன்றாகவும் முன்வினை உயிரில் கலக்கும் என சித்தாந்த அறிஞராகிய சி. சு. மணி அவர்கள் விளக்கம் எழுதியுள்ளார். இதன் வழி சாதி என்பது பிறப்பால் ஏற்படும் ஏற்றத் தாழ்வை குறிக்கவில்லை, பிறப்பு ஏற்படும் சார்புநிலையையே குறிக்கிறது என்பது தெளிவாக்கப்படுகிறது. இதனாலேயே சைவசித்தாந்தம் உடலோடு அழிவது சாதி என்ற தத்துவத்தைக் கூறியது. பிறப்புக்குக் காரணமாகிய உடல் அழிகையில் பிறப்புக்கு தற்சார்பான சாதியும் அழியும். எனவே ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதே யதார்த்தம் என்பதைச் சைவசித்தாந்தம் தெளிவாக்கியது. இதற்கான வித்து சம்பந்தராலேயே இடப்பெற்றது.


## மனித சமத்துவத்தை மதித்ததின் பயன்

திருஞானசம்பந்தர் மனித சமத்துவத்தில் உறுதி கொண்டு உறவு கொண்ட திருநீலகண்ட யாழ்ப்பாணப் பெரும்பாணர் தொடர் பரம்பரையிடமே, பக்தியிலக்கியத்தைப் பாடும் மரபு அழிவுகளுக்குத் தப்பி அடைக்கலம் புகுந்திருந்தது. மங்களகுடி என்னும் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மனைவியும் சம்பந்தர் பக்திப்பணிக்கு, அவர் சென்றவிடமெல்லாம் அவர் அருகிருந்து பணிசெய்த பெருமாட்டி. நம்பியாண்ட நம்பியும் சோழமாமன்னனும்

பொல்லாப்பிள்ளையார் முன் தமக்கு திருமுறைகளுக்குப் பண் அமைப்பதற்கான ஞானத்தைத் தரும்படி கேட்ட பொழுது, மங்களசூடியின் பரம்பரையில் வந்த பாணர்குலப் பெண் மங்களசூடி என்பவளிடமே சென்று பண்அமைக்கும் முறையினை அறியுமாறு, அசரீரியால் வழிநடத்தப் பட்டதாக மரபுக்கதையுண்டு. இவ்வழி சாத்திரமும் தோத்திரமும் மண்பட்டுப் போகாது பாதுகாத்து தமிழர்களின் தேசியத்தைப் பேணி வெளிப்படுத்தியது, சாதியால் புண்படுத்தப்பட்டு புறந்தள்ளி வைக்கப்பட்ட சாமானியத் தமிழனுக்கே உரியதாகிறது. ஊர் புறந்தள்ளினும் தான் புறந்தள்ளாத் தூயவன் இறைவன் என்பது திருமுறைகளை கண்டறிந்த வரலாற்றில் மட்டுமல்ல பண் அமைத்த வரலாற்றிலும் வெளிப்பட்டது.

## மேலாண்மைகள் சதி தகர்த்த மாமன்னனின் அறிவுத்திறன்

திருமுறைகளைச் சோழமாமன்னன் ஆணையில் நம்பியாண்ட நம்பி தேடிய பொழுதும், ஆலய மேலாண்மைகள் பக்தி இலக்கியங்கள் மக்கள் மயப்படுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில், தேவாரம் பாடிய மூவரும் உயிருடன் வந்தாலே ஏடுகள் உள்ள அறையின் திறப்பினை தரமுடியுமென நிபந்தனை விதித்தனர். இதனை அறிந்த மாமன்னன் ராஜாதிராஜன் தேவார முதலிகள் மூவர் உருவையும் ஊரறிய பல்லக்கில் கொண்டு வந்து ஆலய மேலாண்மைகள் முன் நிறுத்தி, மூவரும் வந்தனர் திறப்பைத் தாருங்கள் எனக் கேட்டார். அவற்றைச் சிலை என்று கூறி மீளவும் ஆலய மேலாண்மைகள் திறப்பை கொடுக்க மறுத்தனர். இவை சிலை என்றால் தில்லையில் நடனமாடும் நடராஜரும் சிலையோ என மன்னவன் வெகுண்டு எழுந்தான். இதற்கு மறுப்புரைக்க இயலாத ஆலய மேலாண்மைகள் தேவாரங்களை வைத்துப் பூட்டியிருந்த அறையின் திறப்பை மன்னனிடம் ஒப்படைத்தனர். இவ்வாறே தேவாரங்கள் வைத்துப் பூட்டப்பட்டிருந்த அறையின் திறப்புப் பெறப்பட்டதென்பது பலரும் அறிந்த வரலாறு. இந்த வரலாறு அப்பர் சம்பந்தர் தொடக்கிய பக்திப்பேரலை அடக்கியும் அடங்காது மக்கள் இதயத்தில் நிலைத்து, தமிழ் இலக்கியத்தில் திருமுறையாகிய தன்மையை எடுத்து விளக்குவதாக உள்ளது.



## திருக்கோளறு பதிகத்தின் அமைப்பு

திருக்கோளறு பதிகம் நாளும் கோளும் இறைவனின் ஆட்சிக்குட்பட்டவைகளே ஆதலால் உள்ளத்தில் இறைவன் இருக்கையில் அவைகளால் நல்ல நல்லனவற்றையே செய்திட இயலும். இதனால் நாளும் கோளும் சிவனடியார்களுக்குத் தீங்கிழைக்காதென உறுதியாக எடுத்தியம்பப் பாடப்பட்டது.

### பொது அமைப்புக்கு அமைவாகும் தன்மை

ஆயினும் திருஞானசம்பந்தரின் பதிகங்களுக்கு உள்ள பொது அமைப்பு முறை இங்கும் கடைப்பிடிக்கப் பட்டுள்ளமையையும் காணலாம். 1-7 பாடல்கள் சிவசக்தியின் ஆற்றலையும் அடியார்களுக்கு அருளலையும் விளக்கும். 8வது பாடல் இராவணன் இறையருள் நிறைவாகப் பெற்றும் அதனை உரியவாறு வாழ்வுக்குப் பயன்படுத்தாத தன்மையும் அதனால் ஏற்பட்ட அழிவும் விளக்கப்படும். 9வது பாடல் படைத்தல் கடவுளாகிய பிரம்மாவும் காத்தல் கடவுளாகிய திருமாலும் அடிமுடி தேடி இறைவனைக் காணாத் தன்மை குறித்தும் மற்றும் இவர்கள் சங்காரகாலத்தில் சிவத்தில் ஒடுங்குதல் குறித்தும் பேசி சிவமே மூலமூர்த்தியென்பது உறுதி செய்யப்படும். 10வது பாடல் சமண பௌத்த சமயங்களின் நிலையாமை பற்றிய தத்துவங்களின் போலித்தனத்தை தோலுரித்துக் காட்டும். 11வது பாடல் திருக்கடைக்காப்புப் பாடலாக யாரால் பாடப்பெற்றதென்பதும் பதிகத்தைப் படிப்பதின் பாடுவதன் பலன் என்னவென்றும் கூறப்படும். திருஞானசம்பந்தர் பாடல்களின் பொது அமைப்பினை திருக்கோளறு பதிகமும் கொண்டுள்ளது.

### திருக்கோளறுபதிகத்தின் அமைப்பின் சிறப்புத்தன்மை


இனித் திருக்கோளறு பதிகத்தின் சிறப்பு அமைப்பு முறையை எடுத்து நோக்கினால், முதலாவது பாடல் கோள்கள் உள்ளத்தில் இறைவன் இருப்பதால் தீங்கிழையாது நன்மையே செய்யுமென உறுதி கூறுகிறது. இரண்டாவது பாடல் நாட்கள் நட்சத்திரங்கள் தீங்கிழையாது நன்மையே புரியுமென உறுதிப்படுத்துகிறது. மூன்றாவது பாடல் திருமகளும் மலைமகளும் கலைமகளும் திசைத்தெய்வங்களும் சிவனடியார்க்கு நல்லனவே செய்பவர்கள் ஆதலால் தீங்கேதும் வராதென்பதை எடுத்துரைக்கிறது. நான்காவது பாடலில் காலனும் அக்கினியும் இயமதூதரும் இயமனும் கொடிய உயிர்க்கொல்லிக் கிருமிகளும் சிவனடியார்க்கு நல்லனவே செய்வர் என்ற கருத்து விளக்கப்படுகிறது. ஐந்தாவது பாடலில் கோபங் கொண்ட அவுணரும் கொடிய வறுமையும் செருக்குடைய பூதங்களும் இடி மின்னல் போன்ற இயற்கை அழிவுகளும் சிவனடியார்க்குத் தீங்கிழையா என்றுரைக்கப்படுகிறது. ஆறாவது பாடலில் சிங்கம் புலி கரடி கொல் யானை வலிய குரங்கு பாம்பு காட்டுப்பன்றி போன்ற காட்டு மிருகங்களால் சிவனடியார்க்கு தீங்கு நேராதெனக் கூறுகிறார்.
ஏழாவது பாடலில் வெம்மை வாதம் பித்தம் சிலேத்துமம் என்பனவற்றால் ஏற்படும் நோய்களும் வாதைகளும் சிவனடியார்க்கு ஏற்படாது எனப் பாடுகிறார். எட்டாவது பாடல் இலங்கை மன்னன் இராவணனாலும் அரக்கர்களாலும் ஆழ்கடலாலும் தீங்கு நேரா எனப்பாடி அதே வேளை பொதுப்பண்புக்கு ஏற்ப இராவணனது பெற்ற வரத்தை உற்ற வழியில் பயன்படுத்தாத போக்கை நினைவுறுத்துகின்றார். 9வது பாடலில் பொதுப்பண்புக்கேற்ப பிரம்மா திருமால் சிவனுக்கு கட்டுப்பட்டவர்களே என்பதை வெளிப்படுத்திவிட்டு வேதங்கள், தேவர்கள், கெட்ட காலங்கள், அலைகடல், மேருமலை போன்றனவும் சிவனடியார்க்குத் தீங்கிழையா எனவும் கூறுகிறார். 10வது பாடலில் புத்தர்கள் சமணர்கள் போலித்தனத்தைப் பாடி கூடவே திருநீறு ஒன்றே அவர்களை வெல்லும் என அறுதியும் செய்கிறார். 11வது பாடலில் பொதுப் பண்புக்கேற்ப பதிகத்தைப் படிப்பதன் பயனைக் கூறுகிறார். வினைப்பயனால் தாமே வந்துறும் நாள்களும் கோள்களும் விளைவிக்கக் கூடிய தீமைகள்தானும் சிவனடியார்க்கு நல்லனவாகவே அமையும் எனத் தான் பாடிய இப்பத்துப்பாடலையும் பக்தியுடன் பாடுபவர்கள் வானுலகில் அரசாள்வார்கள் என்பது தமதாணையெனச் சம்பந்தர் சத்தியமொழி பகர்கின்றார்.

சிவமயம்
திருச்சிற்றம்பலம்



# திருக்கோளறு பதிகங்கள்

## திருக்கோளறு பதிகம் 01



1. வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

**பொழிப்பு** : இரு மூங்கில் கணுக்களின் இடைப்பட்ட பகுதி போன்று பளபளப்பும் வளவளப்பும் மிகுந்த மெல்லிய தோளினையுடைய உமையவளைத் தன் இடப்பங்காகக் கொண்டு விளங்கும் இறைவன் - ஆலகால விடத்தை உண்டு அதனைக் கழுத்திலே தாங்கிய விடமுண்ட கண்டன் - மிகநல்ல வீணையை மீட்டியவாறு - குற்றமில்லாச் சந்திரனையும் கங்கையையும் தலைமுடியின் மேல் அணிந்து என் உள்ளத்தில் புகுந்து கோயில் கொண்டிருப்பதனால் ஞாயிறும் திங்களும் செவ்வாயும் புதனும் வியாழனும் வெள்ளியும் சனியும் கூடவே பாம்புக்கிரகங்கள் என்று அழைக்கப்படும் ராகுவும் கேதுவும் குற்றமிலா நல்ல நலங்களையே விளைக்கும். அவை சிவனடியார்க்கும் நல்லனவற்றையே செய்யும்.

**விளக்கம்** : இப்பாடலிலே நினைவாற்றலாம் சிவம் தன் செயலாற்றலாம் சக்தியுடன் அர்த்த நாரீஸ்வர வடிவாய் நிற்கும் தன்மையை முதலில் சுட்டிக்காட்டும் திருஞான சம்பந்தர் அதன் வழி அண்டங்களைக் கோள்களை உலகை எல்லாம் இயக்கும்

சிவசக்தியின் முன்னால் எந்தக் கோளும் நாளும் தீங்கிழைக்கமாட்டா என்கிற தத்துவத்தை முதலில் மனதிருத்துகிறார். முதலாவது பாடலை வேயுறு தோளிபங்கன் எனத் தொடங்கி அம்மையும் அப்பனுமாய் இறைவன் திகழ் காட்சியை அகக்காட்சியாக பாடலைச் சுவைப்பவர் மனதில் முன்னிலைப்படுத்துகிறார். இந்தக் காட்சியே தோணிபுரத்தில் சம்பந்தர் அழுதபொழுது உமையவள் பாலூட்ட வந்தபொழுது கண்ட அருட்கோலம். அன்று பார்வதி பருக்கிய அந்தப்பாலே சம்பந்தரைத் திருஞான சம்பந்தராக்கியது. சம்பந்தர் பிஞ்சு உதட்டில் அருட்பெருக்கு பாலாகி சிவஞானத் திருப்பெருக்கான இந்தக் காட்சியை தெய்வச் சேக்கிழார்

"சிவன் அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமைஇலாக் கலைஞானம் உணர்வுஅரிய மெய்ஞ்ஞானம்
தவம் முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்"

என அழகுதமிழில் அற்புதமாகப் பெரிய புராணத்தில் விளக்கிச் சென்றுள்ளார்.

அந்த வகையில் தனக்கு ஞானம் தந்த தோணிபுரத்து அம்மையப்பனை பிரமாபுரத்து தான் கண்ட அந்தத் தோற்றத்திலேயே திருக்கோளறு முதற்பதிகத்தில் வெளிப்படுத்தச் சம்பந்தர் முனைந்துள்ளார். மேலும் சீகாழித் திருப்பதியில் இறைவன் மூங்கில் வடிவில் தோன்றியதால் அதற்கு வேணுபுரம் என்னும் பெயரும் உண்டு. இந்தத் தொடர்பை நினைவுறுத்தும் வகையில் உயர்வளர் மூங்கிலை உமையவள் தோளுக்கு உவமையாக்கி வேயுயர் தோளி பங்கன் எனத் திருஞானசம்பந்தர் திருக்கோளறு பதிகத்தைத் தொடங்குகிறார்.

அடுத்து விடமுண்ட கண்டன் எனக்கூறி உலகத்தை அழிக்க வந்த ஆலகால விடத்தைக் கழுத்தில் ஏந்தி, நீலகண்டனாகச் சிவன் அருட்கோலம் காட்டிய சம்பவத்தைச் சம்பந்தர் நினைவுறுத்துகின்றார். தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் பெறவென மேருமலையை மத்தாகவும் வாசுகிப்பாம்மை மத்துக்கயிறாகவும் கொண்டு, பாற்கடலை கடைந்த பொழுது முதலில் இலட்சுமி (செல்வம்) சரசுவதி ( கல்வி) கௌஸ்துயம் (நகைகள்) ஐராவதம் (வெள்ளையானை) உச்சைஸ்ரவசம் (குதிரை) கற்பகதரு (விரும்பியதை எல்லாம் தருவது) காமதேனு (அடைய விரும்புவதை எல்லாம் அடையச் செய்வது) இவைகள் வெளிவந்தன. ஆனாலும் ஆசை அடங்காது சாகாநிலை அளிக்கும் அமுதத்தை அடையவெனத் தொடர்ந்தும் கடலைக் கடைந்தனர். இதனால் வாசுகிக்கு ஏற்பட்ட வலி மிகுதியாக அது ஆலகால விடத்தைக் கக்கியது. இது தேவர்களையும் அசுரர்களையும் விட்டுத் துரத்தத் தொடங்கியது. உயிருக்கு அஞ்சி அனைத்துலகும் ஓடிய தேவர்களும் அசுரர்களும் இறுதியில் சிவனிடத்திலே தஞ்சமடைந்தனர். சிவன் ஆலகால விடத்தை தானே உண்டு தன் கழுத்தில் அதனைத் தாங்கினார். இதனால் கழுத்து விடத்தால் கருநீல நிறமாக மாற விடமுண்டகண்டன் என்ற திருப்பெயரும் அவருக்கு ஏற்பட்டது. இப்புராண வரலாற்றை இங்கு கூறுவதன் மூலம் பிறர் வாழ தன் கழுத்தில் நஞ்சேற்று நிற்கும் ஆலால சுந்தரரான இறைவன் நாம் வாழ நமக்கு எத்துன்பமும் வர அனுமதியார் எனவே நாளும் கோளும் அவனடியார்க்கு தீங்கிழைக்க அனுமதியார் எனச் சம்பந்தர் உள நம்பிக்கை அளிக்கின்றார்.

இருளே நெருங்க இயலாத ஒளிமயமான இறைவனைக் கழுத்தில் இருள்நிற நீலக்கறையுள்ளவனாகக் காட்டுவது, சிலதை விளக்குவதற்கான புராணக்கதை உத்தியென்கிறார் திருமூலர். உண்மையில் கரு நீலக் கழுத்தினனாய் இறைவன் தன்னை வெளிப்படுத்தியது, தன் கருணை கொண்டு அதோ முகம் கொண்டு (ஆறுமுகனாக), உலகில் ஆணவத்தை அதர்மத்தை அநீதியை அழித்துச், சத்தியத்தை உண்மையை நிலைநாட்டும் நிலையில் என்று, திருமூலர் கூறுவதை இவ்விடத்தில் மனங்கொள்வது, தத்துவத் தவறு ஏற்படாது பரம்பொருள் தன்மையைச் சரிவர விளக்கும் நம்முன்னோர் நோக்கை மனதிருத்த உதவும்.

“அண்டமொ(டு) எண்டிசை தாங்கும் அதோமுகம்
கண்டங் கறுத்த கருத்தறிவாரில்லை
உண்டது நஞ்சென்றுரைப்பர் உணர்விலோர்
வெண்தலை மாலை விரிசடை யோற்கே.”

என்பது சிவபெருமானின் கழுத்தில் கருமை குறித்த திருமூலரின் விளக்கமாக உள்ளது.

மேலும், மிக நல்ல வீணை தடவி என்பதன் மூலம் வாமன அவதாரத்தில் திருமாலின் வெற்றி மமதை அடக்கப்பட்ட சம்பவம் நினைவுக்கு கொண்டு வரப்படுகிறது. குட்டைப் பிராமணனாக கையில் வீணாதண்டத்துடன் வந்த திருமால், கேட்பதை இல்லையென்னாது கொடுக்கும் மகாபலியிடம் மூன்றடி மண் யாசிக்கின்றார். அவன் நகைப்புடன் கொடுக்கச் சம்மதித்ததும், ஓரடியால் மண்ணையும் மறு அடியால் விண்ணையும் அளந்த நிலையில் மூன்றாவது அடியை, மகாபலியின் தலைமேல் வைத்து அவனை நிலத்துள் அழுத்தி, உலகை அவனுடைய கொடிய ஆட்சியிலிருந்து விடுவிக்கின்றார். இதனையடுத்து வெற்றி தந்த அகங்காரத்தில், விஸ்ணு உலகையே அழிக்க முயல்கிறார். இதனைத் தடுத்து உலகைக் காக்க, வைரவரைச் சிவன் அனுப்ப, அவர் விஸ்ணுவின் விசுவரூபத்தைச் சங்காரம் செய்கின்றார். அந்நேரத்தில் கையிலிருந்த வீணையை, வைரவர் எடுத்ததன் பின்னரே விஸ்ணுவை அவர் சங்காரம் செய்கின்றார். இந்த திருமாலின் வெற்றி மமதையை அடக்கிய சம்பவத்தின் நினைவாகச் சிவன் பைரவரால் கொடுக்கப்பட்ட வீணையுடன் காட்சி நல்குகிறார் என்கிறது புராணம். இதனை இப்பாடலில் சுட்டிக்காட்டும் திருஞானசம்பந்தர், காத்தல் தொழில் செய்யும் திருமாலால் அழிவு நேரும் பொழுதும் கூட, அதனைத் தடுத்து உய்விக்கும் சிவன் அருளின் முன், கோளும் நாளும் தீங்கிழைக்க இயலாதென்பதை உறுதி செய்கிறார்.



தொடர்ந்து, மாசறு சந்திரன், கங்கை, சிவபெருமானின் முடி மேல் திகழ் காட்சியை படிப்பவர் மனக்காட்சியாக்குகின்றார். தக்கனின் மகள்களான நட்சத்திரங்கள் 27ஐயும் மணந்த சந்திரன், அவர்களில் அழகுமிகு உரோகிணி மேல் தனியன்பு காட்டினான். இதனால் மனத்துன்பமடைந்த மற்றைய 26 நட்சத்திரப் பெண்களும், தந்தையான தக்கனிடம் முறையிட்டன. வெகுண்டெழுந்த தக்கன், சந்திரனின் வளர்கலைகள் வளராது ஒழிகவென சபித்தான். இதனால் சந்திரன் ஒளியிழந்து போகும் அபாயம் ஏற்பட்டது. சந்திரன் வானவர் அரசன் இந்திரனிடமும், படைக்கும் மூர்த்தியாம் பிரம்மாவிடமும், காத்தல் மூர்த்தியாம் திருமாலிடமும் முறையிட, அவர்கள் தங்களுக்கு ஏதும் செய்ய இயலாதென்று, சிவனிடத்தில் முறையிடுமாறு கூறினர். சந்திரன் சிவனிடத்தில் வேண்ட, சிவனும் சந்திரனுக்கு இரங்கி, பிறையாக இருந்த சந்திரனை தன் இடப்பக்க தலையணியாக இருத்தி, இனி இங்கு வந்து உன்னை அழிக்க எவராலும் முடியாது. ஆயினும் நீ செய்த தவறுக்கு இடப்பட்ட சாபமாகையால், 15 நாட்களுக்கு வளர்வதும், பின் 15 நாட்களுக்குத் தேய்ந்து அழிவதுமாக, நீ அமைவாய் என்றார். சந்திரனின்

செயலுக்கு நீதியும் குரலுக்கு அபயமும் அளித்த இச்சம்பவத்தைக் கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்தில் விபரித்துள்ளார். இதனை இங்கு நினைவுறுத்தல் மூலம் திருஞான சம்பந்தர், சிவனால் பாதுகாக்கப்படும் நிலையில் சந்திரனேயிருக்க, நாளும் கோளும் சிவத்திற்கு எதிராய் இயங்கிட இயலாதென்பதை வலியுறுத்துகின்றார்.

ஆயினும், சந்திரசேகர மூர்த்தியாய் அமைந்த இத்திருக்கோலம் குறித்து, சுப்பிரபேத ஆகமம் இன்னொரு விளக்கம் தருகிறது. தாருகாவனத்து முனிவர்கள், உலகம் கடவுளால் அல்ல, இயற்கை நியதியினாலேயே இயங்குகிறது என்றனர். அதுவும் தங்கள் மனைவியரின் கற்பின் வலிமையினாலேயே அந்த இயற்கை நியதி செவ்வனே செயற்படுகிறது என்றனர். இந்த நாத்திக அகங்காரத்தை அழிக்கவென ஆடைகள் அணியாப் பிச்சாடன மூர்த்தியாகச் சிவனே எழுந்தருளிய பொழுது முனிபத்தினிகள் அதிகாம வயப்பட்டு அவர் பின்னே சென்றனர். தங்கள் பத்தினிகளை மோகங்கொண்டு கற்பு நிலை தவற வைத்த சிவனை அழிக்கவெனத் தாருகாவனத்து முனிவர்கள் வேள்வி செய்தனர். அப்பொழுது தோன்றிய மழுவையும் மானையும் இறைவனை அழிக்குமாறு இறைவன் மேல் ஏவினர். சிவன் அவற்றை செயலிழக்கவைத்து தமது இரு திருக்கரங்களிலும் ஏந்தினார். தொடர்ந்து வேள்வியில் இருந்து கொல்யானையையும் சிங்கத்தையும் தோற்றுவித்து இறைவனை அழிக்கவென முனிவர்கள் ஏவிய பொழுது யானையையும் சிங்கத்தையும் கொன்று அவற்றின் தோலை ஆடையாக்கினார். பகைவரின் மண்டையோட்டை அணிந்து பிறையை தலையணியாக்கினார் எனச் சுப்பிரபேத ஆகமம் கூறுகிறது.

இவ்வாகமத்தின் படி சிவபெருமான் சூடி நிற்கும் பிறைச்சந்திரன் கிரகங்களுள் ஒன்றான நீல் ஆம்ஸ்ரோங் முதன் முதலில் கால்வைத்த சந்திரன் அல்ல என்பாரும் உளர். அண்டத்தில் உள்ள எல்லாச் சூரியர்களினதும் சந்திரன்களிதும் கூட்டு மொத்தமான சின்னமாக இலங்கும் சூரிய சந்திரர்களே இறை உருவத் திருமேனி அமைந்துள்ள சூரியனும் சந்திரனும் ஆகும் என்பது நம்முன்னோர் கருத்து.

மேலும் ஆணவம் அழிக்கப்படும் என்பதின் அடையாளமாகச் சிவன் தரித்துள்ள சின்னங்களில் ஒன்றே, இந்தப் பிறைச் சந்திரன் என்பதே நம் முன்னோர்கள் கருத்து. அதே வேளை சிவன் தன்னை அழிக்கவென யாகத்தீயில் நின்று முனிவர்கள் தோற்றுவித்த சந்திரனையே அடக்கித் தன் தலைமுடியில் இருத்தியிருக்கையில், வான்நிலவு, அடியாருக்கு நல்லனவே செய்யும் என எடுத்துரைப்பது, இப்பாடலின் நோக்காக உள்ளது.




அடுத்து தனது பிதிர்கள் மூவருக்குப் பிதிர்க்கடன் செய்யவென பரதன் சிவனை நோக்கி ஒற்றைக்காலில் கடும் தவமிருந்து ஆகாயகங்கையைப் பூமிக்குத் தருவித்த பொழுது, கங்கை விண்ணின்று இறங்கிய வேளை, அதன் பிரவாகத்தின் வீச்சால் உலகே அழியும் பேரபாயம் தோன்றியது. இதனைக் கண்டு பரதன் சிவனிடம் காத்தருளுமாறு வேண்ட கங்கையைச் சிவன் தன் சடையில் அடக்கி உலகைக்காத்து ஒரு சிறு கிளையை மட்டும் பரதன் பிதிர்க்கடன் செய்ய அனுப்பிய புராண வரலாற்றைத் திருஞானசம்பந்தர் நினைவு கூருகின்றார். இதனை மாணிக்க வாசகர் திருச்சாழலிலே

“மலைமகளை ஒரு பாகம் வைத்தலுமே மற்று ஒருத்தி
சலம்முகத்தால் அவன்சடையில் பாயும் அதுஏன் ஏடீ
சலம்முகத்தால் அவன் சடையில் பாய்ந்திலளேல் நாணிஎல்லாம்
பிலமுகத்தே புகப் பாய்ந்து பெரும்கேடு ஆம்சாழலோ”

எனக் கேள்வி பதிலாகப் பாடி விளக்குகின்றார். கங்கையினால் ஏற்படுத்தப்பட இருந்த அழிவைத் தடுத்த இந்தச் சம்பவத்தை நினைவுகூருவதற்கே, **“கங்கை முடிமேல் அணிந்தென்”** என்கிறார் திருஞானசம்பந்தர். இதன்வழி நாளும் கோளும் தீங்கிழைக்க முயன்றால், கங்கையை அடக்கியது போல அவற்றைச் சிவன் அடக்குவார் என்கிற நம்பிக்கையூட்டப்படுகிறது.

இவ்வாறு, ஆன்மீகத் தத்துவங்கள் கூறியும், மக்களிடை வழக்கிலிருந்த புராணக்கதைகளை நினைவுறுத்தியும், திருஞானசம்பந்தர் தன்னை மங்கையர்க்கரசியின் அழைப்பை ஏற்று மதுரைக்குச் சமணருடன் வாதாடச் செல்ல வேண்டாமெனத் தடுத்த அப்பருக்கும், நாள் என்றும் கோள் என்று தடுமாறும் மக்களுக்கும், ஒரு செய்தி சொல்கின்றார். இறைவனை நெஞ்சிருத்தி வாழ்பவர்க்கு, நாளும் கோளும் விதிப்படி, எது செய்தாலும் கூட, அதனை வெல்லும் சக்தியாக இறைவனின் திருவருள் அவர்களுக்குத் துணையிருக்கும் என்பதே அச்செய்தி.

இவ்வாறு இறை நம்பிக்கையே நெஞ்சுக்கு என்றும் துணை என்பதை, அடித்துக் கூறிய பின்னரே சம்பந்தர், “ **ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி - சனிபாம்பு இரண்டும் உடனே - ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல - அடியார் அவர்க்கு மிகவே”** எனத் தன் மனக்கருத்தைப் பாடிப் பாடலை முடிக்கின்றார்.




திருஞானசம்பந்தரின் இந்த இறையடியார்க்கு நாளென் செய்யும் கோள் என் செய்யும் என்ற நம்பிக்கை, தமிழரின் ஆன்மீகச் சொத்தாகத் தொடர்வதற்கு உதாரணமாக அருணகிரிநாதரின்,

நாளென் செயும் வினைதானென்
செயும் எனை நாடி வந்த
கோளென் செயும் கொடுங் கூற்றுஎன்
செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே
வந்து தோன்றிடினே

என்னும் சந்தத்தமிழ் கந்தரலங்காரமாக, இன்தமிழ் இலக்கியப் பதிவாகத் திகழ்கிறது.

திருக்கோளறு பதிகம் 02



என்பொடு கொம்பொடாமை இவை மார்பு இலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பது ஒன்றோடு ஏழு பதினெட்டொடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பொழிப்பு : எலும்பும், பன்றிக்கொம்பும், ஆமையோடும், மார்பில் மாலையாக இலங்க. இடபத்தின் மேலேறி, உமையவள் உடனே, பொன் போன்று ஒளிரும் மகரந்தங்களைக் கொண்ட ஊமத்தை மலர் மாலையையும் கங்கையையும் சூடி, என் உள்ளம் புகுந்ததினால், அசுவினியை முதலாக உள்ள 27 நட்சத்திரங்களுக்கும் உரிய நாள்களில் ஆகாதனவாகிய 9வது (ஆயில்யம்), 10வது (மகம்), 16வது (விசாகம்), 18வது (கேட்டை), 6வது (திருவாதிரை), ஆகிய நாள்களும், மற்றும் உடனாய நாள்கள் எனக் கூறப்படும் பரணி, கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி ஆதியனவும் ஆகாத திதிகளும், கிழமைகளும் சிவன் மேலான அன்புடனே மிக நல்லனவே செய்யும். இதனால் சிவனடியார்களுக்கும் மிக நல்லனவே செய்யும்.

விளக்கவுரை : இப்பாடலில், உலகின் உயிர்கள் எல்லாம் சங்காரகாலத்தில் இறைவனில் ஒடுங்குகின்றன என்பதைக் குறிக்கவே, எலும்பு அணிந்த மேனியாகச் சிவத்திருமேனி இலங்குகிறது.

பன்றிக் கொம்பு அணிந்தமை, திருமாலை வராக அவதாரத்தில் சங்காரம் செய்தமையைக் குறிக்கிறதென்பர். இரணியாட்சன் என்னும் அசுரன், பிரமனிடம் எதையும் தான் கவர்ந்திட வரம் பெற்று பூமியைக் கவர்ந்து சென்றான். தனது சக்திகளில் ஒருத்தியான பூமாதேவியைக் கவர்ந்தமை கண்டு, திருமால் வராக அவதாரம் எடுத்து அந்த இரணியாட்சனைக் கொன்று பூமியை மீட்டார். ஆயினும் வெற்றியின் மமதையினால், வராக வடிவில் அனைத்துலகும் நடுங்கிடச் செய்தார். இதனால் தேவர்கள் சிவனிடம் முறையிட, அவர் சுப்பிரமணியனை வராகத்தை அழிக்கப் பணித்தார். தன் வேலால் சுப்பிரமணியன் வராகத்தை அழித்து, அதன் கொம்பைப் பிடுங்கி வந்து சிவனிடத்தில் சமர்ப்பித்தார். இந்த வெற்றியின் சின்னமே சிவன் பன்றிக்கொம்பு அணிதல் ஆயிற்று.



அவ்வாறே தேவர்களும் அரக்கர்களும் அமுதம் பெறவென, மந்தரகிரியை(மேருமலையை) மத்தாகவும், வாசுகியை மத்துக் கயிறாகவும் கொண்டு, பாற்கடலைக் கடைந்த பொழுது, மந்தரகிரி கடலில் ஆழத் தொடங்கியது. இதனால் தேவர்கள் திருமாலைத் தொழ அவர் ஆமையாக அவதாரமெடுத்து, அந்த மலையைத் தனது ஆமை ஓட்டு முதுகினால் தாங்கினார். பின்னர் மமதை கொண்டு, அந்த ஆமை கடல்களை கலக்கத், தேவர்கள் உலகைக் காக்குமாறு சிவனை வேண்டினர். சிவன் ஆமையை அடக்குமாறு விநாயகரைப் பணிக்க, அவர் தனது துதிக்கையால் கடல் நீரை உறிஞ்ச, அதனுடன் சேர்த்து ஆமையும் உள்வாங்கப்பட்டது. பின்னர் தரையில் மீளவும் கடல்நீரை வெளிவீசுகையில், ஆமை மண்ணில் விழுந்து மயங்கியது. பிள்ளையார் தனது தந்தத்தால் அந்த ஆமையைப் பிளந்து, ஆமையோட்டைச் சிவனுக்குச் சமர்ப்பித்தார். இதுவே சிவன் ஆமையோடணிந்தவராகக் காட்சியளிப்பதன் கதையாக உள்ளது.

இவ்வாறாக, மமதை கொண்டவர்கள் இறைவனால் அழிக்கப்படுவார்கள் என்கிற தத்துவத்தை விளக்கிய சம்பந்தர், 'நாளும் கோளும்', மமதை கொண்டு இறைவனுக்கு எதிராக நடந்தால் தாமும் தண்டிக்கப்படுவர் என்ற அச்சத்தால் சிவனடியார்க்குத் தீங்கு செய்யா என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றார்.

அடுத்து எருதேறி எனப் பாடுவது இரண்டு விடயங்களை விளக்குகிறது. ஒன்று தருமதேவதை, பிரம்மா விஸ்ணு போன்ற மூர்த்திகளும் அழிவதைக் கண்டு, தான் என்றும் அழியாதிருக்க இடபமாக இறைவனைத் தாங்கச் சிவனிடம் வரம் வேண்டியதால், சிவனின் வாகனமாக எருது மாறியது என்பதாகும். அடுத்தது திரிபுரத்தை சிவன் எரிக்கையில் தேவர்கள் செய்த தேரில் சிவன் ஏறியதும் தேரின் அச்சு சரிந்தது. அந்நேரம் திருமால் தான் இடபமாக மாறிச் சிவனைத் தாங்கினார். இவற்றை இங்கு நினைவுறுத்தும் சம்பந்தர் தருமமும் காத்தல் கடவுளும் கூட சிவனுக்கு சேவகனாக நிற்கையில், 'நாளும் கோளும்' சிவனடியார்க்குத் தீங்கு செய்யாதென்பதை வலியுறுத்துகிறார்.

மேலும் ஏழையுடனே என்பதில் ஏழை என்னும் பெண்ணைக் குறிக்கும் சொல்லால் உமையவளை குறிக்கும் சம்பந்தர், இதன் வழி சக்தி பெண்ணாக நின்று தவம் செய்து சிவத்தின் அருள் பெற்றதை நினைவுறுத்தி, சிவனருள் வேண்டிய சிவனடியார்க்கும் சிவன் நாளாலும் கோளாலும் தீங்குநேராது காப்பாரென்பதை வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறாக ஈசனின் திருவருள் பெருக்கை நினைவு கூர்ந்து அவனே தன் இதயத்தில் கோவில் கொண்டிருப்பதால் 'நாளும் கோளும்' எதுவும் செய்யாதெனப் பிரகடனப்படுத்துகிறார் சம்பந்தர்.

அடுத்து சம்பந்தர் சோதிட மொழியிலேயே நட்சத்திரங்களின் நிலைகளை விளக்கி நாளும் கோளும் சிவனடியார்களுக்குத் தீங்கிழைக்காதென்னும் கருத்தை வலியுறுத்தும் பாங்கு சம்பந்தரின் சோதிட அறிவின் கவிதாமொழியாகிறது.


நட்சத்திரங்கள் 27

| | | |
|---|---|---|
| 1. அசுவினி | 10. மகம் | 19 மூலம் |
| 2. பரணி | 11. பூரம் | 12. பூராடம் |
| 3. கார்த்திகை | 12. உத்திரம் | 21. உத்திராடம் |
| 4. ரோகிணி | 13. அஸ்தம் | 22. திருவோணம் |
| 5. மிருகசீரிடம் | 14. சித்திரை | 23. அவிட்டம் |
| 6. திருவாதிரை | 15. சுவாதி | 24. சதயம் |
| 7. புனர்பூசம் | 16. விசாகம் | 25. பூரட்டாதி |
| 8. பூசம் | 17. அனுசம் | 26. உத்திரட்டாதி |
| 9. ஆயில்யம் | 18. கேட்டை | 27. ரேவதி |

முன்னைய காலத்தில், திருவாதிரையை ஆண்டின் முதலாகக் கொண்டு காலத்தைக் கணிக்கும் மரபும் தமிழரிடையிருந்ததெனவும், இந்தக் கணிப்பில் எழுதப்பட்ட சோதிடப்பாடல்களும் உள என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆதிரை பரணி ஆரல் ஆயில்ய முப்பூரம் கேட்டை
தீதறு விசாகம் சோதி சித்திரை மகம் ஈராறும்
மாதனம்கொண்டார் தாரார் வழிநடைப்பட்டார் மீளார்
பாய்தன்னில் படுத்தார் தேறார் பாம்பின்வாய்த் தேரைதானே

இக்கணிப்பில் 10வது சுவாதி, 16வது ஆயில்யம் 18வது பூரட்டாதி, 6வது பூராடம் எனவும் உடனாய நாட்கள், பரணி, கார்த்திகை, மகம், பூரம், விசாகம், கேட்டை என்பர். திருஞானசம்பந்தரின் காலத்தில் கார்த்திகை தீபத்தை வருடப்பிறப்பாகக் கொண்ட வழமையும் இருந்தது என்பது சில ஆய்வாளர்களின் கருத்து. இவ்வாறாகப் பல்வேறு சோதிடக் கணிப்புகள் இருந்தமையாலேயே பாடலில், திருஞானசம்பந்தர் எண்களையே நட்சத்திரங்களின் பெயர்களுக்குப் பதிலாகப் பாடிச்சென்றுள்ளார் என்பாரும் உளர்.






உருவளர் பவளமேனி ஒளிநீறணிந்து
உமையோடும் வெள்ளை விடை மேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வம் ஆனபலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பொழிப்பு : நீள் ஒளியாக வளரும் பவளமேனியில் வெண்மையாக ஒளிரும் திருநீறு அணிந்து உமையவளுடன் வெள்ளை எருத்தமர்ந்து மொட்டவிழ் கொன்றை மாலையும் சந்திரனும் முடிமேல் அணிந்து என் உள்ளம் புகுந்தவன் ஈசன் அதனால் திருமகளும் துர்க்கையும் வெற்றித் திருமகளும் நிலமகளும் அட்டத்திக்குப் பாலகர்களும் மற்றைய தெய்வங்களான பலவும் அரிய செல்வங்களையே(நெதியையே) சிவனுக்கு நல்லனவாகத் தரும். இதனால் சிவனடியார்களுக்கும் மிக நல்லனவாகவே தரும்.

விளக்கவுரை : இப்பாடலில் இலக்குமி சரஸ்வதி கொற்றவை உட்பட்ட அனைத்து தெய்வங்களும் சிவனடியார்களுக்கு நல்லனவே செய்யும் என்கிறார் திருஞான சம்பந்தர். உருவளர் பவள மேனி என்றதன் மூலம் பிரம்மாவும் விஸ்ணுவும் சிவனின் அடிமுடி தேடிய பொழுது, சிவன் நீள்ஒளியாய் நின்று, அவர்களாலும் அறியப்பட முடியாதவனாய்த் திகழ்ந்த வரலாறு நினைவுறுத்தப்படுகிறது. ஒளிநீறு என்பதால், திருமாலையும் பிரம்மாவையும் முன்னர் ஊழிச்சங்கார காலத்தில் உலகுடன் அழித்து, அந்த வெண்ணிறச் சாம்பலைத் தன்னில் தரித்த சிவனின், முழுமுதற்கடவுள் நிலையை விளக்குகிறார். இவ்வாறு முழுமுதற்கடவுளான சிவம் உள்ளத்திலிருக்கையில், திருமகளும் மலைமகளும் கலைமகளும் மற்றைய தெய்வங்களும் கூட, நாளுக்கு கோளுக்கு அமையாது, சிவனுக்கு அமைந்து, நல்லன நல்லன செய்வர். இதனால் சிவனடியார்க்கு நாளும் கோளும் மிக நல்லன நல்லனவே செய்யும் என்கிறார் திருஞானசம்பந்தர். நெதி என்ற சொல்லாட்சியைக் கையாண்டதன் மூலம் எல்லாவிதமான செல்வங்களையும் அவை தரும் என்பதை இப்பாடலால் திருஞானசம்பந்தர் உணர்த்தினார். அட்டதிக்குப் பாலகர்களைத் திருமூலர் பின்வருமாறு திருமந்திரத்தில் விளக்குகிறார். உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனும் - துதிக்கும் நிருதி வருணன் அனல்வாயு - மதிக்கும் குபேரன் வடதிசை ஈசன் - திதித்து எண்திசையும் நிறைந்து நின்றாரே" கிழக்கில் இந்திரன், தென்கிழக்கில் அக்கினியும், தெற்கில் இயமனும், தென்மேற்கே நிருதியும், மேற்கே வருணனும், வடமேற்கே வாயுவும், வடக்கில் குபேரனும் வடகிழக்கில் ஈசனும் அட்டதிக்குப் பாலகர்களாக திசைத்தெய்வங்களாக எம்மைக் காக்கின்றனர்" என்பதே திருமந்திரம் அட்டத்திக்குப் பாலகர்கள் குறித்து தரும் விளக்கமாகிறது.

திருக்கோளறு பதிகம் 04



மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்களா லான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பொழிப்பு : பிறைச்சந்திரன் போன்ற நெற்றியினை உடைய உமையவளுடன் தட்சணாமூர்த்தியாகக் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து, அறிவினையும் அவற்றின் தொகுப்பான வேதங்களையும் அருளிய எங்கள் பரமன் - கங்கையையும் கொன்றை மாலையையும் முடிமேல் அணிந்து எந்தன் உள்ளம் புகுந்ததினால் சினம் கொண்டு காலனோ அக்கினியோ இயமனோ இயமதூதர்களோ கொடிய நோய்களோ இவைபோன்ற துன்பம் தரக்கூடிய அனைத்தும் சிவனுக்குத் துன்பம் செய்யாது மிகவும் நல்லனவே செய்யும். ஆதலால் சிவனடியார்க்கும் இவை மிக நல்லனவே செய்வர்.

விளக்கவுரை : இப்பாடலில் முதலில் சக்தியின் சிவத்துடன் இணைந்த நிலை கூறி பிறைச்சந்திரன் இருளை அகற்றுதல் போல சக்தியவள் துன்ப இருளை அகற்றுவாள் என்பதைச் சம்பந்தர் விளக்குகிறார்.

அடுத்து கற்பாறையின் மேல் முளைக்கின்ற இச்சி என்ற சிறிய ஆலாகிய கல்லால மரத்தின் (வடம் - ஆலமரம்) கீழ், தென்முகமாகச் சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளி, பிரம்மாவின் மக்களாகிய, சனகர் சனந்தனர் சனாதரர் சனற்குமாரர் ஆகிய நால்வருக்கும் அறிவு விளக்கம் அளித்தமையை ஞானத்தை உணர்த்தியமையைத் திருஞானசம்பந்தர் நினைவு கூர்கின்றார்.

நான்கு வேதங்களையும் 64 கலைகளையும் கற்ற சனகாதி முனிவர்களுக்கு ஏற்பட்ட ஐயத்தை, யாராலும் எதனாலும் விளக்க இயலாத நிலையில், அவர்கள் சிவனிடம் தமது சந்தேகத்தை விளக்குமாறு கேட்டனர். சரியை கிரியை யோகம் என்னும் மூன்றையும் இறைவன் விளக்கினார். ஆனால் ஞானத்தைக் குறித்து விளக்கவில்லை. அதனையும் தங்களுக்கு விளக்கி அருளுமாறு சனகாமுனிவர்கள் வேண்ட, அந்நேரம், வாக்குகளுக்கு அப்பாற்பட்ட ஞானத்தைப் போதிக்கும் சின் முத்திரை வடிவத்தைக் கைகாட்ட, யோகநிலையில் அமர்ந்தார் தட்சிணாமூர்த்தி. இந்த அடிப்படையிலேயே யோகதட்சணா மூர்த்தி, வீணாதட்சணாமூர்த்தி, ஞானதட்சணாமூர்த்தி, வியாக்கியானதட்சணாமூர்த்தி என்னும் நால்வகை தட்சணாமூர்த்திகள் பூஜிக்கப்படுகின்றன. இதில் வியாக்கியான

தட்சணாமூர்த்தியே பொதுவாக ஆலயங்களில் உள்ள தட்சணாமூர்த்தியின் திருமுகூர்த்தமாக உள்ளது.

மேலும் ஞானம் நாவினால் நவில்தலுக்குரியதன்று, உணரப்பட வேண்டியது என்பதை வெளிப்படுத்தியது தட்சணாமூர்த்தியின் திருக்கோலம். சுட்டு விரல் ஆன்மாவைக் குறிக்கிறது. அந்த ஆன்மா ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களோடு இயல்பாகவே இணைந்து நிற்பதையே சுட்டு விரல் தனக்கருகே உள்ள மூன்று விரல்களுடனும் ஒட்டி நிற்பது விளக்குகிறது. ஆணவத்தை சுட்டு விரலுக்கு அடுத்ததாக உள்ள நீளமான விரலும், கன்மத்தை மோதிரவிரலும், மாயையைச் சின்ன விரலும் குறிக்கும். பெருவிரல் இறைவனைக் குறிப்பதினாலேயே, அது அளவில் சின்னதாக இருப்பினும் பெரியதாக கருதப்பட்டு பெருவிரல் எனப்பட்டது. சின்முத்திரையில் பெருவிரலுடன் சுட்டு விரல் தொட்டு நிற்கும் பொழுது, இறைவனுடன் தொடர்புறுகையில் ஆன்மா மும்மலங்களிலிருந்து விலகி நிற்கும் என்பது தெளிவுபடுத்தப்பட்டது. எனவே ஞானம் என்பது இறைவனுடன் இணைந்த ஆன்மாவுக்கே கிட்டும் என்பதும், மனிதனின் சுட்டறிவைக் கடந்து அவன் பேறறிவில் இணைய, இந்த இறைவனுடனான ஆன்ம இணைப்பு தேவை என்பதையும், சின்முத்திரை தெளிவாக்குகிறது. இவ்வாறு இறைவனால் அறிவுத் தெளிவு பெற்றவர்க்கு, ஞானம் பெற்றவர்க்குச் சினந்து வரும் காலனோ, நெருப்போ, இயமனோ, இயமதூதர்களோ, கொடுநோய்களோ தங்கள் இயல்புக் குணத்தைக் காட்ட இயலாது, நன்மையே செய்யும் என்பது சம்பந்தர் கருத்து.

இதில் காலன் என்பது நாம் இறப்பதற்கென விதிக்கப்பட்ட காலத்திற்கு முன் இயற்கையாகவே இறத்தலையும், அங்கி ( அக்கினி) என்பது உரிய காலத்திற்கு முன் விபத்தால் இறத்தலையும், யமன் என்பது உரிய காலத்தில் இறத்தலையும், யமதூதர் என்பது நன்மை செய்தவர்க்கு அவர் உயிர் பிரிந்ததும் மறு உலகிற்கு அவர்கள் செல்வதற்கு உதவும் இயமதூதர்களையும் குறிக்கிறது. இயமன் வேறு, அவனின் கூற்றுவர் வேறு, என்பது இங்கு தெளிவாக்கப்படுகிறது. திருஞானசம்பந்தர் மரணம் ஏற்படுவதில் உள்ள நால்வகை வேறுபாடுகளையும் சொல்லாட்சிகள் மூலம் மிக நுணுக்கமாக விளக்கி இவை எல்லாமும் காலம் நியதி என்ற தத்துவங்களின் வழி செயற்படுவன ஆனாலும் அதனையும் செயற்படுத்துவிப்பவன் இறைவன் என்ற உண்மையைத் தெளிவாக்குகிறார்.

மேலும் தட்சிணாமூர்த்தி மூர்த்தமும் நடராஜ மூர்த்தமும், ஆலயங்களில் தென்முகம் நோக்கியிருப்பதுடன், முயலகனை வலதுகாலின் கீழ் கொண்டுமுள்ளன. எமது மனத்து எண்ணங்கள் பலகோலங்கள் என்பதை எடுத்துக்காட்டும் சீரான வடிவமிலா முயலகனை இறைவனின் வலதுகால் மிதித்து நிற்பது, மனத்தை அடக்கும் சக்தி இறைவனுடன் தொடர்புறும் பொழுதே கிடைக்கும் என்பதை எடுத்து விளக்குகிறது. இறைவனின் சக்தி மறைப்பாற்றலென்னும் திரோதான சக்தியால், உயிர், கன்மங்களை அனுபவிக்க வைக்கிறது. இதனால் திசைதெரியாது நெளியும் ஆன்மாவுக்கு, இறைதொடர்பு என்பது, மனதை நிலைப்படுத்தி, மெய்யுணர்வு தோன்றச் செய்து, நன்மை தீமை இரண்டையும் பற்றின்றிப் பார்க்கும் இருவினை ஒப்பு ஏற்படவைக்கிறது.

அந்நேரத்தில், அதுவரை கன்மங்களை அனுபவிக்கத் துணை நின்ற திரோதான சக்தியே, திருவருட்சக்தியாகி, மலபரிபாகம் செய்து, சித்தத்தினுள்ளே சிவம்காட்டி, சிவேகம்பாவனை நிலையில் இவ்வுலகிலேயே இறைவனுடன் தாடலையாக ஆன்மா இணைந்து இன்புறும் பேரின்பநிலையை அளிக்கிறது. இதனால் ஞானம் என்பது மெய்யுணர்வு பெறுதற்கும், திருவடிச் சரணம் என்பது மலபரிபாகம் அடைவதற்கும், அவசியம் என்பதைக் காட்டவே, தட்சணா மூர்த்தி முயலகன் மேல் கால்பதித்து நிற்கின்றார்.

இறைவன் ‘தாங்கப்படுபவனாகவும் தாங்குபவனாகவும்’ உள்ளான் என இதனைச் சைவசித்தாந்தம் விளக்குகிறது. உயிர்கள் என்கிற எல்லாவற்றுக்கும் இந்தத் தொடர்பு தோன்றுதல் தேவை என்பதை வலியுறுத்தவே முயலகன் மனித வடிவு போன்ற ஆனால் மனிதவடிவில்லாத, ஒருவடிவில் அமைந்துள்ளான். தட்சணா மூர்த்தியின் திருவுருவம் “உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரிய” நெறி சைவநெறி என்னும் சேக்கிழாரின் பெரிய புராண தத்துவத்தின் காட்சி விளக்கமாகிறது.

மரணபயத்தால் வாழ்வினை வாழ்வாங்கு வாழாது தம் உயிரைக் காத்தலுக்கு முதலிடம் கொடுத்து அஞ்சி – அஞ்சி அஞ்சிச் சாவார் அவர் அஞ்ஞாத பொருளில்லை அவனியிலே என்னும் நிலையில் அச்சமும் ஐயமும் கொண்டு கலங்கும் மனதினர்க்குத் தென் திசையில் தட்சணா மூர்த்தி முகூர்த்தமும் நடராஜர் திருவுருவும் அமைந்து அறிவையும் உலகையும் இயக்கும் இறைவனின் துணை இயமனின் வருகையைத் தடுத்து இயமதிசையில் தென்திசையிலேயே உள்ளன, அஞ்சாதீர் என உள்ள உறுதி அளித்து பயமின்றி வாழ்வதற்கான உள்ள உறுதியை கொடுக்கின்றன.

மரணபயத்தைக் குறித்துச் சம்பந்தர் இப்பாடலில் எடுத்துரைப்பதன் மூலம் இந்த மரணம் குறித்த அச்சமும் ஐயமுமே, கோள்களின் மேலும் நாள்களின் மேலும் இறைவனை விட அதிக நம்பிக்கை கொள்ள வைக்கிறது என்பதை தெளிவுறுத்துகிறார். ஆயினும் இவை உயிர்களின் வினைவழி செயற்பட்டாலும், இறைவனின் திருவடியை ஆன்மா தாங்குகையில், அந்த அன்புறவால் ஆன்மாவை இறைவன் தான் தாங்கி, ஆன்மா துன்புறாதவாறு இன்புறச் செய்கிறான் என்பதைத் திருஞானசம்பந்தர் தெளிவாக விளக்குகிறார். இதுவே விடையின் மேல், அறத்தின் மேல் சிவன் எழும் புறத்தோற்றத்திற்கான விளக்கமுமாகிறது. இல்லறத்தை நல்லறமாக மாற்றும் ஆன்மா இறைவனைத் தாங்க, இறைவன் அதனைத் தாங்கித், தாங்குபவனும் தாங்கப்படுபவனுமாகிறான். எனவே இறைவனுடன் இரண்டறக் கலந்த வாழ்வில் உள்ள ஆன்மாவுக்கு, கோளும் நாளும் தீங்கினை செய்யாது நல்லனவே செய்யும் என்பது திருக்கோளாறுத் திருப்பதிகம் தரும் செய்தியாக உள்ளது.

## திருக்கோளறு பதிகம் 05



நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
 விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேலணிந்தென்
 உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
 மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
 அடியார் அவர்க்கு மிகவே

**பொழிப்பு :** பிறர் வாழத் தன் கழுத்தில் நஞ்சினைத் தாங்கிய எந்தந்தை, உமையவளுடன், அறத்தின் வடிவான இடபத்தில், அடர்ந்த இருண்ட வன்னி இலையையும் கொன்றை மாலையையும் அணிந்து, என் உள்ளம் புகுந்துள்ளதால் அரக்கர்களின் வெஞ்சினமும், வறுமையும், இடியும் மின்னலும், மற்றும் பூதங்களின் மிகைப்படுதலால் ஏற்படும் வரட்சியும், வெள்ளமும், பூகம்பமும், எரிமலையும், புயலும், கடற்பெருக்கும், சிவனுக்கு அஞ்சி, நல்லனவே நல்லனவே செய்தலால், அவன் அடியார்க்கும் நல்லனவே மிக நல்லனவே செய்யுமன்றி, தீங்கு செய்யா.

**விளக்கவுரை :** இப்பாடலில் பிறர் வாழத் தன் கழுத்திலே நஞ்சேற்ற இறைவனின் அருட்தோற்றம் முதலில் மனக்கண் முன் நிறுத்தப்படுகிறது. அந்த அன்புள்ளத்தால், எமக்கு வரும் துன்பங்களைத் துயரங்களை நோய்களை, அவை எம் வினைப்பயனாக இருப்பினும், அருட்பிரவாகத்தால் இறைவன் அவற்றின் தாக்கத்தை அவை வெளிப்படுத்தாதவாறு செய்து, நமக்கு அருள்வான் என்னும் நம்பிக்கை வளர்க்கப்படுகிறது. அடுத்து திருவருட்சக்தியாகிய உமையவளுடன் சிவன் திகழ் நிலை கூறி, தன் அருளை வெளிப்படுத்தும் நிலையிலேயே சிவம் உள்ளதென்ற உண்மை உணர்த்தப்படுகிறது. தொடர்ந்து அறத்தின் தருமத்தின் சின்னமாகிய, விடை மேல் இறைவன் வீற்றிருக்கும் கோலத்தைக் காட்டி திருவருள் கிடைப்பதற்கான நிபந்தனையாக அறம் செய்தல் உள்ளது என்பதைத் திருஞான சம்பந்தர் உணர்த்துகின்றார்.

ஆனால் எமது உள்ளம் அடர்ந்து நெருங்கியுள்ள வன்னிஇலைக் காட்டின் இருள் போல் இருளடைந்துள்ளது என்பதை எமக்குணர்த்த அடர்ந்துள்ளதால் கருமையாக காட்சி தரும் வன்னியிலை மாலையினை இறைவன் அணிந்துள்ளான் என்று கூறுகின்றார். இதன் வழி எல்லா இருளும் மனவிருள் உட்பட, அவனில் அடங்குகிறது. இதனை உணர்ந்து மன இருளை அகற்ற வேண்டுமானால், இறையருளை நாடுதலே இயல்பு வழி என்பதையும் திருஞானசம்பந்தர் எடுத்துரைக்கின்றார். மேலும் வன்னி என்பதற்கு அக்கினி என்ற பொருளும் உள்ளது. வன்னியிலை அணிதல் என்பது மும்மலங்களையும் எரிப்பவன் இறைவன் என்ற தத்துவப் பொருளிலும் அமைகிறது.

கொன்றை மாலையை அணிந்தவனாக இறைவனைப் பாடுவதும் எமது உள்ளத்திற்கு இறைவனே ஆதாரம் என்கிற நம்பிக்கையை வளர்ப்பதற்கே. கொன் என்பதற்கு அச்சம் காலம் பயனின்மை பெருமை என்பனவே தமிழில் பொருளாக உள்ளது. கொன்றை என்பது இந்த அச்சம் காலம் பயனின்மை பெருமை ஆகிய தன்மைகளை உடையதாக ஆன்மா விளங்குவதைக் குறிக்கும். கொன்றை மாலையை இறைவன் அணிதல் என்பது இவற்றை அவன் தாங்கி எமக்கு உறுதியை, நிலைத்த தன்மையை, செயலாற்றல் துணிவை, அர்த்தமுள்ள செயற்பாட்டை, அமைதியை அளிக்கிறான் என்பதைக் குறிக்கும். அதே வேளை, பொன்போன்ற மஞ்சள் மகரந்தத்தத்தைக் கொண்டு ஒளிவீசும் கொன்றை மலர், இருளகற்றி ஒளிதருபவன் இறைவன் என்பதையும் உணர்த்துகிறது. இறைவனின் தோற்றமே எம் மும்மலங்களின் வழியான வாழ்வையும் மாற்றும் வல்லமையுள்ளதாக இருப்பதால், அவன் திருவடி நிழல் வாழ் ஆன்மாவுக்குச், சினங்கொள்ளும் அவுணரும், இடிமின்னல் போன்ற இயற்கை அனர்த்தங்களும், கொடிய வறுமையும், செருக்குற்ற பூதங்களால் தோற்றுவிக்கப்படும் வரட்சியும், வெள்ளமும், பூகம்பமும், எரிமலையும், புயலும், கடற்பெருக்கும் தீங்கு இழைக்காது நன்மையே செய்யும் என்பது திருஞானசம்பந்தரின் உறுதி மொழியாகிறது

இங்கு மனிதனைத் தாக்கும் மூன்று தீயவை குறித்து திருஞானசம்பந்தர் பேசுகின்றார். ஒன்று பழிவாங்கும் உள்ளம் கொண்டோர் இதுவே வெஞ்சின அரக்கத்தன்மை. இரண்டாவது வறுமை என்னும் இல்லாமை. மூன்றாவது மின்னல் போல் திடீரெனத் தாக்கும் இயற்கை அழிவுகள். இவற்றுக்கு நாள்களும் கோள்களும் காரணமென மனித உள்ளம் அலைபாய்வது வழமை. இதனால் இறைவன் திருவடித் தாமரையைத் தாங்கும்

உள்ளம் கொண்டால் இந்தத் தீமைகளை நாள்களோ கோள்களோ செய்யா என்பதே திருஞானசம்பந்தர் நமக்குத் தரும் நம்பிக்கை மொழியாக அமைகிறது.

## திருக்கோளறு பதிகம் 06



வாள்வரிய தளதாடை வரிகோவ ணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானைகேழல்
கொடுநாக மோடுகரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பொழிப்பு : கூர்மையான வரிக்கோடுகளைக் கொண்ட புலித்தோலைத் தளர்வான மேலாடையாகவும், வரித்த கோவணத்தை உள்ளாடையாகவும் கொண்ட சிவன், உமையவளைப் பாகமாகவும், வன்னி இலை, கொன்றை மலர், கங்கையைத் தலையில் சூடியும் என் உள்ளம் புகுந்தனன். அதனால் சிங்கம், புலி, கரடி, மதங்கொண்ட கொலையானை, பன்றி (வராகம்), கொடிய நாகம் ஆதியன சிவனுக்கு நல்லனவே நல்லனவே செய்வதால் அவனடியார்க்கும் நல்லனவே நல்லனவே செய்யும்.

விளக்கவுரை : இப்பாடலில் தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய புலியைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்த இறைகோலம் முதலில் மனக்காட்சியாக்கப்படுகிறது. இதன் வழி ஆணவ முனைப்புற்றவர் ஒடுக்கப்படுவர் என்ற தத்துவம் வெளிப்படுத்தப்படுகிறது. வாள்வரி என்பதில் உள்ள கூர்மையான வரிகள் - விகற்பம் (தன்னை விடப் பிறர் ஒவ்வாரெனல்) கற்பம் ( பிடித்ததைப் பிடித்திருத்தல்) குரோதம் (கோபத்துடன் நினைத்தல்) மோகம் ( மிக்க ஆசைப்படுதல்) கொலை ( உயிரை அழித்தல்) அஞர் (எப்பொழுதும் எதற்கும் துக்கப்பட்டுக்கொண்டிருத்தல்) மதம் ( அகங்காரம் மேலிட்டநிலை) நகை ( பிறரை எள்ளிநகையாடுதல்) என்ற - ஆணவத்தின் எட்டு வகைகளையும் குறிக்கிறது. சிலர் ஒளியும் வரியும் பொருந்திய என வாள்வரி என்பதற்கு பொருள் கூறுதலும் உண்டு.

அடுத்து வரிகோவணம் அணிந்தவனாக இறைவன் சித்தரிக்கப்படுகிறான். கலை (அறிதல்) வித்தை ( அறிந்ததில் தெளிதல்) அராகம் (மேலும் மேலும் அறிவைப் புகழைச் செல்வத்தைத் தேடல் என்னும் நீங்கா அவா) மாயை ( உலகில் புகழில் செல்வத்தில் பெரிதாக மயங்கும் நிலை) என்னும் பரிமாணத்தைப் பெறுகையில் கலைகள் ஆணவத்தைக் கலைப்பதற்குப் பதிலாக ஆணவத்தை வளர்க்கும் தன்மையானதாகி விடும். அவ்வாறே வேதத்தில் வித்தகராகையில் நான் எனது என்ற அகங்கார மமகாரங்கள் மனதை மறைத்துவிடுவதும் உண்டு. இதனால் மறைகள் நான்குமே பெரிய


அரைநாணாகவும் நிலைபெற்ற மெய்நூலில் நிறைந்த பொருள் அதனையே கோவணமாகவும் கொண்டு உயிர்களின் உலகின் உற்பத்தியைக் குறிக்கும் .கருவாய் மறைப்புற்ற நிலையில் இறைவன் உருவ நிலையில் சித்தரிக்கப்பட்டான். இதனைப் பின்வரும் திருச்சாழல் பாட்டில் மாணிக்கவாசகர் தெளிவாக எடுத்து விளக்குகிறார்.

என் அப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்
துன்னம் பெய் கோவணமாகக் கொள்ளும் அது என் ஏடீ
மன்னு கலை துன்னுபொருள் மறை நான்கே வான் சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ

என்பது திருவாசகத்து திருச்சாழல் பாடல்.

இந்த ஆணவம் ஒடுக்கத்தை ஏற்படுத்தும் திருவருட்சக்தியாகிய உமையவளுடன் அன்று பூத்த (நாண் மலர்) மலர்களாகிய வன்னி கொன்றை மலர்களும் கங்கையும் தலையில் சூடி என் உள்ளத்தில் சிவன் புகுந்திருப்பதினால் கோளரி (ஆண் சிங்கம்) உழுவை (புலி – விடாது தொடர்வதை உழுவை என்பர். உழுவையன்பு) கொல்யானை கேழல் (காட்டுப்பன்றி) கொடிய நாகம் கரடி முதலானவை சிவனுக்கஞ்சி காத்தல் கடவுளாகிய திருமால் ( ஆளரி – நரசிங்கமாகிய விஸ்ணு) போன்று நல்லனவே செய்யும். இதனால் சிவனடியார்க்கும் மிக நல்லனவே செய்யும் என்பது திருஞானசம்பந்தரின் திருவாக்காகிறது.

## திருக்கோளறு பதிகம் 07



செப்பிளமுலைநன் மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும்முடி மேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான் வந்து நலியா
அப்படிநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பொழிப்பு : செப்புப் போன்ற இள முலை நன் மங்கையான உமையை இடப் பாகமாகக் கொண்டு இடபவாகனத்தில் எழுந்தருளி அடைக்கலமாகத் தன்னை அடைந்த இளம் பிறையையும் கங்கையையும் முடியின் மீது சூடி என் உள்ளம் புகுந்ததினால் சூடு,

குளிர் , வாதம் , மிகுந்த பித்தம் , சளிநோய்கள் என்பனவற்றைத் தரும் வாத பித்த சிலேத்தும நாடிகள் எமது வினைக்கேற்ப செயற்பட்டு துன்பம் தராது சிவனுக்காகச் சரிவரச் செயற்பட்டு நல்லனவே நல்லனவே செய்யும் அதனால் அவனடியார்க்கும் நல்லனவே நல்லனவே செய்யும்.

**விளக்கவுரை** : செப்பு இள முலை நன் மங்கை என இறைவி என்றும் மாறா இளமையுடனிருப்பதையும் அவளை இடப்பாகத்தில் கொண்ட இறைவனும் விடையேறு செல்வனாய் என்றும் இளமையுடனிருப்பதும் பாடும் திருஞானசம்பந்தர் இறைவன் சூடிய மதியையும் ஒப்பிள மதி என வளர்பிறை எனக் கூறி ஒப்பிளமதியும் என உம்மை விகுதி கொண்டு முடித்து அந்த இளமை குதித்து ஓடும் கங்கைக்கும் உண்டெனக் காட்டியுள்ளார்.

இவ்வாறாக இறைவனுடன் தொடர்புடையதாக உள்ள இளமையின் அழகும் எழிலும் நினைவுறுத்தும் திருஞானசம்பந்தர் அந்த இளமையை மாற்றுகின்ற முதுமையை நோயைத் தருகின்ற சூடு, குளிர் , வாதம் , மிகுந்த பித்தம் , சளிநோய்கள் என்பனவற்றைத் தரும் வாத பித்த சிலேத்தும நாடிகள் எமது வினைக்கேற்ப செயற்பட்டு துன்பம் தராது சிவனுக்காகச் சரிவரச் செயற்பட்டு நல்லனவே நல்லனவே செய்யும் என்கிறார். இதன் வழி நம்வினைப்பயனாக வரும் வருத்தங்களும் நோய்களும் கூட இறைநிழலடி நிற்கையில் அதன் தாக்கத்தால் நாம் துவளாது இறைவன் தாங்கிடுவான் என்னும் நம்பிக்கையைத் திருஞானசம்பந்தர் தருகிறார்.

தமிழரின் சித்த வைத்திய முறையில் உடலிலுள்ள வாதம் பித்தம் சிலேத்துமம் என்பனவற்றில் ஏற்படும் அதிகரிப்புகள் அல்லது குறைச்சல்களே நோயாக மாறுகிறதென்கிற கருத்துண்டு.

இந்த வாத பித்த சிலேத்துமம் நம் உடலிலுள்ள பத்துக்காற்றுக்கள் (உதானன்,பிராணன், அபானன், சமானன் , வியானன் , நாகன் , கூர்மன் , கிருகரன் , தேவதத்தன் ,தனஞ்சயன் என்னும் பத்து வாயுக்கள்) வழி உடல் இயக்கப்படுகையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பவே உடலில் கூடிக்குறையும் அல்லது சமநிலையில் இருக்கும். இவற்றுக்கும் நாள் கோள்களுக்கும் தொடர்புண்டு.

அண்டத்தில் உள்ளவையே பிண்டத்தில் ( உடலில்) உள்ளன என்பது எம் முன்னோர் அனுபவ மொழி. இதனால் ஐம்பூதங்களாலான நமது உடம்பில் நாள் கோள் மாற்றங்கள் அண்டத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள் தாக்கங்களை விளைவிக்கும். இதனாலேயே சோதிடம் பார்த்து வைத்தியம் செய்யும் மரபு தோன்றியது. யாழ்ப்பாண அரச காலத் தமிழீழத்தில் சோதிட நூல்களும் வைத்திய நூல்களுமே தமிழீழ இலக்கியத்தின் தொடக்கமாக அமைவதைக் காணலாம். தமிழீழ இலக்கிய வரலாறு சங்ககாலத்துப் பூதன்தேவனாருடன் தொடங்குகிறது எனப் பேசப்பட்டாலும் இலங்கையில் முழுதாகக் கிடைத்த முதல் தமிழ் இலக்கிய நூலாக 1310ல் 4ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் தேனுவரைப் பெருமாள் என்று அழைக்கப்பட்ட சிங்களவரான பண்டித போசராசன் இயற்றிய சரசோதி மாலை என்னும் சோதிட நூலே காணப்படுகிறது. இதற்கு அடுத்ததாக செகராசசேகரனின் ஆதரவில் சோமசன்மா இயற்றிய செகராசசேகரமாலை அமைகிறது. தொடர்ந்து வந்த செகராசசேகரம் பரராசசேகரம் என்னும் நூல்கள் வைத்திய நூல்கள். எனவே யாழ்ப்பாண அரசில் வைத்தியமும் சோதிடமும் இரு கண்களாகப் போற்றப்பட்டமை இதன் வழியாகத் தெளிவாகிறது. .இவ்வாறாக நாள்களுக்கும் கோள்களுக்கும் உடல் உளத்தின் மேலுள்ள தாக்கம் சித்த வைத்தியத்துறையில் முக்கியத்துவப் படுத்தப்பட்டமையே சோதிடசாத்திரங்கள் சாதாரண மக்கள் மத்தியில் செல்வாக்குடன் விளங்கியதற்கு காரணமுமாகிறது. ஆனால் திருஞானசம்பந்தர் இந்த சோதிடத்தின் சாத்திரத்தின் மேலான மக்களின் தேவை அவற்றுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து இறைநம்பிக்கைக்குச் சவாலாக மாறுவதைக் கண்டித்தார். இதனாலேயே திருக்கோளறு பதிகத்தைப் பாடி இறைவன் நாள்களின் மேலும் கோள்களின் மேலும் ஆட்சியுடையவன் அவன் மாட்சிக்கு முன்னால் இவைகளின் ஆட்சி வலுவிழக்கும் என்பதைத் தெளிவுபடுத்தினார்.



வேல்பட விழிசெய்து அன்று விடை மேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

**பொழிப்பு** : மன்மதன் அழிவுற நெற்றிக்கண்ணை அன்று திறந்தவனே விடை மேல் உமையவளுடன் ஒளிர்மதியும் வன்னி கொன்றை மலர்களும் சூடி வந்தென் உள்ளம் புகுந்தவன் அதனால் ஏழ்கடல் சூழ் இலங்கையரசன் இராவணன் தன்னோடும் துன்பமானது வந்து வருத்தாது. ஆழ்கடலும் நல்ல நல்லனவே சிவனுக்காகச் செய்யும். ஆதலால் சிவனடியார்க்கும் மிக நல்லனவே செய்யும்.

**விளக்கவுரை** : இறைவன் திருக்குறுக்கையில் ஞான நிட்டையில் அமர்ந்ததினால் இயக்கம் எல்லாம் நின்று உலகை இருள் கவ்விய நேரத்தில் தேவர்கள் சிவனின் நிட்டையைக் கலைப்பதற்கு மன்மதனிடம் காம உணர்வை ஏற்படுத்தும் மலர் அன்பை சிவனின் மேல் ஏவுமாறு வேண்ட அவனும் செலுத்தினான். இதனால் சினந்து விழிப்புற்ற சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை எரித்துச் சாம்பலாக்கினார். இதனால் உலகு வசந்தத்தை இழந்து காதல் உணர்வு குன்றி வருந்தியது. படைப்புக்கள் நின்று போகும் பேரபாயம் தோன்றியது. அந்நேரம் மன்மதனின் மனைவியாகிய ரதியும் சிவனிடத்தில் தன் கணவனைத் தந்தருளுமாறு தவமிருந்தாள். அவளுக்கு இரங்கிய சிவன் அவளுக்கு மட்டும் தெரியும் வகையில் மன்மதன் உயிர்பெற்றெழ அருள்செய்தார். இதனால் மன்மதனுக்கு அநங்கன் (அங்கமில்லாதவன்) என்ற பெயர் வழங்குகிறது. மன்மதனை எரித்த இறைவனின் திருக்கோலம் காமாரி என்னும் 19வது சிவமூர்த்தமாகப் போற்றப்பட்டு வருகிறது. இக்கதையினைக் கூறுவதன் மூலம் திருஞானசம்பந்தர் தனக்கு அளிக்கப்பட்ட பதவிநிலையைப் பயன்படுத்தி இறைவன் மேலேயே மலர்க்கணை தொடுக்க முனைந்த மன்மதன் எரிக்கப்பட்ட சம்பவத்தை முதலில் கூறுகிறார். இதன் வழி பதவிகளை அதிகாரத்தை பயன்படுத்துவதில் நான் என்னும் அகங்காரத்தடன் செயற்படுத்தாது அவதானமாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

அடுத்து இப்பாடலில் திருஞானசம்பந்தரின் திருப்பதிகப் பாடல்களின் பொதுப்பண்புக்கு ஏற்ப இராவணனைக் குறிப்பிடுகிறார். இராவணன் சிவபக்தனாக அளப்பரிய வரங்களைப்

பெற்று அவற்றைத் தன் அகங்கார மமகாரங்களை அடக்குவதற்குப் பயன்படுத்தாது வளர்ப்பதற்குப் பயன்படுத்தியதால் முக்கோடி வாழ்நாளும் பெருவாழ்வும் வீரமும் இழந்தமையைச் சுட்டிக்காட்டி சிவபக்தர்களுக்கு தவப்பயனை அருட்பயனாக்கி வாழ அழைக்கும் அழைப்பாக அமைவது திருஞானசம்பந்தர் பதிகங்களில் வரும் 8வது பாடல்.

" ஏழ் கடல் சூழ் இலங்கை அரையன்றன்னோடும் இடரான வந்து நலியா" என்கிறார். ஏழ் கடல் சூழ் இராவணன் தன்னோடும் தடைகள் வந்து துன்பம் தரா என்பது சம்பந்தர் திரு மொழி. அலை எழுந்து மோதும் கடல்களால் சூழப்பட்ட இலங்கையரசன் இராவணன் தன்னோடும் தடைகள் வந்து துன்பங்கள் நேரா என இராவணன் இறந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் பின் வாழ்ந்த திருஞானசம்பந்தர் நிகழ்காலத்தில் பாடியுள்ளமை சிந்தனைக்குரிய ஒன்றாக அமைகிறது.

திருஞானசம்பந்தர் 3ம் திருமுறையில் திருராமேச்சுரத்தின் மேல் பாடிய முதலாவது பதிகத்தில்

சனிபுதன் ஞாயிறு வெள்ளிதிங் கட்பல தீயன
முனிவது செய்துகந் தானைவென் றவ்வினை மூடிட
இனியருள் நல்கிடு என்று அண்ணல் செய்தஇரா மேச்சுரம்
பனிமதி சூடிநின்று ஆடவல்ல பரமேட்டியே

எனப்பாடிய பாடலின் பொருளை எடுத்து நோக்குவது இராவணனால் தீங்கு நேராதென நிகழ்காலத்தில் சம்பந்தர் திருக்கோளறு பதிகத்தில் பாடியதன் தன்மையை விளங்க உதவும்.

" தனக்குத் தீங்குகள் விளைக்கக் கூடிய சனி புதன் ஞாயிறு வெள்ளி திங்கள் குரு செவ்வாய் ராகு கேது ஆகியவற்றைச் சிறையிலிட்டு தனக்கு தீங்குவராதென மகிழ்ந்திருந்த இராவணனை அவன் செய்த அந்தத் தீவினை அழியும் படி அழித்திட்டதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஸத்தை நீக்கி அருள் செய்திடுமாறு இராமனால் அமைக்கப்பட்ட சிவலிங்கங்களைக் கொண்ட இராமேசுவர சிவாலயத்தில் குளிர்ந்த வெண்ணிலவைச் சூடி நின்று ஆட வல்ல முழுமுதற் கடவுளே" எனப்பாடுகிறார் திருஞானசம்பந்தர். இதன் வழி சிவனின் முழுமுதற்கடவுள் தன்மை வெளிப்படுத்தப்பட்டது.

சிவபக்தனாக இருப்பினும் கொடுக்கப்பட்ட அருளை உரிய முறையில் பயன்படுத்தாது தன்னலத்திற்காகப் பயன்படுத்திய இராவணன் வினைப்பயனை விதிப்படி நுகர்விக்கும் நவக்கிரகங்களைச் சிறைப்படுத்துவதற்கு தன் ஆற்றலைப் பயன்படுத்துகிறான். இதன் வழி தனக்கு அவை தீங்கு செய்யாது தடுக்கலாம் என நம்புகின்றான். ஆனால் காத்தல் கடவுளாகிய திருமால் முறைப்படி எல்லாம் நடத்தல் வேண்டி இராவணனை வதம் செய்கையில் சிவாஸ்திரங்களால் இராவணனைக் காக்க இயலாது போகிறது. ஆயினும் காத்தல் கடவுளாகிய இராமனும் தான் சிவபக்தனைக் கொன்றதினால் ஏற்பட்ட முறைமை தவறை மன்னிக்குமாறு இராமேச்சுரத்தில் சிவலிங்கப்பிரதிஸ்டை செய்து பிரம்மஹத்தி தோஸத்திலிருந்து முழுமுதற் கடவுளாகிய சிவனின் துணையால் விடுபடுகிறார்.

இந்நிலையில் திருக்கோளறு பதிகத்தில் இராவணன் தன்னோடும் தடைகள் வந்து துன்பம் தரா எனப் பாடுவதன் மூலம் எம்மனதில் உள்ள இராஜசம் என்னும் அரக்கத்தனத்தால் இராவணத்தன்மையால் விதிப்படி நடத்துவனவற்றை தடுத்திடலாம் அடைத்திடலாம் என்ற எண்ணத்தில் செயற்படுவதால் அகங்காரம் கொண்டு திருவருள் செயற்படுவதற்குத் தடைகளை ஏற்படுத்தாமல் உள்ளத்தில் உள்ள சிவனருள் செய்வதால் அவ்வழி வரக்கூடிய துன்பங்களும் கூடவே ஆழ்கடல் போன்ற இயற்கைகளால் வரக்கூடிய தீங்குகளாலும் துன்பங்கள் நேராது நல்லனவற்றையே அனுபவிப்போம் என்பது திருஞானசம்பந்தரின் நுட்பமான விளக்கமாக அமைகிறது.




பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனு மாலுமறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பொழிப்பு : பல்வேறு வேடங்களாக பார்வதி பாகனாகப் பசுவின் மேல் தோன்றும் எங்கள் இறைவன் கங்கையையும் எருக்கம் மலரையும் முடிமேல் அணிந்து என் உள்ளம் புகுந்தான். அதனால் மலர்மிசை எழுந்தருளும் பிரம்மாவும் திருமாலும் மறைகளும் தேவர்களும் வரக்கூடிய காலங்கள் பலவும் அலைகடலும் நிலைத்த உயர்ந்த மேருமலையும் சிவனுக்காக நல்லனவே நல்லனவே செய்வதால் சிவனடியார்க்கு அவை மிகச்சிறப்புடையனவாகவே அமையும்.

விளக்கவுரை : திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களில் ஒன்பதாவது பாடல் பிரம்மாவும் திருமாலும் அடிமுடி தேடிய பின்னணிகளை விளக்கி சிவனின் முழுமுதற்கடவுள் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைவது வழமை. பார்வதியாக சக்தியை இங்கு கூறுவதால் மலையத்துவன் மகளாகச் சக்தி அவதாரம் எடுத்திருந்த நிலை நினைவு கூறப்படுகிறது. திருமாலும் அவதாரம் எடுக்கும் பண்பினர். பிறந்து இறப்பன முழுமுதற் கடவுளாகா என்பது சைவசித்தாந்தக் கொள்கை. மேலும் இறைவனின் செயலாற்றலாம் சக்தியிலிருந்தே படைத்தல் கடவுளாம் பிரம்மாவும் காத்தல் கடவுளாம் திருமாலும் அழித்தல் கடவுளாம் உருத்திரனும் தோன்றினரென்பதும் சித்தாந்தம்.

ஓங்காரி என்பாள் அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தையுடையாள்
ஆங்காரி ஆகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிது இருந்தாளே

தாழம் பூ நறுமண மலரானாலும் பிரம்மனுக்காக அடிமுடி தேடுகையில் பொய் சொல்லிப் பூசைக்கு சேர்க்கப்படக் கூடாதென சிவனால் தண்டனை பெற எருக்கம் பூ சுடலை மலரானாலும் இறைவனால் ஏற்கப்பட்டு சுந்தரத்திருமேனியில் இடம்பெறும் தன்மையை விளக்கவே எருக்கம் பூ இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ளது.



கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

**பொழிப்புரை** : மலர்ந்த மலர்க்கொத்துக்களை கூந்தலில் கொண்ட உமையவளுடன் அர்ச்சுனனுக்கு பாசுபதம் வழங்குவதற்காக வேடவடிவு கொண்ட சிவன் ஊமத்தம் பூவும் திங்களும் நாகமும் முடிமேல் சூடி என் உள்ளம் புகுந்தமையால் ( மதுரையில் போதிமங்கைக்கு அருகில்) புத்தரோடும் சமணரோடும் வாதில் அண்ணலே அவர்களைத் தன்வழியாக அழிப்பிப்பான். அவன் திருநீறே தெளிவும் உறுதியும் தரும். மேலும் நாளும் கோளும் சிவனுக்காக நல்லனவே மிக நல்லனவே செய்யும் இதனால் சிவனடியார்க்கும் அவை நல்லனவேயாகும்.

**விளக்கவுரை** : திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களில் 10வது பாடல் புத்த சமணர்களின் போலித்தனங்களைத் தோலுரித்துக் காட்டும் தன்மையினதாக அமைவது வழமை. அந்த வழமைக்கு அமைய திருக்கோளறு பதிகத்திலும் 10வது பாடல் புத்த சமணர்களை வாதத்தில் வெல்வதற்கான நம்பிக்கையின் அடித்தளத்தை உள்ளத்தில் அமைக்கிறது.


மலர்ந்த மலர்க்கொத்தைக் கூந்தலில் கொண்டவளை என்பதால் இறைவியை மட்டுமல்ல சமணர்களால் ஒதுக்கப்படும் புத்தர்களால் வெறுக்கப்படும் பெண்ணை திருஞானசம்பதர் உயர்நிலைப்படுத்துகிறார். அடுத்து அர்ச்சுனனுக்குச் சிவன் வேடவடிவம் கொண்டு பாசுபதம் அருளிய சம்பவத்தைக் கூறி புத்தருக்கும் சமணருக்கும் எதிரான கருத்துநிலைப் போரிலும் சிவனருள் தோன்றாத்துணையாக என்றும் பொன்றாத் துணையாகக்கிட்டும் என்கிற நம்பிக்கையை ஊட்டுகிறார்.

இறைவன் உன்மத்தம் பூவையும் சந்திரனையும் கங்கையையும் அணிந்துள்ள திருக்கோலத்தை சம்பந்தர் அடுத்ததாகப் பாடல் மூலம் மனக்கண்ணில் இருத்துகிறார். உன்மத்தம் பூ மயக்கத்தைத் தரும் பூ இதனை இறைவன் அணிந்துள்ளதாகக் கூறுவதன் மூலம் எமது மயக்கங்கள் எல்லாவற்றையும் தாங்கி மாற்றும் ஆற்றல் சிவத்திற்கே உண்டென உறுதி செய்கிறார்.

முடியமர் மதியும் நாகமும் இறைவனின் அடைக்கலம் அளிக்கும் தன்மையையும் ஆணவத்தை ஒடுக்கும் இயல்பையும் விளக்குகின்றன. இத்தகைய தன்மைகள் உள்ள இறைவனே உள்ளத்தில் எழுந்தருளியிருப்பதால் புத்தரோடும் சமணரோடும். வாதத்தில் அவனே அவர்களை அழிவிப்பான் என்பதன் மூலம் வாதப்போருக்குப் புதுப்பலத்தை வெளிப்படுத்துகிறார்.

உள்ளத்து இறைவன் இருப்பதன் புற அடையாளமாகிய திருநீறே வாதத்திற்கான செம்மையை திடத்தை தந்திடும் என்பது சம்பந்தரின் நம்பிக்கை மொழியாகிறது. மேலும் உள்ளத்துறைச் சிவத்திற்கு எதிராக நாளும் கிரகமும் செயற்படாது நல்லனவே நல்லனவே செய்வர். அதனால் சிவனடியாருக்கும் அவை மிக நல்லனவே செய்யும் என்பது சம்பந்தர் அருள்வாக்காக அமைகிறது.

## திருக்கோளறு பதிகம் 11



"தேனமர் பொழி கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
        வளம் செம்பொன் எங்கும் திகழ
நான்முகம் ஆதியாய பிரமாபுரத்து
        மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
        நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
        அரசாள்வர் ஆணை நமதே"

பொழிப்பு : தேன் சிந்து மலர்கள் நிறைச் சோலைகளும் ஆலைகள் பெருக்கும் கரும்பும் செந்நெல் நெருங்கி வளர்தலும் மண்ணில் செம்பொன் பெருக்கமும் எங்கும் திகழ நான்முகனால் ஆதியில் வழிபடப்பெற்றதால் பிரம்மாபுரம் எனப் பெயர் கொண்ட சீகாழியின் மறைஞானத்தில் ஞானியென ஞாலம் புகழ் முனிவனாகிய திருஞானசம்பந்தராகிய நான் விதியால் தானும் துன்பத்தைத் தரக்கூடிய நாளும் கோளும் அடியவர்களுக்கு துன்பமளிக்காதவாறு செய்த இந்த உரையினை சொல்மாலையாகப்பாடி இறைவனுக்குச் சாத்தும் அடியார்கள் விண்ணிலும் அரசாளும் பேற்றினைப் பெறுவர் என்பது எனது ஆணை.

**விளக்கவுரை** : கும்பிட்ட குலதெய்வம் துணை செய்யாதென்று அம்பிட்ட தெய்வங்களைத் தேடிஓடியும் சோதிட சாத்திரங்களை நாடி வாடியும் தவிக்கின்ற தமிழர்க்கு தமிழ் வல்ல சம்பந்தர் இறையருளால் இட்ட ஆணை நாளையும் கோளையும் கண்டு கலங்காதீர். நாளும் கோளும் எமை ஆளும் இறைவனின் ஆணைக்கு ஆட்பட்டே இயங்குவன. ஆதலால் இறைவனே நெஞ்சத்திருக்க இதனை உணராது உள்ளங் கலங்காதீர் என்பதே தமிழ் ஞான சம்பந்தன் தரு மொழியாக அமைகிறது.

திருஞானசம்பந்தர் தன்னுடைய திருப்பதிகங்கள் 385 (முன்னர் 383 பதிதாகக் கிடைத்தவை 2) லும் நான்கு திருப்பதிகங்களை மட்டுமே இது நமதாணை எனப்பாடி ஆணையிடுகிறார். திருக்கோளறு திருப்பதிகமும் அந்த நான்கினுள் ஒன்றாக உள்ளது.

திருக்கோளறு பதிகத்தின் 11 வது பாடலாகிய இந்த இறுதிப்பாடலில் தான் திருவவதாரம் செய்த பிரம்மாபுரத்தின் அழகையும் செழிப்பையும் பாடி அந்த அழகும் செழிப்பும் ஆண்டவன் கருணையில் பிறந்த இயற்கையின் கொடை என்பதனை வலியுறுத்துவதையும் காணலாம். இதன்வழி மொழிப்பற்றை மட்டுமல்ல மண்பற்றையும் உரிய முறையில் விளக்கி அதே வேளையில் எப்பற்றும் இறைபற்று என்னும் அப்பற்றுடன் இணையும் பொழுதே ஆன்மா தன் பற்றை விட்டு இறைபாதத்தில் தாடலையாக அமைதியுற்று பேரானந்தப் பெருநிலையை நிரந்தரமாகப் பெறும் என்பதே திருக்கோளறு பதிகம் தரும் செய்தி. இதனாலேயே இந்த உரையினை சொல்மாலையாகப்பாடி இறைவனுக்குச் சாத்தும் அடியார்கள் விண்ணிலும் அரசாளும் பேற்றினைப் பெறுவர் என்பது எனது ஆணை எனத் திருஞானசம்பந்தப் பெருமான் இறுதியிலும் உறுதியுடன் ஆணையிட்டு கலைகள் கொண்டு ஆணவத்தைக் கலைத்துக் காலத்தை வென்று இறைகோலத்தில் இணைந்து இன்புற அழைக்கின்றார். எனவே திருக்கோளறு பதிகம் சோதிடக் கலையைக் கைவிடச் சொல்லவில்லை. மாறாக கலையைக் கலையாகவும் நிலையை நிலையாகவும் தெளிந்து வாழ வழிசெய்கிறது. கலையே என் வாழ்க்கையின் நிலை மாற்றினாய் என்னும் பொழுது அந்த நிலையாக இருப்பது இறைவனின் திருவடிகளாக அமைதல் வேண்டும் என்பதே திருக்கோளறு பதிகத்தின் இலக்கு. அவனில் பெரியது எதுவுமில்லை. காலமும் அவனில் ஒடுங்கும். இடமும் அவனில் அடங்கும். அனைத்தும் அவனில் அமைதியுறும்.

உசாத்துணை நூல்கள் :



1. இராமலிங்கம் அ. (2005), தெய்வச்சேக்கிழார், திருவாசக திருமந்திர அறக்கட்டளை.
2. கந்தசுவாமி சு. (2002), தென்னகத்திருக்கோயில்கள் தோற்றமும் வளர்ச்சியும், மணிமேகலைப்பிரசுரம்
3. சிவத்தம்பி கா. (2000), தமிழில் இலக்கிய வரலாறு, நியூசெஞ்சரி புக் ஹவுஸ்.
4. சிவத்தம்பி கா. (2001), தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், மக்கள் வெளியீடு.
5. நடராசன் பி. (2004), திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம், 1ம் 2ம் 3ம் பகுதிகள், உமாபதிப்பகம்.




திருச்சிற்றம்பலம்



# நிறைவுரை




விதிவலி வான்கோள்களும் நாளும் ஒருவருக்குத் தீங்கு செய்யும் நிலை இருப்பினும், துதிவலி இறைவனை மனதில் தாங்கும் மதிவலி கொண்டார்க்கு, அவர் உள்ளத்துறைவது இறைவனாகிய சிவனே என்பதினால் நாள்களாலும் கோள்களாலும் எந்தத் துன்பமும் செய்ய இயலாது என்கிற தன்நம்பிக்கையை ஊட்டுவதே திருக்கோளறு பதிகத்தின் நோக்காக உள்ளது.


இதனை முதலாவது பாடல் முதல் பத்தாவது பாடல்வரை திருஞானசம்பந்தப் பெருமான் மிக நுட்பமாக எடுத்துரைக்கின்றார். இறைவனின் அருட்திருவுருவினை மனதில் சொற்சித்திரமாக்குவதுடன் திருக்கோளறு பாடல் ஒவ்வொன்றையும் சம்பந்தப் பெருமான் தொடங்குகின்றார். . நடுவில் 'என் உளமே புகுந்ததனால்' என்னும் வரியினைக் கூறி இறைவனை அடியார் தாங்குகின்றார் என்பதனை வலியுறுத்துகின்றார். இறுதியில் அடியாரால் தாங்கப்பட்ட இறைவன் அடியாரைத் தாங்குவதால் நாள்களுக்கும் கோள்களுக்கும் சிவனடியார்கள் சிவனாகவே காட்சியளிப்பர் என்ற உண்மையை விளக்குகின்றார். இதனால் விதிப்படி நியதியின்படி ஒருவருக்குத் தீங்கினை விளைவிக்க வேண்டிய இயல்பினை நாளும் கோளும் கொண்டிருந்தாலும் அதன் விளைவு அவ்அடியார் உடன் ஒன்றாயும் உடனாயும் வேறாயும் உள்ள இறைவனுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அஞ்சி தீமை செய்வதை விடுத்து நல்லனவே செய்யும் என்பது திருஞானசம்பந்தர் அருள்வாக்காகிறது. இதனையே பாடலின் இறுதியில் "ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே" என்னும் வரியினால் திருஞானசம்பந்தர் பிரகடனப்படுத்துகின்றார். இறைவன் உயிரின் வினைகளுக்குப் பொறுப்பில்லை என்னும் உண்மையையும் அதேவேளை உள்ளத்து அன்பு என்னும் வலையால் அவனைச் சிக்கவைத்த அடியார் சிவமேயாகச் சிவோகம்பாவனை நிலையில் வாழ்கையில் சிவனடியார்களும் சிவனேயாக எவ்வுயிராலும் இயற்கையாலும் நோக்கப்படுவர் என்ற தெளிவினையும் திருஞானசம்பந்தர் வளர்க்கின்றார். இதன்வழி "அடியார்க்கும் அடியேன்" என இறைவன் சுந்தரர்க்குத் தன் திருவாய் மொழியால் அடி எடுத்துக் கொடுப்பதற்கு முன்னரே சம்பந்தர் திருமொழியால் இறைவன் அடியார்க்கு அடியாராக இலங்கும் தன்மை இயம்பப்படுகிறது. இதனையே இறைவெளிப்படுத்தல் என இறையியல்கள் கூறுகின்றன.

'தாங்குபவனும் தாங்கப்படுவனும்', 'கண்டு காட்டல்' என்னும் இரு தத்துவ மொழிகளினூடாக இதனைச் சைவசித்தாந்தம் விளக்கும். இறைவனை தன் மனதில் தாங்கும் விருப்பு உள்ள ஆன்மா முதலில் இறைவனின் திருவடிகளை நாளும் பொழுதும் தன்னில் தாங்கத்தொடங்குகிறது. அந்தத் திருவடியினால் தீண்டப்படும் ஆன்மா, காந்தத்தால் தீண்டப்பெற்ற இரும்பு காந்தத்தின் இயல்புகளைத் தன்னியல்பாக காந்தத்துடன் உள்ளவரை கொண்டிருத்தல் போல, இறைவனின் தன்மைகளைத் தன் தன்மையாக வெளிப்படுத்துகிறது. இதனால் அத்தகைய ஆன்மாக்களைக் காண்கையில் சீவனாக அல்லாது சிவனாகவே போற்றி வழிபடும் மரபு காணப்படுகிறது. இதனையே

நாளும்கோளும் செய்யும் என்பதினாலேயே அவற்றால் தீங்கினை செய்ய இயலாத நிலை வருகிறது என்பதே திருக்கோளறு பதிகத்தின் விளக்கமாகிறது.



அதே வேளை இறைவனைத் தாங்கும் ஆன்மாக்கள் இறைவனின் ஆணையாம் அறத்தையே தம் வாழ்க்கை முறையாகக் கொள்வர். மனம் மொழி மெய்களின் தூய்மையே அறம். இதனால் நல்லன செய்தலும் அல்லன தவிர்த்தலும் கொண்ட அறவாழ்வை வாழ்பவர்களுக்கு நன்மையையும் தீமையையும் ஒருங்கே நோக்கும் மனஇயல்பை இறைவன் தோற்றுவிக்கிறான். இதுவே இருவினை ஒப்பு என்னும் செயற்பாடாகி மும்மலங்களிலிருந்து விடுபடுவதற்கான இறைவனின் திருவருளாகிறது. இந்நிலையில் இறைவனால் ஆன்மா தாங்கப்படுகிறது. இதுவே தாங்குபவனாகவும் தாங்கப்படுபவனாகவும் இறைவன் உள்ளான் என்னும் கோட்பாடாகவும் அறத்தின் வடிவதாகிய விடைமேல் சிவசக்தி அமர்ந்துள்ளது என்னும் தோற்றக்காட்சியாகவும் மாறுகிறர். இந்நிலையில் சித்தம் சிவத்துடன் ஒன்றித்து ஆன்மா வாழ்வதால் இறைவனே தன் வாழ்வை நடாத்துகிறார் என்னும் தெளிவுக்குச் சிவோகம்பாவனை நிலைக்கு அம்மனிதன் செல்கிறான். இந்நிலையில் இறைவனே அவனுக்கு ஏற்படும் வாழ்வைத் தான் முதலில் கண்டு பின்னர் அவனுக்கு காட்டுகிறான் என்னும் உணர்வே 'கண்டுகாட்டல்' என்னும் தத்துவமாக விளக்கப்படுகிறது.



இந்த இருதத்துவங்களையும் இங்கு விளக்குவதற்கு காரணம் இறைவனை உள்ளத்தில் ஏற்று வாழும் உள்ள உறுதி கொண்டவரே அடியார் என்னும் சொல்லுக்கு விளக்கமாகி அப்பரின் 'மீளா அடிமை' என்னும் சொற்றொடரின் பொருளைத் தெளிவாக்க வல்லார் என்பதை எடுத்து விளக்குவதற்கே. இந்த நாம் இறைவனுக்கு மீளா அடிமை என்னும் உள்ள உணர்வினைக் கொண்டவர்களே இவ்வுலகில் வரக்கூடிய எந்தத் துன்பத்தையும்

துயரத்தையும் தாங்கும் உளவலிமை கொண்டு " நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்னும் உளஉறுதிப்பாட்டுடன் வாழ்வர். இந்த உறுதி மொழியைக் கூறிய அப்பரே சமணர்களுடன் வாதாட சம்பந்தரை மதுரைக்கு வரும்படி மதுரையின் அரசி மங்கையர்க்கரசியார் திருமறைக்காட்டில் அப்பருடன் இருந்த சம்பந்தருக்கு அழைப்பு விடுத்த பொழுது நாளுக்கும் கோளுக்கும் அஞ்சி சம்பந்தரைப் போக வேணடாம் எனத் தடுத்தார். அப்பர் சமணரின் கொடுமைகளின் உச்சக்கட்டத்தை நிலத்திலும் கடலிலும் அனுபவித்தமையின் எதிராலியாக அந்த அச்சமொழி எழுந்தது. அந்நேரத்தில் பிறந்தது தான் சம்பந்தரின் திருக்கோளறு பதிகம் என்னும் இந்த உறுதி மொழி. இதன் வழியாக எந்த ஒரு நல்ல இறையடியார்க்கும் கூட அச்சமும் தேவையும் தலைதூக்குகையில் மனம் அலைபாயும் அந்நேரம் இறைபலமே உள்ளப்பலமாக வேண்டும் என்பதைச் சம்பந்தர் நமக்குத் தெளிவாக்குகின்றார்.

இனி இன்றைய காலகட்டத்தில் திருக்கோளறு பதிகம் குறித்த ஒரு தேடல் ஏன் என்ற சிறிய விளக்கத்துடன் இந்நூலை நிறைவு செய்தல் நல்லது.

- இவ்வுலகில் நிகழும் இன்பதுன்பங்களுக்கு எல்லாம் நம் செயல்களே பொறுப்பு என்னும் உண்மையை மறந்து வினைகளுக்கோ விருப்புகளுக்கோ பொறுப்பற்ற பரம்பொருளை அதற்குப் பொறுப்பு என்று பழிதூற்றும் அறியாமையிலிருந்து விடுபட தமிழர்களின் ஆன்மீகத் தத்துவங்கள் குறித்த தெளிவை வளர்க்க திருக்கோளறு பதிகம் முக்கியமானதாகிறது.
- இறைவனை மனதில் ஏற்று உணர்ந்து இறையாணையாம் அறவழி வாழ்தல் மூலம் இறைவனின் திருவடிகளை உள்ளத்தில் தாங்குபவனே இறைவனுக்கு அடியவனாகி அடியார் என அழைக்கப்படத்தகுதி பெறுகிறான் என்பதை உணரத் திருக்கோளறு பதிக அறிவு அவசியமாகிறது.
- இவ்வாறு உள்ளத்தில் இறைவனைப் புக விட்டவர்களே நாளுக்கும் கோளுக்கும் மட்டுமல்ல எந்த அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் அஞ்சாது உண்மைக்குச் சாட்சி சொல்லி யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பகிர்வு உள்ளத்துடன் யாதும் ஊரே யாவரும் கேளிர்! என்ற மனிதநேயத்தை உலகில் வளர்ப்பர். இந்தத் தமிழ் விழுமியத்தைத் தமிழர் உணர்வதற்கும் அதன் வழி வாழ்வதற்கும் திருக்கோளறு பதிகப் படிப்புத் தேவை.
- இத்தகைய சிவன் வழி சீவபணி செய்யும் உள்ளங்களே தன்னல மறுப்பினைத் தன்னில் வளர்த்து மும்மலங்களிலிருந்து திருவருளால் விடுபட்டு இவ்வுலகிலேயே சிவோகம்பாவனை நிலையில் சிவானந்தப் பேரின்பத்தில் திளைத்து இறுதியில் சிவத்தில் தாள் தலையாக இணைந்து அமைதி பெறுவர் என்பதை விளங்க விளக்கத் திருக்கோளறு பதிகத்தின் அறிவும் இறையருளும் மிகமிக முக்கியம்.





**சூ.யோ. பற்றிமாகரன்** BA Special Diploma (Oxford) BSc MA (Politics of Democracy) PGDiploma (Housing)
ஊடகவியலாளர் - ஆசிரியர் - ஆய்வாளர்

திரு சூ.யோ. பற்றிமாகரன் அவர்கள் 34 ஆண்டுகால ஊடகவியல் அனுபவமும் 29 ஆண்டுகால ஆசிரிய அனுபவமும் உடைய புலம்பெயர் தமிழர்கள் போற்றும் உலகறிந்த ஆய்வாளராக உள்ளார். இவரின் சைவசித்தாந்த மற்றும் திருமுறை அறிவின் வெளிப்பாடாக இந்நூல் அமைந்துள்ளது.

"..........திருமுறைகளுக்குப் பொருள் சொல்லக்கூடாது என்ற ஒரு கூற்றும் உள்ளது. பதிஞானம் வாய்க்கப்பெற்ற அருளாளர்கள் பதிவாக்காக அருளிச்செய்த திருமுறைகளின் பொருளை பாசஞானத்தில் மயங்கி நிற்கும் சாமானியர், நூலறிவின் துணை கொண்டு காண முடியுமா என்பது சிந்திக்கத் தக்கது. அதே வேளை "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வச் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்" என்னும் மணிவாசகர் வாக்கும் சிந்திக்கத்தக்கது. அப்படியாயின் சொல்லிய பாட்டின் பொருளுணர வழி என்ன எனில், நான் எனது என்னும் தன்முனைப்பற்று என்செயலாவதியாதொன்றும் இல்லை எல்லாம் அவன் செயலே என்னும் உணர்வுடன் அவனருளாலே அவன்தாள் நினைய வல்லார் பொருளுணரவல்லார் என்பது சான்றோர் கண்ட வழியாகும். அவ்விதம் திருமுறைகளுக்குப் பொருள்விளக்கம் கூறப்புகும்போது அது சாத்திரம், தோத்திரம், புராணம் ஆகிய மூன்று நெறிகளுக்கும் முரண்படாது ஒத்தியலும் வகையில் அமைய வேண்டும் என்பது சான்றோர் கட்டளையாகும். இந்நூல் இக்கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்யப்பட்டுள்ளமை மகிழ்தற்குரியது. இந்நூலாசிரியரின் தன்னடக்கத்துடன் கூடிய கூற்று இதற்குச் சான்றாகும். "தூண்டியவன் அவன். நான் வெறும் கருவியே, இதனை எழுதுவது நானல்ல அவனே என்ற உணர்வே இந்நூலை எழுத வைத்தது" எனக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இவர் தன்முனைப்பற்றுப் பொருளறியும் தகுதிப்பாடுடையவர் என்பதை இது உணர்த்தும். பின்னால் அவரால் கண்டு காட்டப்படும் பொருட்சிறப்பு இதனை மெய்ப்பிக்கக் காணலாம். ........................இந்நூல் கிடைத்தற்கரிய பெருமையுடைத்து. சுருக்கமாகச் சொன்னால், இந்நூல் ஒரு சிவத்தமிழ்க் கருத்துக்களஞ்சியம் எனலாம். செவ்விய மொழிநடையும் ஆற்றொழுக்குப் போன்ற வசன அமைப்பும், பொருட்தெளிவும், கருத்துக்களின் வைப்புமுறையும் மிகச்சிறப்பாக அமைந்த நூல் இது. இதனைத்தாக்கார் பயன் கொண்டு உயர்வார்களாக. ஆசிரியர் பற்றிமாகரனின் நுண்மாண் நுழைபுலமும், திட்பநுட்பமாகச் சொல்லும் திறமும், சித்தாந்தத் தெளிவும் போற்றுதலுக்குரியன".

- கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை
(ஓய்வு நிலை அதிபர் S.L.P.S.1)
இளவாலை
11.12.2009